உளவிருப்பாய்வைத்தக்கிசந்திசார
வுரைக்குமிருவேளைபென்றவிதமாக
வளமுடனேயுட்கொள்ளவொருநாள்மாறல்
மயக்கும்விடாச்சுரவகைகளெல்லாம்போகும்
இளமுமன்போடிம்முறையையறிந்துசெய்தா
லெக்கலமுங்கைகூடுமுண்மைதானே. (கஉகூ)

## 130. வருசிகரமாத்திரை.

பச்சைக்கர்ப்பூரம்வெண்காரம்லிங்கம்
பகருகோரோசனையுஞ்சமனுக்கூட்டிப்

பக்ஷமுடனிஞ்சிச்சாற்றிரண்டுசேரயம்
பற்றியரைத்துழுந்தளவாக்குளிகைசெய்தே
மெச்சுதனப்பால்தேனைச்சமனாக்கூட்டி
விரும்பியதில்கலந்துணத்தாபசுரம்போகும்
பச்சையிஞ்சிச்சாறுதேன்கலந்தினாட்டப்
பழியானசீதசுரம்பறந்துபோமே. (௧௨௦)

வெட்டீர்விராகனெடையொன்றுந்தேனில்
விராகனொன்றுங்கலந்திந்தக்கலவைதன்னில்
முன்னுவன்றமாத்திரையிலரைபோவொன்றே
முக்கியமாயனுபானித்திச்சையோடு
நன்னீர்மையாகவுள்ளேசெல்லவுண்டால்
நவிலும்வருசிப்பிணிபால்வந்துதேகம்
மன்னியதோர்சுரந்திரும்பெரியோர்விண்ட
வளமானமுறையிதனைத்தெரிந்துசெய்யே. (௧௨௧)

## 131. அர்த்த நாரீசுர மாத்திரை.

சிலைகௌரியிலிங்கந்தாளம்பபிரேக
செந்நாரந்தாம்பிரபற்பங்கெந்திசூதம்
கொலைநாபிவாளமொடுதுருசுதுத்தம்
சூளிரதபற்பமல்லநுசெந்தூரம்
இலைமொருக்கின்விதைப்பருப்புமதுரமெல்லா
மேற்கவேவகைக்கொருவிராகன்கூட்டி.
நிலையாளமத்தையின்சாறதனைவிட்டு
நினைத்தொருநாளொருசாமவிதமாக. (௧௨௨)

தினையிரண்டுவரையரைத்துக்குன்றிபோலத்
திகழ்குளிகைசெய்துலர்த்திவெள்ளாட்டின்பால்



சினைவாகவிடறுதனைக்கம்பில்பீச்சி
சேர்மையுடனிதிற்கூட்டிப்புண்ணைக்கேளே
மனுவிடப்பக்கச்சுரந்தானின்றுபோகும்
வலக்காம்பின்பாலிலனுபானித்துண்ண
மனமருண்டவலப்பக்கச்சுரந்தான்போகும்
மண்டலத்திற்புதுமையிதுசெய்துபாரே. (௧௨௩)

## 132. தோஷ நிவாரணக்குளிகை.

ஜாதிக்காயிலவங்கமதுரங்கஸ்தூரி
தங்கவக்கிராகாரமரிசித்திப்பிலி
பேதிக்காச்சுக்குருந்திராக்கமுத்து
சூதமொடுபவளமாயுருவிவேரும்
ஓதிதன்வித்தவுரிவேரவுரிவித்து
முபர்கடுகுரோகணிநன்றாயின்னும்
மேதினியிலுபர்யாங்காரியந்தானும்
விள்வகைக்குவிராகனொன்றுமயின்றேகை. ()

சுட்டெரித்தசாம்பலிலேயிருவிராகன்
சுகப்பழச்சாற்றிட்டிரண்டுசாமமாட்டி
இட்டமுறுந்தூதுவளங்காயைப்போல
வெடுத்துருட்டிநிழலுலர்த்தித்தனப்பால்தன்னில்
இட்டவக்கிராகாரத்தையுரைத்துக்கொண்டு
சேர்ந்தவந்தக்குழம்பினில்மாத்திரையுரைத்துச்
சொட்டுதனப்பாலிலந்தக்கலவைதன்னைத்
தாய்மைபெறக்குழப்பிவைத்துக்கொண்டுநாவில்.

கடுகைபோன்றுக்கொருமுறையாத்தடவியிந்தக்
கணக்காகப்பத்துமுறைசெய்துவிட்டால்
பிடிபெரியதோஷத்தால்நாவருத்தல்
பிணிவறட்சிமுன்முனைத்தல்வாந்திவிக்கல்

ஆடாதகமரோசனையாதிய தாவிக்குச்
சொன்ன மூர்க்குணங்களெல்லாந்தொலைந்துநல்ல
குடிகெடுக்குநவதோஷமெல்லாந்தீரும்
குருபரனின்றிச்செய்முறைமையைத்தெரிந்துசெய்யே.

## 133. மிருதுவாதிக்குழம்பு.

நீர்தெளிக்குந்தேற்றான்கொட்டையைப்பன்
னீர்விட்டேயரைத்தகற்பூரம்விராகன்
பேர்பெறுமிலவங்கநாள்கால்விராகன்
பேசரிசித்திப்பிலிநாள்கால்விராகன்
சேர்பச்சைக்கற்பூரமொருவிராகன்
திகழ்ந்துமக்கிராகாரநாள்கால்விராகன்
சீர்பெறவேயிவற்றையெல்லாம்பொடித்துத்தேனைச்
சிறுகவார்த்திருசாமமரைத்துக்கொண்டே. (கஉஎ)

கொண்டிதிலேவிராகனரையெடுத்துத்தேனைக்
குலவுந்தவெடைசேர்த்துந்தனத்திப்பாலைப்
பண்ணிரைத்துவெடையேகூட்டியெல்லாம்
பக்குவமாக்கலந்துகொண்டுகாலைதான்
விண்டவொருநாழிகைக்கோர்முறையதாக
விரும்பியேநடவிபித்தப்படிபண்ணேரம்
மண்டலத்திற்செய்துவாசுகாத்திலுண்டாம்
வாந்திவிக்கல்சரவறட்சிதாகம்போமே. (கஉஅ)

## 134. கௌரிசிந்தாமணி மாத்திரை.

கொம்புப்பாகற்பழத்திலொருவிராகன்
கொண்டகௌரிதனைச்செலுத்திபெருமைச்சாண
வம்புறுபால்படிபொன்றைக்கலத்தில்விட்டு
வழுத்துகௌரிபொதிபழத்தைக்கிழியாக்கட்டி



யும்பருறத்தொங்கவிட்டேயெரித்துப்பாலு
முடன்சுண்டக்காய்ச்சியபின்கௌரிதன்னை
நம்பியெடுத்துக்கழுவியுலர்த்தியம்மி
நன்றாகப்பொடித்தரைத்தேயிஞ்சிச்சாற்றை. ()

சாமமொன்றரைத்துவிட்டேயரைத்துருண்டை
சாற்றுகடுகளவுசெய்துநிழலுலர்த்தி
நேமமுடனரையென்றுதனப்பாலிஞ்சி
நேர்சாறுபனைவெல்லமிவற்றிலொன்றில்
போமடர்நோயென்றருபாவித்துட்கொள்ளப்
பொல்லாதசுரங்களெல்லாகில்லாதோடும்
ஆகிதற்குப்புளிதவிர்த்துநக்கநோய்பெறு
யாமோர்ச்சாதம்யெளிதுமடுத்துக்கூட்டே. (கஙo)

## வாழ்த்து

வெண்பா.

வயித்தியசிகாமணியைவாசிப்போர்கேட்போர்
நயத்துடனேயிம்முறையிறுதப்—பயந்துடனே
நன்றறிந்துசெய்வோர்கள்நன்மருந்தையுண்போர்கள்
என்றென்றும்வாழிவாழி.

வைத்திய சிகாமணிச் செய்யுள்
முற்றுப் பெற்றது.

இராஜரிஷி

# வீரமாமுனிமகானுபாவர்

அருளிச்செய்த

# வைத்தியசிகாமணி·

## முறைவிளக்கம்.

### முன்னுரை.

கனவான்களே! இவ்வைத்திய சிகாமணியின் செய்யுட்களாவர்க்கும் தெரியக்கூடிய வெள்ளைப்பாக்களினும் முறைகளின் செய்பாகம் வைபாகம் எடைத்திட்டம் பத்தியபாவனைகளை எல்லோருக்குந்தெரிந்து செய்வது அருமையாதலால் அவ்வகைச்சங்கடமின்றி எல்லோருமறிந்து செய்யும்பொருட்டாக நம் வழக்கப்படியே இம்முறைவிளக்கத்தை எழுதிச்சேர்த்தனம். இது வைத்தியத்தை விரும்பும் ஒவ்வொருவருக்கும் மிகப்பிரயோசனமாகுமென்பது திண்ணம். ஆதலால் நேயர்கள் இதனை அங்கீகரித்து எம்மைக் கனப்படுத்துவார்களென்றே நினைக்கிறோம்.

### நூல்.

### 78. அஜீரண சஞ்சீவி.

கருஞ்சீரகம் ஒருபங்கு, சோம்பு ஒருபங்கு. இரண்டையும் ஒரு பீங்கான் பாத்திரத்திற்போட்டு அவை ஆழ்ந்து கிடக்கும்படியாகக் கெந்தகத் திராவகத்தை விட்டு அதன் கொதிப்பு அடங்கின பிறகு அப்படியே எடுத்து ஒரு பீங்கான்சாரக்குள்ள சீஷாவிற்போட்டுப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும்.



பிரமாணம்:—வீராகனெடை-வ-சாப்பிடவும்.

உபயோகம்:—அஜீரணம், வாயு, மந்தம் முதலியவைகள் நீங்கி ஜீரணசக்தி அதிகப்படும். வயிற்றிலுள்ள கபக்கட்டு, ஏப்பம் முதலிய இரைப்பை சம்பந்தரோகங்கள் தீரும். இம்முறைகளில் இது அதிக சுலபமானதும் வைத்திய இரகசிய முறையுமாம்.

### 79. மலபந்த நிவாரணி.

ஆமணக்கெண்ணெய் வீராகனெடை-சு௨, கிளிசரின் வீராகனெடை-௨வ, வாதுமையெண்ணெய் வீராகனெடை-௧, பெப்பர்மெண்டுத்தைலம் துளி-௫. இவைகளை மிஸ்ரமித்துப்பானம் செய்யவேணடும். இதனால் வயிற்றிலுள்ள கல்மிஷங்களெல்லாம் நீங்கும். இதனை இடையிடையே உபயோகித்துவந்தால் மலபந்தத்தினால் உண்டாகும் எல்லாவியாதிகளும் நீங்கி மலம் சிரயப்பட்டுப்போகும். இரைப்பை சம்பந்தமான வியாதிகளுக்கு இது ஒரு சஞ்சீவி; இதுவும் வைத்திய இரகசியமுறைகளில் உள்ளது.

### 80. மூலமுளை சஞ்சீவி.

அதிககசப்பான புகையிலையைத் தூள்செய்து தண்ணீர்வார்த்து மைபோலரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள்செய்து வைத்துக்கொள்ளவும். பிரதிதினமும் ஒவ்வொரு மாத்திரையையும் மூலமுளையின்மீது வைத்துக் கௌபீனத்தை இறுக்கிக்கட்டிக்கொள்ளவேண்டும். இராமுழுதும் அப்படியே வைத்துக்காலையில் அவிழ்த்தெறிந்துவிட்டு மலவிசர்க்கம் முதலியவைகளைச் செய்து இரண்டாவது மாத்திரையைவைத்துக் கௌபீனத்தைக் கட்டிக்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் வைத்

துக்கட்டிவந்தால் நான்கைந்து நாளையில் மூலமுளைகள் கரைந்து காணாமற்போய்விடும். மறுபடியும் உண்டாகாது. இது அற்பமானமுறையல்ல அனுபவத்தில் இதன் குணம் தெரியவரும்.

## 81. விஷசஞ்சீவி.

அதிககாரமான புகையிலை ஒருபங்கு, பனைவெல்லம் ஒருபங்கு. இரண்டையும் சேர்த்திடித்து ஒருமண்சட்டியில் வைத்து மேல்சாணக்கி மூடி இரண்டுசீலைமண்செய்து கவசத்தின் மூன்றுபங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின்பு எடுக்கக்கருகிப்போயிருக்கும். இதனை சீசாவில் பத்திரப்படுத்திக்கொள்ளவும். எவருக்காயினும் எந்தப்பாம்பு கடித்தபோதிலும்ஒரு டாங் (விராகனெடை.) மேற்படிமருந்தில்எடுத்துக்கல்வத்திலிட்டு ஜலம்வார்த்து மைபோலரைத்துக்கொஞ்சம்ஜலத்திற் கலக்கிக் குடிப்பாட்டிவிடவேண்டும். விஷம் இறங்கிப்போகும். இந்தச்சிகிச்சையானது விஷத்தினால் மாரடைப்பு உண்டாவதற்கு முன்புசெய்தால்தப்பாமல் குணமுண்டாகும். இதனால் நூற்றுக்கணக்கான விஷங்கடித்தவர்கள் பிழைத்திருக்கிறார்கள். பார்வைக்கு இது இலேசாயிருக்கிறதென்று இழிவாக எண்ணவேண்டாம்.

## 82. சுவாசகாச சஞ்சீவி.

சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் கிரேன் - ௧, பெல்லெடோனாகிரேன் ௨௪, அபினிகிரேன், ௨௰, எருக்கம்பால்கிரேன். ௪௮, இவைகளையெல்லாம் சேர்த்து ஒரு சாமநேரம் மைபோலாகிறவரையில் அரைத்துப்பனிரண்டு மாத்திரைகள்செய்து காலை, மத்தியானம், மாலை ஆகியமூன்று நேரங்களிலும் தினம் மூன்றுதடவை உட்கொள்ளவேண்டும். சிலருக்கு வாந்தியுண்டாகும். அதனால்பயப்படலாகாது. எவ்வளவு பலமான சுவாசமாயிருந்தபோதிலும் இரண்டுமணிநேரத்தில் குணமுண்டாகும். இதுமிகவும் அபூருபமானதும் கைவல்யமானதுமாம்.



## 83. கபாடபந்தன மாத்திரை.

வெற்றிலை, சுண்ணாம்பு, அபின், இம்மூன்றும் வகை-௧-க்குச் சமவெடை. இவற்றைக்கல்வத்தில் மைபோலரைத்துத் துவரைப்பிரமாணம்மாத்திரைகள்செய்து வைத்துக்கொள்ளவும். ௧-௧௨, மாத்திரைசாப்பிட்டால் சொற்பநாளைக்குள் எவ்வித மலப்போக்கும் நின்றுபோகும். அது எத்தனைவருஷம் சென்றதாயினும் சரியே; அனுபவத்தில் இதன்குணம் தெரியவரும்.

## 84. அம்மை விநோதம்.

குழந்தை பிறந்தவுடன் நாபிக்கொடியை அறுப்பது வழமை; அப்படி அறுத்தவுடன் குழந்தையைக் குப்புறக்கவிழ்த்துச் சற்றுநேரம் படுக்கவைத்தால் சில துளி இரத்தங்கள் வெளிப்படும். அப்படிப்புறப்பட்டபின்பு கொஞ்சம் நவச்சாரத்தைத் தூள்செய்து அதில் வைத்து ஊதிவிடவேண்டும். இவ்விதம் செய்வதால் அதன்வயது முழுவதும் அம்மைவியாதி வராது. இந்தவிஷயத்தில் இது ஒரு விநோதமானது.

## 85. பூரபஸ்பம்.

இரசகற்பூரம்விராகனெடை-௩௰, இதனை மெல்லியவஸ்திரத்தில் தளரமுடிந்துகொள்ளவேண்டும். ௧௭, பலம் எருக்கம்பாலை ஒரு மண்பாத்திரத்தில் வார்த்து மேற்

படி முடிச்சை அதிற்போட்டு அடுப்பேற்றி மெதுவாக எரித்துப் பாலெல்லாஞ்சென்றபின்பு எடுத்து முடிச்சிலுள்ள இரசகற்பூரத்தைக் கல்வத்திற்போட்டு கசு, பலம் வெங்காயச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்துக் கைவிடாமலரைத்துச் சாறெல்லாம் சுண்டினபின்பு சிறுமாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி நன்றாயுலர்ந்தபின்பு சிறு அகலில்வைத்து மேலகல்மூடிச் சீலைமண்செய்து நன்றாக உலர்த்தி நாற்பதுபலம் காட்டுவறட்டியிற் புடமிடவேண்டும். ஆறினபின்பு எடுத்தால் பற்பமாகியிருக்கும்.

பிரமாணம்:—ஒரு கடுகு எடை.

அனுபானம்:—வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைக் கிரந்திரோகங்கள், தீராத மேல்வாயுக்கள், சூலைகள் முதலிய கஷ்டரோகங்கள் தீரும். எத்தனை நாட்பட்ட வியாதியாயிருக்கினும் எட்டு நாளைக்குள் தீர்ந்துபோகும்.

பத்தியம்:—கோதுமை ரொட்டியும், நெய், வெண்ணெயும் ஆகும். உப்பு, புளி முதலியவைகளை நீக்கிக் கடும்பத்தியமாக இருக்கவேண்டும். வியாதி சௌக்கியமானபின்பு வழமைபோல் எல்லாவஸ்துக்களையும் உபயோகிக்கலாம்.

குறிப்பு.

இங்கிலீஷ் வைத்தியத்தில் உபயோகப்படுத்தப்படும் கெலோமல் என்னும் பூரபஸ்பத்திற்கும், இந்தப்பூரபஸ்பத்திற்கும்பெருத்தவித்தியாசமுண்டு; இந்தப் பூரபஸ்பத்தினால் வாய்பிடிக்காது. இரணமுண்டாகாது, எத்தனை நாள் உபயோகித்தபோதிலும் குடல்வே



க்காடு அழலை முதலியவைகள் உண்டாகா. ஆண், பெண், பாலர் விருத்தர் முதலிய எல்லோருக்கும்உபயோகிக்கலாம். இது ஒரு அபுரூபமுறை.

81. மகாவீரிய இலிங்கசெந்தூரம்.

உலாந்தாலிங்கம் விராகனெடை-௩௰-முதல்-௯௰ வரையில் இது ஒரேகட்டியாகஇருக்கவேண்டும். இதனை ஒரு மெல்லியவஸ்திரத்தில் முடிந்துகொள்ளவேண்டும். அந்த முடிச்சானது தளர்ச்சியாக இருக்கவேண்டியது. கசு-பலம் திராக்ஷைக்காடியைக் குறுகிய ஒரு மண்கலயத்தில் விட்டு மேற்படி முடிச்சைக்கயிற்றிற் கட்டி அதில் தொங்கவிடவேண்டும். அந்த முடிச்சானது காடியின் மத்தியிலிருக்கும்படியாகத் தொங்கவைக்கவேண்டும். அதாவது அந்தமுடிச்சுக்கு மேலுங்கீழும் காடி சமமாக இருக்கவேண்டியது. அடுப்பை மெதுவாக எரித்தும் வரவேண்டும். அதிகமாகக்கொதிவரவிடாமல் சிறுதீயாக எரிக்கவேண்டும். அதிகமாக எரித்தால் மிகவும் பொங்கிமேலெழும்பி சேதமாகிவிடும். ஆகையால் அதிக ஜாக்கிரதையுடன் எரிக்கவேண்டியது. காடியெல்லாம் சுண்டினபின்பு முடிச்சையெடுத்து அதிலுள்ள இலிங்கத்தையெடுத்துக்கொள்ளவும். வெண்ணிறமானதும் பருமனானதுமான ஒரு வெங்காயத்தைத் துளைத்து அதற்குள் இந்த இலிங்கக் கட்டியைச் செலுத்தித் துளைத்தெடுத்த தூளையே அதில் வைத்தடைத்து இலேசாக இரண்டு சீலைமண்செய்து கரிநெருப்பில்போட்டு விசிறிப்புரட்டிக்கொடுத்து வந்து கவசம் சிவந்தக்ஷணமேயெடுத்து ஆறவைத்துக் குளிர ஆறினபின்பு இலிங்கத்தையெடுத்து முன்போ

ன்ற ஒரு வெங்காயத்தைக்குடைந்து அதற்குட்செலுத்தி முன்போல் அந்தத்தாளையே வைத்தடைத்து முன்போல் இலகுவாகச் சீலைசெய்து முன்போல் கரிநெருப்பில் வைத்து வறுக்கவேண்டும். சிவந்த தக்ஷணமே எடுத்து ஆறவைத்துக் குளிர ஆறினபின்பு முன்போலவே வெங்காயத்திற்குள் வைத்துப்பாடப்படுத்தவேண்டும். இவ்விதமே நாற்பது வெங்காயத்தில் நாற்பது தடவை வறுத்தெடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு அந்த லிங்கத்தை யெடுத்துக்கல்வத்திலிட்டு க௨ விராகனெடை ஆண் ஆட்டின் தொடை எலும்பின் மூளையைச்சேர்த்து ௩, சாமநேரமரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாண மாத்திரைகள்செய்து கொள்ளவேண்டும். இந்த மூளையானது ஆண் ஆட்டின் மூளையாயிருக்கவேண்டியது. பெண் ஆடாயிருந்தால் மருந்து கெட்டுப்போகும். பிறகு மேற்படி மாத்திரைகளை மெல்லிய சல்லாத்துண்டில் முடிந்துகொள்ளவேண்டும். பெரியமண்பானையொன்று சம்பாதித்து வாய்வரையில் சீலைமண்செய்து உலர்த்திக்கொள்ளவேண்டும். பிறகு அதில் ஆறுபடி ஜலத்தைவிட்டு எழுபத்திரண்டுபலம் மசியும்படி கொத்தின ஆண் ஆட்டு இறைச்சியை மேற்படி ஜலத்திற்கரைத்து அதில் ஒருபலம் நவச்சாரத்தைப்பொடித்துப்போட்டுக் கலக்கிவிட்டுமேற்படிமாத்திரைகளின்முடிச்சைப்பானைக்குள் கிழிக்கட்டித் தொங்கவிடவேண்டும். ஆனால், அந்த முடிச்சானது பானைக்குள்ளிருக்கும் ஜலத்திற்குமேல்எட்டங்குலம் இருக்கும்படி உயரமாகத்தூக்கிக்கட்டவேண்டும்.ஏனெனில், ஒருவேளை ஜலம்பொங்கினாலும் அந்த முடிச்சில்படாமலிருக்கவேண்டியதற்காகவே. அப்படியொருவேளை பொங்கி முடிச்சில்



பட்டுவிட்டால் மருந்து பாழாய்ப்போகும். நமக்கு அவசியமானதெல்லாம் ஜலத்திலிருந்தெழும் ஆவிமாத்திரம் பட்டால் போதுமானது. இங்குவேண்டியதும் அவ்வளவுதான். ஆகையால் ஜலத்திற்குமேல் 8 அங்குலம் தூரத்திலிருக்கும்படி கட்டுவதுடன் தீயையும் மெதுவாக எரிக்கவேண்டியதெனத் தெரிந்திருக்கவேண்டும். இவ்விதம் அதிக புத்திக்கூர்மையுடனும் ஜாக்கிரதையுடனும் எரித்து ஜலமெல்லாம் சுண்டினதக்ஷணமே முடிச்சையெடுத்து ஆறவைத்தெடுத்துக் கொள்ளவேண்டும். மருந்தானது சிவந்தவருணமாக இருக்கும். பிறகு கல்வத்திலிட்டுப்பொடித்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரை அரிசியெடை.

அனுபானம்:—வெண்ணெய், திராக்ஷைப்பழம், அந்தந்த வியாதிகளுக்குத்தகுந்த லேகியங்கள், ஷர்பத்துகள் முதலியவைகளாம்.

உபயோகம்:—இது எல்லாவியாதிகளுக்கும் உபயோகப்படும்; ஆனால், அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்த அனுபானங்களில் உபயோகிக்கவேண்டும்; இன்னும் தாதுநஷ்டத்தை நீக்கி நரம்புகளின் துர்பலத்தைப்போக்கி நரம்புகளைப் பலப்படுத்தி, தேகதிடம், தேகபலம் முதலியவைகளை உண்டாக்கும். இந்த விஷயத்தில் இது சஞ்சீவிக்கொப்பானது. தேகத்தில் எறும்பு ஊருவதுபோலிருத்தல், கைகால் நடுக்கல், கைகால் உதறல் முதலிய நரம்புகளைப்பற்றிய எல்லா வியாதிகளும் தீரும். இருமல், ஈளை, சுவாசம், மந்தாரகாசம் முதலியகபரோகங்களெல்லாம் நீங்கும்.

பத்தியம்:—புளி, புளிப்புவஸ்துக்கள், மீன், கத்தரிக்காய், எண்ணெய், மிளகாய் ஆகியவைகள் ஆகா. பெண்ணை அறவே நீக்கவேண்டும். இது ஒருசிறந்த மருந்து. பிரபல வைத்தியர்கள்கையில் இது அவசியமிருக்கத்தக்கது.

### 87. மகாவீரிய இலிங்க மெழுகு.

மருதோன்றி விதைபலம்-௧௫, வாலுளுவை அரிசி பலம்-௧௪, சேராங்கொட்டைபலம்-௧௫, இம்மூன்றையும் ஒன்றாகக்கலந்து எருக்கம்பாலைத்தெளித்து கைப்புண்டாக்கி வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு பெரிய மண்தோண்டிவாங்கி அதை அரைவாசிமட்டம் மூன்று சீலைமண்செய்து உலர்த்தி அடிப்பாகத்தில் சிறுதுவாரங்கள் சல்லடையைப்போல செய்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற சரக்குகளை அதிற்போட்டுவாய்க்குச் சில்லிட்டுக் கெட்டியாகச்சீலைமண் செய்து உலர்த்திக் கொள்ளவேண்டும். பிறகு அந்தப்பாத்திரத்தை வைத்தால் அதைச்சுற்றிலும் நாலைந்து அங்குலம் இடமிருக்கும்படியாக ஒரு பள்ளந்தோண்டி அதன் நடுவில் ஒரு பீங்கான் பாத்திரம் கொள்ளும்படியாகிய சிறு பள்ளந் தோண்டி அதில் பீங்கான் கிண்ணத்தைவைத்துத்தோண்டியின் அடியிலுள்ள துவாரங்களெல்லாம் பீங்கான் கிண்ணத்திற்குள் வந்துவிடும்படியாக வைக்கவேண்டியது. பீங்கான்கிண்ணத்திற்கு வெளியில் ஒரு துவாரமுமிருக்கலாகாது. அப்படியிருந்தால் தைலம் வெளிப்பட்டுப்போகும். பீங்கான்கிண்ணத்தின் வாயானது தோண்டியுடன் பொருந்தியிருக்கும்படியாகவும், சந்தில்லாதிருக்கும்படியாகவும் சீலைமண்செய்து கொஞ்சம் மண்ணையும் தள்ளி ௫-சேர் ஆட்டுப்புழுக்கையைத்தோண்டியைச் சுற்றிலும்போட்டு நெருப்பிட்டால் இரண்டு நாள் வரையில் நெருப்பிருக்கும். பிறகு குளிர ஆறின பின்பு ஜாக்கிரதையுடன் பானையையெடுத்தால் கருப்பு வருணமுள்ள தைலமானது பீங்கான்கிண்ணத்தில் இறங்கியிருக்கும். இதனையெடுத்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.



உயர்ந்த ஜாதிலிங்கம் விராகனெடை-௫௰-முதல்-௱ வரையிலிருக்கலாம். ஆனால், ஒரே கட்டியாக இருக்கவேண்டும். இந்தக்கட்டியை மேற்படி தைலத்தில் நனைத்து அதன்மீது நான்கு ஊமத்தை யிலையைச்சுற்றி அதன்மீது களிமண்ணால் கவசித்து கரிநெருப்பில்சுடவேண்டும். மேல்மண்ணானது சிவந்தக்ஷணமே அதனையெடுத்து ஆறவைத்துக்கொஞ்சம் ஆறினபின்பு அதாவது சற்று இளஞ்சூடாயிருக்கும் பக்குவத்தில் அதை உடைத்து இலிங்கத்தை யெடுத்துக்கொள்ளவேண்டும். உடனே மேற்படி தைலத்தில் முன்போல் நனைத்து நான்கு ஊமத்தையிலைகளை அதன்மீது சுற்றிமுன்போல் அதன்மீது களிமண்ணைக் கவசம்செய்து முன்போல் கரிநெருப்பில் பாகப்படுத்தவேண்டும். மேற்கவசம் சிவந்தவுடன் எடுத்து ஆறவைத்து இளஞ்சூட்டில் கவசத்தைப்பிரித்து இலிங்கத்தை யெடுத்துமுன்போல்தைலத்தில் நனைக்கவேண்டும். பிறகு ஊமத்தையிலையைச்சுற்றி முன்போல் கரிநெருப்பில் பாகப் படுத்தவேண்டும். இவ்விதம்மடக்கி மடக்கி நாற்பது தடவைகள் செய்யின் இலிங்கமானது கட்டுப்பட்டு உயர்தரமான மெழுகாகிவிடும். நெருப்பிற்கோடாது. இது வைத்தியத்திற்கு அதிக சிரேஷ்டமானது. ஆனால், இதன்சிறந்த குணத்

னைப்பற்றி இங்கெழுத முடியாது. ஆனால், இதன் அரிய குணத்தைத் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் இதைச்செய்து அநுபவித்து நிச்சயித்துக்கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—கமிருப்பிரமாணம்.

அநுபானம்:— வெண்ணெய், திராக்ஷைப்பழம் லேகியங்கள் முதலியவைகளாம்.

உபயோகம்:—எவ்வித காரணத்தினாலேனும் தளர்ந்துபோன நரம்புகள் பலத்துமுறுக்கேறி உரத்துத் தேகதிடத்தையும், மனஉற்சாகத்தையும் உண்டாக்கும். விருத்ததிசையால் மறந்திருக்கிற கௌமாரதிசையை உண்டாக்கும். இது சிறந்த பண்டிதர்கள் அநுபவத்தில் பலதடவைகள் அநுபவப்பட்டிருக்கிறது. கைகால்நடுக்கல், கைகால் உதறல், நீல்வாயு, நரம்புதுவண்டிருத்தல் முதலிய நரம்பைப்பற்றிய வியாதிகளும், ஈளை, இருமல், மந்தாரகாசம், முதலிய சுவாசம்பந்தமான அநேக வியாதிகளும் தீரும். இது ஒருகற்பத்திற்குச்சமானமானது.

பத்தியம்:—புளிப்பு, புளிப்புவஸ்துக்கள், மீன், எண்ணெய், மிளகாய், ஆகியவைகளை நீக்கவேண்டும்.

## 88. இரண பைரவி.

நல்லெண்ணெய் பலம் ௧௨, கற்பூரம் விராகனெடை-௩௰, தேன்மெழுகு விராகனெடை-௮௰, ஆட்டுக் கொழுப்பு விராகனெடை-௧௫, வெள்ளைக்குங்கிலியம் விராகனெடை-௩௰, கத்தைக்காம்பு விராகனெடை-௩௰, ஈயசெந்தூரம் விராகனெடை-௩௰, கல்மதம் விராகனெடை-௩௰, மிர்தார் சிங்கி விராகனெடை-௩௰, இலிங்கம் விராகனெடை-௩௰, கமேலாமா விராகனெடை-௩௰, வெள்ளிபஸ்பம் விராகனெடை-௩௰, இரசகர்ப்பூரம் விராகனெடை-௧௰, முட்டையின் மஞ்சட்கருக்கள்-௪, பச்சைவேப்பிலை விராகனெடை-௧௫.



செய்முறை:—ஒரு இரும்புப்பாத்திரத்தில் எண்ணெயைவிட்டுச் சூடாக்கிச் சூடானபின்பு வேப்பிலையை அம்மியில் வைத்து வெண்ணெய்போலரைத்துச் சிறு சிறு பில்லைகளாகச்செய்து அதிற்போட்டுக்காய்ச்சி அந்தபில்லைகள் கருகின பதத்தில் அதனையெடுத்துவிடவேண்டும். அதன் பிறகு மெழுகையும், கொழுப்பையும் அதிற்போட்டு விடவேண்டும். அதன்பிறகு மற்றமருந்துகளையெல்லாம் தனித்தனி பொடித்து ஒன்றுகச்சேர்த்து மறுபடியும் அரைத்து மேற்படி எண்ணெயிற்போடவேண்டும். ஆனால், இம்மருந்துகளை முன்னதாகவே அரைத்துச் சித்தப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டும். இந்த மருந்தைப்போட்டு ஒரு கொதிவந்தவுடன் கீழேயிறக்கிச்சூட்டைப்போட்டு நன்றாகக்கடையவேண்டும். ஆறினவுடன் முட்டைவெள்ளைக்கருவைவிட்டு நன்றாகக்கடைந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:— இதனை மேலுக்குத் தடவுவதினால் எல்லாவித இரணங்களும் ஆறும். கிரந்திப்புண்கள், மேகப்புண்கள், குழிரணம், அழிரணம், புரையோடுகிறரணம் முதலிய அநேகவகைரணங்கள்தீரும். வெட்டுக்காயம், குத்துக்காயம் முதலிய ஆயுதசம்பந்தகாயங்களும் தீரும். இந்தவகையில் இது மிகவும் சிறந்தது.

## 89. சீதபேதி சஞ்சீவி.

கறப்புக்கடுக்காய் விராகனெடை-௨வ, மேற்தோல்சீவின சுக்கு விராகனெடை-௨வ, சோம்பு விராகனெடை-௨வ, மாசக்காய் விராகனெடை-௨வ, வலம்புரிக்காய் விராகனெடை-௨வ, கசகசாத்தோல் விராகனெடை-௨வ, வெள்ளைக்குங்கிலியம் விராகனெடை-௨வ, வறுத்த நற்சீரகம் விராகனெடை-௩வ, கருவேலம் பிசின் விராகனெடை-௩வ, பசுவெண்ணெய் விராகனெடை-௬வ.

செய்முறை:—எல்லாவற்றையும் இடித்து நெய்யில் வறுத்து மயிர்ச்சல்லடையில் அல்லது இரும்புச்சல்லடையில் சலித்துக் கொள்ளவேண்டும்; அல்லது முறத்தில் தெள்ளிக்கொள்ளவேண்டும். பிறகு இதனுடன் ஒருபலம் இஸ்பகோல்விதையை இடிக்காமல் முழுசாகவே சேர்த்துவைத்துக் கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-க௨-முதல்-௩-வரையில் சாப்பிடலாம்.

அனுபானம்:—பசுவின்பால், அல்லது பசுவின் தயிர்ச்சக்கை.

உபயோகம்:—எல்லாவகைச் சீதபேதி, வயிற்றுக்கடுப்பு, இரத்தபேதி முதலிய ரோகங்கள் தீரும். எத்தனை நாட்பட்டதாயினும் சீதபேதிக்கு இது சஞ்சீவி. ஒருவாரத்துக்குள் குணங்காணப்படும்.

பத்தியம்:—பாலும் அன்னமும் சாப்பிடவேண்டியது; அல்லது மோர் அன்னமும் சாப்பிடலாம்; கொழுமைசொட்டு ஆகாது.



## 90. பிரமேக சஞ்சீவி.

சுட்டவெடியுப்பு விராகனெடை-௬வ, நெல்லிக்காய்க் கெந்தகம் பலம்-௧, இவ்விரண்டையும் பொடித்து ஒரு புதுப்பாத்திரத்திற்குச்சீலைமண்செய்து உலர்த்தி மேற்படி பாத்திரத்திற் போட்டுக் கரிநெருப்பின்மீது வைத்து ஊதினால் ஜலம்போல் உருகிப்போகும். அந்தச் சமயத்தில் சுயம்பூசின பாத்திரத்தில் ஊற்றித்தனியே வைக்கவேண்டும். பிறகு சீனக்காரம், பூங்காவி, முக்கிலுப்பு, கருவேலம்பிசின், வாதுமைப்பிசின் இவைகளின் சூரணம்வகை-௧-க்கு விராகனெடை-௩வ, சுயமான சிலாசத்து விராகனெடை-௧௨, முன்சித்தப்படுத்தி வைத்திருக்கிற வெடியுப்பு விராகனெடை-௬வ.

செய்முறை:—எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துச் சூரணித்து வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—விராகனெடை-௨, காலை மாலை இரண்டுவேளையும் பசுவின்பாலுடன் உட்கொள்ளவேண்டும்.

உபயோகம்:—பிரமேகம், இரத்தப்பிரமேகம்முதலிய ரோகங்கள் தீரும்.

பத்தியம்:—தேகசுபாவம் வியாதிபலம் முதலியவைகளுக்குத்தகுந்தது போல் உப்பு, புளி முதலியவை தள்ளிப்பத்தியம் வைக்கவும்.

## 91. கல் வாத சங்காரன்.

சிஞ்சான் பிசினிச்சூரணம் விராகனெடை-௪, இதனைப்பசுவின்தயிரில் கலக்கிச் சாப்பிடவேண்டும். இதனுடன் வியாதியுள்ள இடத்தில் சிக்கொழுப்

பைப்பூசிவரவேண்டும். தக்ஷணமே குணத்தைக்காண்பிக்கும். மூன்றுநாளைக்குள் எவ்விதமானரோகமாயிருந்தபோதிலும் மிக அற்புதமாகக் குணத்தைக்காண்பிக்கிறது. பரீக்ஷிக்க இஷ்டமுள்ளவர்கள் இதனை உபயோகித்துப்பார்வையிடவும்.

### ௯௨. சுரசந்திர வயிரவன்.

சுத்திசெய்த இரசம் விராகனெடை-க, சுத்திசெய்தலிங்கம் விராகனெடை-உ, உயர்ந்த கோரோசனை விராகனெடை-௩, முலைப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் லிங்கத்தையும் தொந்தித்தரைத்து இரசம்மடிந்தபின்பு கோரோசனையைச் சிறுகச்சிறுகச் சேர்த்தரைத்தெல்லாம்நன்றாகமிஸ்ரமாகும்படி ஒருமணிநேரமரைத்து முலைப்பாலைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துப் பயறளவுமாத்திரைசெய்து நிழலிலுலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-ஒ-க-உ.

அநுபானமும் உபயோகமும்:—முலைப்பால் விராகனெடை-க, தேன் விராகனிடை-க, இவ்விரண்டையும்மிஸ்ரமித்துமேற்படிமாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துண்ண, தோஷம், பிரமை, சன்னி, பைத்தியம், உன்மத்தம் ஆகியவைகள் தீரும்.

இஞ்சிச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண, பித்தசுரம், பித்தமயக்கம், பித்தவாந்தி, அரோசகம் முதலியவைகள் தீரும்.



ஆடாதோடை வேர்ப்பட்டை அல்லது இலை பலம் கவ, இதனை ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டினகஷாயத்துடன் இரண்டு விராகனிடை தேனைச்சேர்த்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண இருமலுடன் இளைப்பும் கூடிய நியூமோனியா என்னும் சுரமும் தீரும். அதற்கு இது சஞ்சீவிக்கொப்பானது; பல இங்கிலீஷ்மருந்துகளை உபயோகித்துந்தீரும் ரோது என்றுசந்தேகத்துடனிருப்பதைப்பார்க்கிலும் இந்த மருந்தை எவ்வித சந்தேகமுமின்றி அதிக நம்பிக்கையுடன் உபயோகிக்கலாம். இது பல தடவைகள் உபயோகித்து நிச்சயமான குணங்காணப்பட்டிருக்கிறது.

மேல்தோல்போக்கின வேப்பீர்க்கு-௫௦, (இவற்றில் மேல்தோல்கொஞ்சமேனுமிருந்தால் வாந்தியுண்டாகும் ஆகையால் அறவே மேல்தோலை நீக்கிவிடவேண்டும்.) இவற்றைப்பஞ்சுபோல் சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகச்சுண்டவைத்துஇறக்கி வடிகட்டி அதில் இரண்டு விராகனெடை தேனைச்சேர்த்து மேற்படி மாத்திரையை அநுபானித்துட்கொள்ள சீதசுரம், மாறல்சுரம், முறைசுரம், குளிர்சுரம் முதலியவைகளெல்லாம்தீரும்.

வில்வவேர்ப்பட்டை, வில்வபழத்தோடு, மாதளம்பழத்தோடு, மாதளம்பிஞ்சு, மாதளம்பூ இவை வகைக்கு விராகனெடை-கவ. இவற்றைச்சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி அதில் இரண்டு விராகனெடை தேனைச்சேர்த்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண அதிசாரசுரம், அதிசாரப்போக்கு

பலவர்ணமாக மலம்போதல், அதிசாரத்தாலுண்டாகும் இளைப்பு களைப்பு முதலியவை தீரும்.

நெற்பொரி, நெல்லிமுள்ளி, வறுத்த அரிசித்திப்பிலி, வறுத்த ஏலம், பொரித்த வெண்காரம் இவை வகைக்குப்பலம்-½. இவற்றைக்கல்வத்திலிட்டுப் பொடித்து மாதுளம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து லேகியபதமாக எடுத்துவைத்துக்கொண்டு இந்தலேகியம் விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண சுரத்தின் மேலுண்டாகும் வாந்தி, அரோசகம், வாய்நீரூறல், குமட்டல் முதலியவை தீரும்.

மயிலிறகைச் சுட்டெரித்தசாம்பல் விராகனெடை-க, கருங்கம்பளியைச் சுட்டெரித்தசாம்பல் விராகனெடை-க, வறுத்துப்பொடித்த அரிசித்திப்பிலிச்சூரணம் விராகனெடை-க, விதை நீக்கின விளாம்பழவிழுது பலம்-க. இந்நான்கையும் மிஸ்ரித்து லேகியம்போல் வைத்துக்கொண்டு இந்த லேகியம் விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண, சுரத்தின் மேற்காணும் விக்கல், மார்பு வறட்சி, இளைப்பு, வாந்தி ஆகியவைகள் தீரும்.

விதை நீக்கின திராக்ஷைப்பழம் பலம்-க. இதனைக்கல்வத்திலிட்டுத் தேனைச் சிறுகச் சிறுகவார்த்து அரைத்து மெழுகுபதமாக எடுத்து வைத்துக்கொள்ளவும். இந்த மெழுகு விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி



மாத்திரையை அனுபானித்துண்ண, சுரத்தின்மேற்காணும் தாகம், மயக்கம், தியக்கம், விக்கல், உடம்பெரிவு, கைகாலெரிவு தீரும்.

மஞ்சட்கடுக்காய்த்தோல் விராகனெடை-ச, களிப்பாக்கு விராகனெடை-ரு, மேற்றோல் சீவினசுக்கு விராகனெடை-உ, இந்துப்பு விராகனெடை-க. இவற்றில் முன் மூன்று சரக்கையும் சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி அதில் மேற்படி இந்துப்பைப் பொடித்துப் போட்டு இரண்டுவிராகனெடைத்தேனையும் கலந்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண, சுரத்தின் மேலுண்டாகும் வீக்கம், விடாதபழையசுரம் ஆகியவை தீரும். விரேசனமாகும்.

ஆவாரையிலைச் சூரணம் விராகனெடை-க, எருமைத்தயிரைத் துணியில் கட்டி நீர்போக்கின தயிர்ச்சக்கை விராகனெடை-ரு, சர்க்கரை விராகனெடை-உ, இவற்றை மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண, ஜலதோஷம், அதிமூத்திரரோகம் ஆகியவைகள் தீரும். மேற்கண்டபடி பதினைந்து நாள் அந்திசந்தி கொடுக்க எவ்வகை ஜலரோகமும் தீரும்.

## 93. சந்திரப்பிரகாச மாத்திரை.

பொரித்த வெண்காரம் விராகனெடை-க0, மிளகுச்சூரணம் விராகனெடை-க0, சுத்திசெய்த நாபிச்சூரணம் விராகனெடை-உ, இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு ஒருமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமான

பின்பு இஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ.

அனுபானம்:—சுக்குக்கஷாயம், சோம்புத்திராவகம், சோம்புக்கஷாயம், பஞ்சதீபாக்கினி லேகியம், அசுவகெந்திச்சூரணம், கொடிவேலி வேர்ப்பட்டைச்சூரணம், கொடிவேலி வேர்ப்பட்டைக்கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:—வாயுவலிகள், பாரிசவாயு, தோள்பட்டைக்கடுப்பு, சந்துக்குடைச்சல், சந்துவாதம், பாரிவீக்கம், ஊது காமாலை, வாதரோகங்கள், அந்திரவாயு, தமரகவாயு முதலியவைகள் தீரும். இன்னும் அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்தபடி தக்க அனுபானங்களில் விட அநேக ரோகங்கள் தீரும்.

## 94. சந்திரோதய மாத்திரை.

மஞ்சள்பொடி விராகனெடை-௩, சுத்திசெய்த இரசகற்பூரம் விராகனெடை-க, பொரித்த வெண்காரம் விராகனெடை-உ, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—கற்பூரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து வெண்காரத்தைச் சேர்த்தரைத்துப் பிறகு மஞ்சட்பொடியைச் சிறுகச் சிறுகச்சேர்த்தரைத்து எல்லாம் மிஸ்ரமாகும்படி ஒருமணி நேரமரைத்து மேற்படி பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துக் கடலைப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.



பிரமாணம்:—மாத்திரை-க-உ.

அனுபானம்:—மேற்சொல் சீனைக்கு, மிளகு, அசிசித்திப்பிலி, சீரகம், (இவற்றை இளவறுப்பாகவறுத்துக்கொள்ளவும்.) இந்துப்பு இவற்றின் சூரணம் வகைக்குப்பலம்-க. இவற்றைக்கல்வத்திலிட்டு அரைமணிநேரமரைத்து எல்லாம் ஒன்றாக மிஸ்ரமானபின்பு தேனை வார்த்தரைத்து மெழுகு பதத்தில் எடுத்துவைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:—மேற்படி லேகியம் விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண வாதரோகங்கள், சன்னிகள், கிரந்திரோகங்கள், சூலைகள், வாயுக்கள், கபாலசூலை, சுரம் இவைகள் தீரும்.

குறிப்பு.

இதில் இரசகற்பூரம் சேர்ந்திருப்பதால் சிலருக்குத் தொண்டைவலிகாணும். உடனே மருந்தை நிறுத்திவிடவேண்டும். மறுபடியும் கொடுக்கவேண்டிய அவசியமிருந்தால் இரண்டொருவாரம் இடையில் விட்டு அதன்மேல்கொடுக்கலாம்.

## 95. பட்டைமாத்திரை.

மேற்சொல் சீனைக்குச்சூரணம், கல்லுப்புத்தூள், பொரித்தவெண்காரத்தூள், பொரித்த பெருங்காயச்சூரணம் வகைக்குப்பலம்-க. முருங்கைப்பட்டைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளை யெல்லாம் கல்வத்திலிட்டு ஒருமணிநேரம் அரைத்து எல்லாம் மி

ஸ்ரமான பின்பு முருங்கைப்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்து இலந்தை விதைப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨.

அனுபானம்:—சுக்குக்கஷாயம், சோம்புக்கஷாயம், சோம்புத்திராவகம், ஓமக்கஷாயம், மூத்திரவகம் முதலியவைகளாம். மேற்படி அனுபானமில்லாமலே மாத்திரையை வாயிலிட்டு மென்று சாப்பிடலாம். இது வாய்க்கு ருசியாயில்லாவிட்டபோதிலும் சாப்பிடுவதற்கு வெருட்டலாயிராது.

உபயோகம்:—அஜீரணம், வயிற்றுப்பொருமல், அக்கினிமந்தம், புளியேப்பம், உஷ்ணவாயு, எல்லாவகை வாயுரோகங்கள் ஆகியவை தீரும்.

குறிப்பு.

இதில் பெருங்காயம் உப்பு வகைகள் சேர்ந்திருந்தாலும் சில சமயம் மாத்திரைகள் உதிர்ந்து ஈரமாகி விடுகின்றன. ஆகையால், பாத்திரத்திற் கொஞ்சம் நெய்யைவார்த்துக் காய்ச்சி அது காய்ந்தவுடன் மாத்திரைகளைப்போட்டு நன்றாய்ச் சூடேறும்படியாக வறுத்து எடுத்துச் சீஷாவிற்பத்திரப்படுத்தவும். இதனால் மாத்திரையிலுள்ள வேகம் குறைந்துபோவதுடன் வெகுநாள்வரையில் கெடாமலுமிருக்கும். ‡ இவ் நூதனமுறைப்படி ஏற்பட்டபக்குவம்.

96. குளங்கலக்கிக் குளிகை.

பொரித்தவெண்காரம், மேல்தோல் நீக்கிய சுக்குச் சூரணம், இந்துப்புத்தூள், கடுரோகணிச் சூரணம்



தேவதாருச் சூரணம், மாமஞ்சட் சூரணம், சிற்றரத்தைச்சூரணம் இவைவகைக்கு விராகனெடை-௩வ, மஞ்சட்கடுக்காய்த்தோற்சூரணம் விராகனெடை-௬வ, சுத்திசெய்த சேர்வாளப்பருப்பு விராகனெடை-௧௰, கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சரக்குகளில் வாளத்தைத்தவிர மற்றவைகளையெல்லாம் கல்வத்திலிட்டு ஒருமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு தனியே எடுத்துவைத்துக் கொள்ளவும். வாளத்தைக்கல்வத்திலிட்டு மைபோலானபின்பு முன் சித்தப்படுத்தின சூரணத்தைச் சிறுகச் சிறுகச்சேர்த்தரைத்து, எல்லாம் ஆனபின்பு கையாந்தகரைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்து இரண்டு குன்றிமணிபெடையுள்ளமாத்திரைகளாகச் செய்துநிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨.

அனுபானம்:—வெண்ணெய், சுக்குக் கஷாயம், நெய், சர்க்கரை, வெற்றிலை முதலியவைகளாம். இதனால் நன்றாய்ப்பேதியாகும். ஆகையால் தேகத்துக்குத் தகுந்த அனுபானங்களில்கொடுக்கவும்.

உபயோகம்:— காமாலை, ஊதுகாமாலை, வெப்பு, நீராமை, வாதகரப்பான், சூலைகள், அரையாப்பு, திரட்சிவாயு, ஜலக்கோவை, பெருவயிறு முதலியவைகள் தீரும்.

97. அழகிய சோக்கன் குளிகை.

சுத்திசெய்தஇரசம், சுத்தி[illegible]ய்தகெந்தகம், பொரித்தவெண்காரத்தூள், வறுத்த அ[illegible]த்திப்பிசிச்சூரண

ம், சவுக்காரத்தூள், கடுகுரோகணிச் சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-கல, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனெடை-எற, திரிபாகனிலைச்சாறு, பொடுதலைச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் தொங்கித்தரைத்து கன்றுகக்கருத்த பின்பு நேர்வாளத்தைத்தவிர மற்றசரக்குகளையும் சேர்த்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் மென்மையானபின்பு தனியே எடுத்து வைத்துக்கொள்ளவும். வாளத்தைக் கல்வத்திலிட்டு அரைத்து மெழுகுபோலான பின்பு முன் சித்தப்படுத்தின சூரணத்தைச் சிறுகச் சிறுகச்சேர்த்து அரைத்து எல்லாம் சேர்ந்தபின்பு பாகலிலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து மூன்று நாளரைத்து சாமூலர்த்தபின்பு பொடுதலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து மூன்று நாளரைத்து உருக்கும்போல் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ-க.

அனுபானமும், உபயோகமும்:—முலைப்பால் விராகனெடை-க, தேன்விராகனெடை-க, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண அஜீரணரோகம் தீரும்.

இஞ்சிச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துண்ண, சுரம், மாந்தம் ஆகியவை தீரும்.



வறுத்த அரிசித்திப்பிலிச் சூரணம் விராகனெடை-க, தேன் விராகனெடை-க, இவற்றை மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண, மலக்கட்டு, மூச்சடைப்பு ஆகியவை தீரும்.

பொட்டுப்பு விராகனெடை-உ, பொரித்தவெண்காரம் விராகனெடை-உ. இவ்விரண்டையும் சட்டியிலிட்டுக் கொஞ்சம் இளவறுப்பாக வறுத்து ஒரு ஆழாக்கு இளநீரைவிட்டு மூன்றிலொரு பாகமாகச்சுண்டக் காய்ச்சி இறக்கி வடிகட்டி இதில் மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண, நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு ஆகியவை தீரும்.

98. கரண்டிக்கட்டு வாதி.

அபின், புளியங்கொட்டை விதைத்தோல், முள்ளிலவம் பிசின், மாசிக்காய், காய்ச்சுக்கட்டி, ஜாதிக்காய், மாதளையின் உலர்த்தின ஓடு இவை வகை-க-க்குப் பலம்-க, தயிர்ச்சக்கை செல்லத்தக்க அளவு.

செய்முறை:— மேற்கண்டவைகளில் அபினைத்தவிர மற்றவைகளை இடித்துச்சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவும்; அபினைக் கொஞ்சம் ஜலத்திற்கரைத்து வடிகட்டி வைத்துக்கொள்ளவும்; முன் சித்தப்படுத்தின சூரணத்தைக் கல்வத்திலிட்டு அபினி கரைத்த ஜலத்தை வார்த்து ஒருமணி நேரமரைத்துத் தயிர்ச்சக்கையைச் சேர்த்தரைக்கவேண்டும். கெட்டிப் பதமாயிருந்தால் தயிர்ச்சக்கையில் வடிந்த ஜலத்தைச் சேர்த்துக்கொஞ்சம் இளகலாய் அரைத்துக்கொள்ள வேண்டும். இரண்டு சாமத்துக்குக் குறையாமலரைக்க வேண்டும். மெழுகு பதமான சமயத்திலெடுத்து ஆள

த்திக் காண்டியைச் சுத்திசெய்து இந்தமருந்தை அதிற் போட்டுக் கரிநெருப்பின்மீது வைத்துக் கிண்டிக்கிளறி வரவேண்டியது. நீர் சுண்டிச் சிவந்தபதமாக வரும்போது அதையெடுத்துக் கல்வத்திற்போட்டு அரைமணி நேரமரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

## குறிப்பு.

இந்த மாத்திரை அதிககாலம் நில்லாமல் சீக்கிரம் கெட்டுப்போகக்கூடியது. ஆகையால் ஒரு பாத்திரத்தில் நெய்யைவார்த்து நெய் கொதித்தவுடன் இந்த மாத்திரைகளைப்போட்டுக் கொஞ்சம் சிவக்க வறுத்தெடுத்துச் சீஷாவில் பத்திரப்படுத்தினால் வெகுநாள் வரையிலிருக்கும்.

பிரமாணம்:—மாத்திரை—௧-௨.

அநுபானம்:-தயிர்ச்சக்கரை, வாழைப்பூவைப் பிட்டவித்துப் பிழிந்தஜலம், மோர், தேன் ஆகியவைகளாம்.

உபயோகம்:—மூலவாயு, சீதபேதி, இரத்தக்கழிச்சல், அதிசாரவகைகள், கிராணிவகைகள் ஆகியவைகள் தீரும்.

## 93. சிவப்புக்கட்டுவாதி.

அதிவிடயம், ஜாதிக்காய், அபின், சுத்தி செய்த இலிங்கம், சுத்திசெய்த கஞ்சா, கஞ்சாவிதை, ஊமத்தைவிதை, மேல்தோல் சீவியசுக்கு, காட்டாத்திப்பூ இவை வகை-௧-க்குப் பலம்-௩, இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.



செய்முறை:—மேற்கண்ட சரக்குகளில் அபின் லிங்கம் ஆகிய இரண்டையும் தவிர மற்ற சரக்குகளைத் தனித்தனியிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணத்தைத் தனித்தனி மேற்கண்ட எடை நிறுத்தெடுத்துப்பிறகு எல்லாவற்றையும் சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும். அபினியை இஞ்சிச்சாற்றில் கரைத்து வடிகட்டி வைத்துக்கொள்ளவேண்டும். இலிங்கத்தைக் கல்வத்திலிட்டு அஞ்சனம்போல் ஆகிறவரையில் அரைக்கவேண்டும். அவசரப்பட்டுச் சூரணத்தைச் சேர்த்துவிட்டால் மருந்து செம்மையாய் அரைபடாமல் குணந்தராது. இலிங்கத்தை எவ்வளவு நேரம் தனியே அரைத்து மசியச்செய்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்மையுண்டாகும். பிறகு முன் சித்தப்படுத்தியிருக்கிற சூரணத்தைச் சிறுகச் சிறுகச்சேர்த்து அபின் ஜலத்தையும் கொஞ்சம் கொஞ்சம் தெளித்து அரைத்துவரவேண்டியது. இந்த இரண்டும் சேர்ந்தபின்பு கைவிடாமல் ஒருசாமம் அரைக்கவேண்டியது. எல்லாம் ஒன்றாகக்கலந்து மசிந்தபின்பு இஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒரு சாமநேரமரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை—௨-௧.

அநுபானம்:—தேன், இலவங்கக்கஷாயம், அதிவிடயக்கஷாயம், வெந்தயக்கஷாயம், முன் காண்டிக்கட்டுவாதியிற் சொல்லியிருக்கிற அநுபானங்கள் முதலியவைகளாம்.

உபயோகம்:—அதிசாரபேதி, அஜீரணபேதி, மாந்தபேதி, சீதபேதி, சுரக்கழிச்சல், எல்லாவகைக் கழிச்சல் முதலிய பல ரோகங்கள் தீரும்.

## 100. கட்டுவாதி மாத்திரை.

மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, சீரகம், அதிவிடயம், குராசானி ஓமம், கழற்சிப்பருப்பு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, சுத்திசெய்தகஞ்சா, இலவங்கம், அபின், விளாம்பிசின், இலவம்பிசின், கருவேலம்பிசின், அத்திப்பிசின் ஆகிய இவை வகைக்கு வராகனெடை-க, சுத்திசெய்த இரசம் வராகனெடை-க, சுத்திசெய்த காரீயம் வராகனெடை-க, பருத்தியிலைச் சாறு, எருமைத்தயிர் இவை வகை-க-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—காரீயத்தை உருக்கி இரசத்துடன் சேர்த்துத் தொகுத்துக்கொள்ளவேண்டும். அபினியைத்தவிர மற்ற சரக்குகளைத் தனித்தனியிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணத்தைத் தனித்தனி மேற்கண்ட எடை நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். அபினியைப் பருத்தியிலைச்சாற்றில் அல்லது ஜலத்தில் கரைத்து வடிகட்டி வைத்துக்கொள்ளவேண்டும். சூரணங்களையெல்லாம் ஒன்றாகக்கலந்து வைத்துக்கொண்டு காரீய இரசகெந்தகத்தைக் கல்வத்திற்போட்டு முன் சித்தப்படுத்தின அபின் ஜலத்தைச் சிறுகச் சிறுகவார்த்தரைத்து மைபோலான பின்பு முன் சித்தப்படுத்தின சூரணத்தைச் சிறுகச் சிறுகச் சேர்த்தரைத்துச் சூரணமெல்லாம் சென்றபின்பு பருத்தியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமமும், எருமைத்தயிரைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமமும் அரைத்துக் கடலைப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.



பிரமாணம்:—மாத்திரை-உ, க.

அநுபானம்:-எருமைத்தயிர், தேன், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—அதிசாரவகைகள், கழிச்சல்வகைகள் ஆகிய எல்லாவகைக் கழிச்சல்களும் தீரும்.

பத்தியம்:——தயிர்ச்சாதம், மோர்ச்சாதம் ஆகியவைகளைச் சேர்க்கவேண்டும். காரமான பதார்த்தங்களை நீக்கவேண்டியது.

## 101. கட்டுவாதி (வேறு.)

பெரிய ஜாதிக்காய்-க, அபின் வராகனெடை-உ, மாதளம்பிஞ்சு-க, பொடுதலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—ஜாதிக்காயைக் குடைந்து அதற்குள் அபினியைவைத்தழுத்தி அதன்மேல் முன் எடுத்த ஜாதிக்காய்த்தூளை யிட்டமுக்கி, இந்த ஜாதிக்காயை மாதளம்பிஞ்சைத் துளைத்து அதற்குள்வைத்து அதை எடுத்த துண்டுகளால்மூடி இதனைச் சாணிக்குள்வைத்து உருண்டையாகப் பிடிக்கவேண்டும். மாதளம்பிஞ்சுக்குமேல் நான்குபக்கமும் நான்கு விரற்கனமிருந்தால் போதுமானது. இதனை ஐம்பதுபலம் வறட்டியில் புடமிட்டுச் சாணிக்கவசத்தை மாத்திரம் நீக்கிவிட்டு மாதளம்பிஞ்சுள்படக் கல்வத்திலிட்டு அரைத்துப் பொடுதலைச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து அரைத்தரைத்து மெழுகுபதத்தில் குன்றிமணிப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—மாத்திரை-க. உ.

அனுபானம்:—முலைப்பால், தேன், வெண்ணெய், நெய், வாழைப்பூவைப்பிட்டவித்துப் பிழிந்தநீர், தயிர் முதலியவைகளாம்.

உபயோகம்:—உஷ்ணசம்பந்தமான எல்லாவகைக் கழிச்சல்களும் தீரும்.

### 102. கஸ்தூரி மாத்திரை.

கஸ்தூரி விராகனெடை-க, குங்குமப்பூ விராகனெடை-உ, கோரோசனை விராகனெடை-க, ஸ்தனப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—குங்குமப்பூவைக் கல்வத்திலிட்டு மேற்படிபாலைச் சிறுகச் சிறுகவார்த்தரைத்து வெண்ணெய்போலானபின்பு கோரோசனையைப் பொடித்துச் சிறுகச்சிறுகச் சேர்த்தரைத்து அதுவும் அரைபட்டபின்பு கஸ்தூரியைச்சேர்த்து இரண்டு சாமநேரமரைத்து அரைக்குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவேண்டும்.

பிரமாணம்:—மாத்திரை-ரு, க.

அனுபானம்:—ஸ்தனப்பால், தேன், இஞ்சிரசம், சுக்குக்கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:—பதின்மூன்றுவகை சன்னி, எழுவகை தோஷம், எழுவகை மாந்தம், வாதபித்த சிலேட்டுமசுரங்கள், கபவாதசுரம், மற்ற எல்லாவகைச் சுரங்கள், வாயுவகைகள் ஆகிய எல்லாரோகங்களும் தீரும்; மேகவகைகள், கிரந்திவகைகள் ஆகியவைகளும் தீரும்.



### குறிப்பு.

ஒவ்வொரு வைத்தியர்களும் ஒவ்வொருவகையாகக் கஸ்தூரிமாத்திரையைச் செய்து அனுபவித்து வருகின்றார்கள். மேற்கண்ட முறையானது எல்லாவகைகளைப்பார்க்கிலும் மேலானதாக அனுபவத்தில் காணப்பட்டுவருகிறது. இம்முறையாளர்கள் தாங்களும் செய்து அனுபவித்து நன்மையை அடைவார்களென விரும்புகின்றோம். பெரிய குடும்பமாயுள்ளவர்கள் இந்த மாத்திரையைச் செய்து சித்தமாக வைத்துக்கொண்டிருப்பதனால், சிறுவர்கள், பெரியவர்கள், ஸ்திரீகள், விருத்தர்கள் முதலிய எல்லாவகையாருக்கும் எந்த வியாதிகளிலும் உபயோகிக்கலாமாகையால் எப்போதும் இது அவசரசமயத்தில் ஊன்றுகோல்போல் உதவ ஏதுவாகும்.

### 103. கோரோசனை மாத்திரை.

கோரோசனை, குங்குமப்பூ, சுத்திசெய்த இரசகற்பூரம், சுத்திசெய்த இரசசெந்தூரம், ஜாதிக்காய், அக்கிராகாரம், ஜாதிப்பத்திரி, இலவங்கம், பச்சைக்கற்பூரம், அப்பிரகசெந்தூரம், இவைவகைக்கு விராகனெடை-க ௫, சந்தனத்தூள் கஷாயம், சண்பகமொட்டுக்கஷாயம், இலவங்கக்கஷாயம் இவைவகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசகற்பூரத்தைக் கல்வத்திற்பொடித்து மற்றசரக்குகளையும் தனித்தனி இடித்துத் தூள்செய்து தனித்தனி நிறுத்தெடுத்து ஒன்றாகக்கலந்து அதிற்சேர்த்து ஒருமணிநேரம் அரைத்துத் தனியேவைத்துக்கொள்ளவும். குங்குமப்பூவைக் கல்வத்திலிட்

டு மேற்படி சந்தனக் கஷாயத்தைக் கொஞ்சம்விட்டு அரைத்து வெண்ணெய்போலான பின்பு முன் சுத்தப்படுத்தின சூரணங்களையும் சேர்த்துச் சந்தனக்கஷாயத்தால் ஒருசாமம், சண்பகமொக்குக் கஷாயத்தால் ஒருசாமம், இலவங்கக் கஷாயத்தால் இரண்டுசாமம் அரைத்து அரைக்குன்றிமணி யெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ.

அநுபானம்:—முலைப்பால், தேன், வெற்றிலை, சுக்குக்கஷாயம் முதலியவைகளாம்.

விசேஷ அநுபானமும், உபயோகமும்:—இஞ்சிச்சுரசம், அல்லது இஞ்சிக்கஷாயம் வராகனெடை-ரு, தேன் வராகனெடை-உ, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப்பிரமாணப்படி அநுபானித்தால், சப்தசுரங்களும் தீரும்.

பன்னீர் அல்லது முலைப்பால் வராகனெடை-ரு, தேன் வராகனெடை-உ, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்தால் வாந்தி, மயக்கம், கபரோகங்கள், பிரமை, தலை சுழற்றல் முதலியவைகள் தீரும்.

மாந்தம், சுழிமாந்தம், உப்புமாந்தம் முதலிய பல மாந்தரோகங்கள், கணரோகங்கள் முதலிய குழந்தைகள் வியாதியெல்லாம் அததற்குத்தக்க கஷாயங்களில் மேற்படி மாத்திரையை அநுபானித்துக் கொடுக்கத்தீரும்.



இன்னும் அநுபான விசேஷங்களினிட சன்னி, சயித்தியம், பீனிசரோகம், ஜலதோஷம், வலிப்பு ஆகியவெல்லாரோகங்களும் தீரும்.

## குறிப்பு.

இந்த முறையானது அகஸ்தியர் இரத்தினச்சுருக்கமென்னும் நூலில் பூர்வீகமாக உள்ளது; இந்தப் பாகத்தையே வீரமாமுனியாகிய இவரும் எடுத்துச்சொல்லியிருக்கின்றார். ஆனால், சிலர், அப்பிரேகசெந்தூரத்தை நீக்கிச் செய்வதுமுண்டு, சிலர் சேர்த்துச்செய்வதுமுண்டு. அது எப்படியிருக்கினும் மூலத்திலுள்ளது போல் எழுதியிருக்கின்றோம். ஆகையால் அவரவர்கள் இஷ்டப்படிசெய்து அநுபவித்துக் கொள்ளவும்.

## 104. கோரோசனை மாத்திரை. (வேறு)

சுத்திசெய்த இரசகற்பூரம் வராகனெடை-ஊ, (இதனைச் சிறு அம்மான்பச்சரிசிச் சாற்றில் மூன்று நாள் ஊறவைத்து காலாகாலம் எடுத்து ஈரமில்லாமல் வெயிலில் உலர்த்திக்கொள்ளவும்.) இலிங்கம் வராகனெடை-ரு, (இதனை முலைப்பாலில் மூன்றுநாள் ஊறவைத்து காலாம் எடுத்து ஈரமில்லாமல் வெயிலிலுலர்த்தியெடுத்துக் கொள்ளவும். இலவங்கச் சூரணம் வராகனெடை-க, கோரோசனை வராகனெடை-ளு, சிறு செருப்படிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசகற்பூரத்தையும் இலிங்கத்தையும் சேர்த்துப்பொடித்துப்பிறகு கோரோசனையைச் சேர்த்துப்பொடித்துப் பிறகு மிளகுச் சூரணத்தைச் சேர்த்து இரண்டுமணிநேரம் அரைத்து எல்லாம் நன்

ருய் மிஸ்ரமானபின்பு மேற்படி சாம்பலைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரம் கைவிடாமலரைத்துக்குன்றிமணியைப்போலும், சிறுபயறைப்போலும் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—பெரியவர்களுக்குப் பெரிய மாத்திரை-க, சிறுவர்களுக்குச்சிறுமாத்திரை-க.

அனுபானம்:—தேன், அந்தந்த வியாதிக்குத்தகுந்தகஷாயம், சர்க்கரை, வெண்ணெய் முதலியவைகளாம். இதனை வியாதிபலத்திற்குத்தக்கபடி மூன்றுநாள் ஐந்துநாள் ஏழுநாள் வரையில் கொடுக்கலாம். சிலதேகிகளுக்கு அதிசீக்கிரமாகவும், சிலதேகிகளுக்குத் தாமதமாகவும் வாய்பிடிக்குமாகையால் மூன்று ஐந்து ஏழு என்னும் கணக்கில்லாமல் வாய்பிடிக்கிறவரையில் கொடுக்கலாம்.

உபயோகம்:— பீனிசசூலை, கபாலசூலை, மேகசூலை, கிரந்தி, கரப்பான், ஈழை, இருமல், வாயுவகைகள் முதலிய பலரோகங்கள் தீரும்.

பத்தியம்:—புளி, புகை, பெண் ஆகியவைகளை நீக்கவேண்டியது. வாயுபதார்த்தங்கள், கரப்பான் பதார்த்தங்கள் ஆகியவைகளையும் நீக்கவேண்டியது. எத்தனைநாள் மருந்தை உபயோகிக்கின்றோமோ அத்தனைநாள் மறுபத்தியமிருக்கவேண்டியது. வியாதி இலகுவாயிருந்தால் பத்தியமில்லாமலும் உபயோகிக்கலாம். இதனைக்குழந்தைகளுக்கும் உபயோகிக்கலாம்.

## 105. சூலைக் குடோரி.

சுத்திசெய்தஇரசம், சுத்திசெய்த இலிங்கம், சுத்திசெய்தவெள்ளைப்பாஷாணம், காந்தம், மேல்தோல்



சீவினசுக்குச்சூரணம், வறுத்திடித்த அரிசித்திப்பிலிச்சூரணம் இவைவகைக்கு விராகனெடை-உ, கார்போகரிசிச்சூரணம் விராகனெடை-ஈ, மஞ்சிஷ்டிச் சூரணம் விராகனெடை-அ, தித்திப்பான கிணற்றுத்தண்ணீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் பாஷாணத்தையும் தொக்கித்தரைத்து இரசம் மடிந்தபின்பு மற்றச்சரக்குகளையும் தனித்தனிபொடித்துச்சேர்த்து ஒருமணிநேரமரைத்து மற்றச் சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து இதிற்சேர்த்துமறுபடியும் ஒருமணிநேரமரைத்து எல்லாம் நன்றாகமிஸ்ரமானபின்பு மேற்படி குளிர்ந்தஜலத்தைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமமரைத்துக்கடலைப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ-க.

அனுபானம்:—பனைவெல்லம், சர்க்கரை, வெண்ணெய் முதலியவைகளாம். காலை மாலை இரண்டுவேளையும் ஏழுநாள்வரையில் கொடுக்கலாம்.

உபயோகம்:—கிரந்தி, சூலை, அரையாப்பு, மேகவாயு, கீல்வாயு, யோனிப்புற்று முதலிய ரோகங்கள் தீரும்.

பத்தியம்:—கத்தரிப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, பீர்க்கம்பிஞ்சு, முருங்கைக்கீரை ஆகியவை ஆகும். புளி, புகை, பெண், மீன், ஆட்டிறைச்சி ஆகியவைகள் [illegible] [illegible] தள்ளவேண்டும். மருந்தை [illegible] எருமை மோர் சேர்த்துக் கொள்ளலாம்; [illegible] [illegible] பதாம்கள் ஓமத்தைக்

கஞ்சியிலரைத்துத் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டியது. பிறகு மூன்றுநாளைக்கொரு தடவை விளக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்துவரவேண்டியது. இவ்விதம் இருபத்தொருநாள்வரையில் பத்தியங்காத்து அதற்குப்பிறகு நல்லெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து வழமைபோல் எல்லாப்பதார்த்தங்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

## 106 சுக்கிலாதி வடகம்.

(a) கைசாகுதி (இதனை வேப்பம்பட்டைக்கஷாயத்தில் வேகவைத்துக்கற்காடு முதலியவை நீக்கிச்சுத்திசெய்தது) விராகனெடை-கூறு, சுத்திசெய்தநாபி, சுத்திசெய்தகௌரி, சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் (இந்த மூன்றையும் தனித்தனிமுடிச்சுக்கட்டி மிருபாகனிலே சமூலத்தை இடித்தசாற்றில் தொங்கவிட்டு இரண்டு சாமநேரம் எரித்து எடுத்து ஈரமுலர்த்தி), வகைக்கு விராகனெடை-கவ, பாலில் அவித்துச் சுத்திசெய்த பறங்கிப்பட்டை விராகனெடை-கூந, சுத்திசெய்த இரசம், வறுத்ததுருசு, கடைச்சரு, இலவங்கப்பட்டைச் சூரணம், வெள்ளைக்குங்கிலியசூரணம், பனைவெல்லம் வகைக்கு விராகனெடை-கவ, வெள்ளெருக்கின்கொழுந்து விராகனெடை-கூறு.

(b) கறியுப்பு விராகனெடை-கவ, கோவைக்கொட்டை நீக்கிய பழப்புளி விராகனெடை-கவ, குளிர்ந்த ஜலம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—(a) யிலுள்ள சரக்குகளில் பொடிக்கவேண்டியவைகளைத் தனித்தனிபொடித்து கல்லுரலிலிட்டு நொச்சிக்கொழுந்தையும் சேர்த்துக் குளிர்ந்தஜலத்



தைத்தெளித்துப்பூணில்லாத உலக்கையால்மெதுவாயிடித்து மசியும்படி செய்யவேண்டியது. நன்றாக மசிந்தபின்பு (b) யிலுள்ள உப்பைப்பொடித்துப்போட்டும் புளியைச்சேர்த்தும் குளிர்ந்த ஜலத்தையே தெளித்துத் தொண்ணூறு நாழிகை அல்லது இருபத்தெட்டு மணி நேரம் இடிக்கவேண்டியது. எத்தனைமணி அதிகமானபோதிலும் மெழுகுபோலாகும்வரையில் இடிக்கவேண்டியது. இதனைக் கல்வத்திலரைத்தால் இடித்த மருந்து குணம்செய்வதுபோல் செய்வதில்லை. இந்த விஷயம் அனுபவத்தால் கிரகிக்கப்பட்டிருக்கிறது. பிறகு சுண்டைக்காய்ப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திவைத்துக்கொள்ளவேண்டும். மருந்தையுபயோகிக்கும்போது அவசியமான மாத்திரைகளைக் கல்வத்திற்போட்டுப் பொடித்துக் குளிர்ந்த ஜலத்தைக்கொஞ்சம் வார்த்து அரைத்து வியாதிபலம் தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி உருட்டிவைத்துக்கொண்டு உபயோகிக்கவேண்டும். பிரதிதினமும் அதன்மீது குளிர்ந்த ஜலத்தைத் தெளித்துக்கொண்டுவந்தால் புதிய அவுடதம்போலவேயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை. உ-கூ.ச.

அநுபானம்:—பனைவெல்லம், வாழைப்பழம், வெண்ணெய் இவைபோன்றவைகளாம். அந்தி சந்தி ஐந்துநாள் -ஏழுநாள் கொடுக்கவும்.

உபயோகம்:—சூலைக்கட்டு-கூ, கீல்வாயு, பாரிசவாயு, உதரவாயு, கால்பிக்கம், யானைக்கால்வீக்கம், அண்டவாதம், நெரிகட்டிவரும் சுரம், மாறல்சுரம் இவை முதலிய பலரோகங்கள் தீரும்.

பத்தியம்:—மருந்தைவிட்ட மூன்றுநாள் நல்லெண்ணெயில் முழுகவும். பிறகு ஒன்றைவிட்டொருநாள் ஷை நல்லெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும். இந்தப்படி பதினொந்து ஸ்நானம் செய்யவேண்டும்.

குறிப்பு.

இந்தக் குக்கிலாதிவடகமானது அகஸ்தியர் பூரணகாவியம் ஆயிரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வீரமாமுனிவர் தம்முடைய கிரந்த ஆரம்பத்தில, சித்தர் ரிஷிகள் முதலியவர்கள் சொல்லிய நூற்களை ஆராய்ந்து தெரிந்தெடுத்த முறைகளைச் சொல்லியிருக்கின்றேன் என்று சொல்லியிருப்பதுபோல் இவர் காலத்து முன்னோர்களின் நூற்களை ஆராய்ந்து அநுபவமான முறைகளையே தெரிந்தெடுத்துத் தம்முடைய நூலில் சொல்லியிருக்கின்றனர் போலும்.

107. கர்ந்தரச வில்லை.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த இலிங்கம், அரிசித்திப்பிலிச்சூரணம், பேற்றேல் [illegible] கஸ்தூரிச்சூரணம், மஞ்சிஷ்டிச்சூரணம், கார்போகரிச்சூரணம், வாய்விளங்கச்சூரணம், வால்மிளகுச்சூரணம் இவைவகைக்கு விராகனெடை-உ, வெள்ளைப்பாஷாணம் (இதனைக் கண்ணாம்புக்கரைத்த ஜலத்தில் கிழிகட்டித் தொங்கவிட்டு இரண்டுசாமநேரம் எரித்து எடுத்துக் கொம்புப்பாகற்பழத்திற்குட் செலுத்தி இரண்டு சீலைமண் செய்து பழம் வேகும்படியாகக் கொஞ்சம் உமியில் புடமிட்டு ஆறினபின் எடுத்தது) விராகனெடை-க, சூடன் விராகனெடை-க, காந்தம் (இதனைக் கொன்றை வேகவைத்த ஜலத்தில் ஐந்துதடவை காய்ச்சித் தோய்த்துக் கொள்ளவும்) இப்படிச் சுத்திசெய்த மேற்படி காந்தம் விராகனெடை-உ, தூளிர்த்த ஜலம் செல்லத்தக்க அளவு.



செய்முறை:—இரசத்தையும் பாஷாணத்தையும் தொந்திக்கரைத்து இரசம் மடிந்தபின்பு பொடிக்கவேண்டிய சரக்குகளைத் தனித்தனி பொடித்தும் மற்றுஞ் சரக்குகளை ஒன்றாகக்கலந்தும் கல்வத்திலிருக்கிறமருந்துடன் சேர்த்து ஒருசாமநேரம் அரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு பச்சைத் தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்து ஒன்றேமுக்கால் விராகனெடையுள்ள வில்லைகளாகச் செய்துலர்த்தி மெல்லிய ஓட்டில் பரப்பி மேலோர்மூடி இரண்டு சீலைமண்செய்து நாற்பத்தைந்து நாள் தானியபுடம் வைக்கவேண்டியது. பிறகு அதனையெடுத்துப் பொடித்துப் புட்டியிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௰-,உ-ஐ-க. ஏழுநாள் காலை மாலை உபயோகிக்கவும்.

அநுபானம்:—பனைவெல்லம், சர்க்கரை, தேன், நெய், வாழைப்பழம் முதலியவைகளாம்.

உபயோகம்:— இலிங்கப்புற்று, யோனிப்புற்று, கன்னப்புற்று முதலிய புற்றுரோகங்கள், கண்டக்கிரந்தி, கபாலக்கிரந்தி ஆகிய பல கிரந்திரோகங்கள், மேகசூலை, வெடிசூலை, கட்டிச்சூலை முதலிய பதினெட்டுவகைச் சூலைகளும், வாயுவகைகளும், வாதவகைகளும், இரணவகைகளும் ஆகிய பலரோகங்கள் தீரும்.

பத்தியம்:—வியாதி கடினமாயிருந்தால் உப்பில்லாமல் கடும்பத்தியம் வைக்கவேண்டியது. சிலருக்கு வாந்தியாகாது; சிலருக்கு வாந்தியாகும். பயந்து மருந்தை நிறுத்தாமல் தைரியத்துடன் கொடுத்துவரவேண்டியது. ஏழுநாள் மருந்தைக்கொடுத்து எட்டாம் நாள் ஓமம் கஞ்சியிலரைத்துத் தேய்த்து வெந்நீரால் ஸ்நானம்செய்யவும். அதன்மேல் உப்பைப் பொடியுடன் கலந்துக்கூட்டவும். சிறுபயறு, துவரை, முருங்கைப் பிஞ்சு, அவரைப்பிஞ்சு, மிளகு, மிளகாய், மஞ்சள் ஆகியவைகொஞ்சம் சேர்த்துப்பதினைந்து நாள்வரையில் சாப்பிடவேண்டும். மற்ற மசாலைதாளிதம் ஒன்றும்ஆகாது; பதினைந்தாம் நாள் புளியைச்சுட்டுக் கூட்டிக்கொள்ளவும். மருந்துசாப்பிட்ட ஏழாம்நாள் வலிகடுப்பில்லாமலிருந்தால் மாத்திரம் மேற்கண்டபடி எட்டாம் நாள் ஓமம் தேய்த்து முழுகவேண்டியது; வலிகடுப்பிருக்கிறவரையில் ஓமம் தேய்த்து ஸ்நானம் செய்யலாகாது. ஓமஸ்நானத்திற்குப் பிறகு மூன்று நாளைக்கொரு தடவை விளக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டியது. இவ்விதம் மூன்று ஸ்நானம் செய்யவும். பிறகு வழக்கம்போல் நல்லெண்ணெயில் ஸ்நானம் செய்துவரலாம். இந்த மருந்தினால் கைகால்களில் திமிர்கண்டால், அவுரிவேர் சிறுகளிஞ்சிவேர், மிளகு சீரக மிவைகளையும் இவ்விரண்டையும் இடித்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டிப் பானம் செய்யவேண்டும். இவ்விதம் இரண்டு மூன்று நாட்கள் செய்தால் இந்த மருந்தினால் கண்ட திமிர் நீங்கிப்போகும்.

குறிப்பு.

இந்த மருந்து அதிகக்கஷ்டமானதென்பதில் சந்தேகமில்லை. ஆனால், பலவகைப்பட்ட ரோகங்கள் சர்



தர்சிகிச்சையிலும் வசப்படாமற்போய்ச் சகிக்கமுடியாத கஷ்டத்தைக்கொடுத்து வருகின்றன. இவற்றில் அநேக லமரணத்திற்குள்ளாகின்றார்களும் பலரே; பலகால் கஷ்டத்தை அநுபவிப்பதைக்காட்டிலும் இரண்டொரு வாரம் கொஞ்சம் கஷ்டப்பட்டு அந்தத்துஷ்ட வியாதியினின்று தப்பித்துக்கொள்வது மிகவும் மேன்மையென்பதில் எவ்வித ஆக்ஷேபணையுமில்லை. ஆகையால் இவ்வகை மருந்தும் மனிதர்களுக்கு உபயோகமென்று இங்குச்சொல்லியிருக்கின்றனர்.

108. கருப்பு விஷ்ணுசக்கர மாத்திரை.

(a) சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த ஊசிக்காந்தம், சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த அயஅரப்பொடி இவை வகைக்குப்பலம்-வ.

(b) சுட்டெரித்த வசம்புச்சூரணம், தோலுரித்த பூண்டிதழ், கரியபோளத்தூள், வெளிச்சிப்பிசின் சூரணம், மேல்தோல்சீவின சுக்குச் சூரணம், கொடிவேலிவேர்ப்பட்டைச்சூரணம், நன்னாரிவேர்ப்பட்டைச் சூரணம், அரிசித்திப்பிலிச்சூரணம், சந்தனச்சூரணம், உலர்த்தின இலுப்பைப்பூச் சூரணம், விதைநீக்கின திராக்ஷப்பழம், பொரித்த பெருங்காயச் சூரணம் சுத்திசெய்த கருகாபிச் சூரணம், இவை வகைக்குப் பலம்-வ.

கையாந்தகரைச்சாறு, பெருந்தும்பைச்சாறு, கல்யாண முருக்கம்பூச்சாறு, வேப்பம்பட்டைக்கஷாயம், ஆடாதோடையிலைச்சாறு, நெருஞ்சி சமூலச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—(a) பிறவுள்ளவைகளில் நிர்விஷத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாகக் கருத்தபின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்து அதிற்சேர்த்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு அதனை எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு (b) யிலுள்ள சரக்குகளில் எல்லாச் சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் மருந்துடன் சேர்த்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் நன்றாகமிஸ்ரமான பின்பு எடுத்து வைத்துக்கொள்க. பிறகு பூண்டிகளைக் கல்வத்திலிட்டு வெண்ணெய்போலரைத்தும் அவ்விதமே திராக்ஷைப்பழத்தையும் வெண்ணெய்போலரைத்தும் முன் சித்தப்படுத்திருக்கும் மருந்தில் சேர்த்து மறுபடியும் ஒருமணிநேரம் அரைத்து எல்லாவற்றையும் நன்றாக மிஸ்ரமித்துக்கொள்ளவேண்டும். பிறகு இதனைக் கல்வத்திலிட்டு மேற்படிசாறு வகைகளில் தனித்தனி சிறுகச் சிறுகவார்த்து நவ்வாலுசாமம் அரைக்கவேண்டும். எல்லாச்சாறுகளையும் விட்டரைத்த பின்பு குன்றிமணிப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ-க.

அநுபானம்:—தேன், இஞ்சிச்சாறு, கையாந்தகரைச்சாறு, வெண்ணொச்சியிலைச்சாறு, தாய்ப்பால், தேங்காய்ப்பால், சுக்கு விராகனெடை-உ, முருங்கைப்பட்டை விராகனெடை அரை, வெள்ளைச்சாரணை வேர்ப்பட்டை விராகனெடை அரை, இம்மூன்றையும் சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கிவடிகட்டின கஷா



யம், இன்னும் அந்தந்த வியாதிகளுக்குத்தகுந்த அநுபானங்களுமாம்.

உபயோகம்:—சன்னி, திரிசன்னி, வாய்புலம்பல், சன்னிபாத சுரம், பித்தசன்னி, சிலேஷ்மசன்னி, சுகசன்னி, திமிர்வாதம், கோரைவாதம், அண்டவாதவாதம், இளம்பிள்ளைவாதம், வாதசூலை, பெருமுட்டிவாதம், குதிரைவலிப்பு, புறவலிப்பு, உதறுவாதம், தண்ணீர்வாதம், நாக்குவாதம், குமரநோவு, உள்ளடிவாதம், தனுர்வாதம், பாரிசவாதம், எல்லாவகைதோஷங்கள், பீனிசம், செவிரோகம், செவியில்வருகிற ஜென்மவாயுரோகம், இருமல், எரிகுன்மம், எல்லாவகைச் சுரங்கள் ஆகியவைதீரும்.

## 109. பிரளய கால வைரவன்.

சுத்திசெய்த தாம்பிர அரைப்பொடி, சுத்திசெய்தபித்தளை அரைப்பொடி, சுத்திசெய்த வெண்கல அரைப்பொடி, சுத்திசெய்த வெள்ளி அரைப்பொடி, சுத்திசெய்த அய அரைப்பொடி இவை வகை-க-க்கு விராகனெடை-ரு, சுத்திசெய்த காரீய அரைப்பொடி விராகனெடை-சு, சுருக்கம்பால் விராகனெடை-௰, பளிங்கு அப்பிரேகபற்பம் அல்லது செந்தூரம் விராகனெடை ஒன்றரை.

செய்முறை:—எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டு ஒருமணிநேரமரைத்துக் குகையிலிட்டுருக்கி ஐந்து குழிகள் செய்து அவற்றில் வார்த்து ஆறினபின்பு எடுத்து வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—இதனை இழைத்து ஒருகுன்றி அல்லது இரண்டு குன்றிப்பிரமாணம் கொடுக்கவேண்டியது.

அநுபானம்:—தண்ணீர், பேய்க்கருப்பஞ்சாறு.

உபயோகம்:—மரணத்தறுவாயில் இதனை மேற்படி அநுபானத்தில் கொடுத்தால் கபம் நீங்கி உடனே பேச்சுண்டாகும்.

குறிப்பு:

மரணத்தறுவாயில் உபயோகித்துப் பேசச்செய்கின்ற முறைகள் அநேகமிருக்கின்றன; மரணத்தறுவாயில் உபயோகிக்கும் மருந்தென்றால் எல்லோருக்கும் அந்தச்சமயங்களில் அப்படியாகுமென்பது கருத்தல்ல, ஆனால், சாத்திய அசாத்தியக்குறிகள், இருதய நடை முதலியவைகளை நிதானித்து உபயோகிக்கவேண்டியது. அநுபோகசாலிகளுக்கு இதன் விஷயம் நன்றாய்த்தெரிந்திருக்கும். இக்கிரந்தத்தில் மேற்படி வீரமாமுனிவரவர்கள் சொல்லியிருப்பதுபோலவே இக்குறிப்புரையெழுதியிருக்கின்றோம். இந்த முறையை நமது நண்பர்களில் ஒருவராகிய அக்கீம். இமாம் பக்ஷ்சாயபு அவர்கள்செய்து தம் அநுபவத்தில் நிச்சயமாகக்குணம் கண்டதாகச் சொல்லியிருக்கின்றனர். ஆகையால் இஷ்டமானவர்கள் தாங்களும் செய்து உபயோகித்துப்பார்க்கலாம். ஆனால், இந்தமுறையில் பச்சை உலோகங்களைச்சேர்த்துச் செய்வதைப்பார்க்கிலும் இந்த உலோகங்களின் பற்பத்தையே சேர்த்தரைத்து மாத்திரையாகச்செய்து உபயோகித்தால் அவ்வித குணமுண்டாகலாமென யூகிக்கின்றேன். இந்த உலோகங்களெல்லாம் ஒன்றாகச்சேர்வதால் அதிசக்தி உண்டாக, ஏதுவும் உண்டு. ஆகையால் சந்தேகமுள்ளவர்கள் இதுசெய்வதற்கும் இலகுவாயிருப்பதால் இதனைச்செய்து மரணகாலத்தில் கபத்தினால் அதிக வருத்தப்பட்டுக்கொண்



ருப்பவர்களுக்குக் கொடுத்தால் அந்தக்கபவேதனையா ல் நீங்கிக்கஷ்டத்திலிருந்து விடுதலையாக ஏதுவாகு . நாம் எந்த விஷயங்களையும் நமது கையால் செய் நமது அநுபவத்திற்கு வராதவரையில் இவ்விதவி யங்களை நம்புவது கஷ்டமே. ஆகையால், நாம் கூடி ன ஒவ்வொன்றையும் செய்து உபயோகித்தால் அ தன் உண்மைவிளங்கும். இந்தக்காலத்தில் இவ்வி மருந்துகளில் பலர் நம்பிக்கைவையார்கள். ஆனால், நேரே கண்ணாற்பார்த்தவர்களும், இவ்விதசமயங் ளில் உபயோகித்த அநுபவசாலிகளும் இதன்மீது நம் கை வைப்பார்கள்.

## 110. கபஹராஹாரி உசிதம்.

ஒரு கைப்பிடி உழுந்தை இரவில் ஜலத்தில் ஊற வைத்துக் காலையில் மேல்தோலை நீக்கி உலர்த்தி ஒரு கலயத்திற்போட்டு அதன்மேல் இரண்டங்குலம் ருக்கும்படியாக எருக்கம்பாலைவிட்டு வைக்கவேண்டி து. மறுநாள் கலயத்துக்குள்ளிருக்கும் தெளிவை இ த்துவிட்டு முன்போல் வேறு புதிய பாலைவிடவேண் து. மூன்றாநாளும் தெளிவையிறுத்துவிட்டு முன் போல் புதியபாலை விடவேண்டியது. நான்காம்நாள் ளிவை யிறுத்துவிட்டுக் கலயத்தின் வாய்க்குச்சீலை டு ஐந்து சீலைமண்செய்துலர்த்தி ஒன்றரை முழப் புடமிட்டு ஆறினபின் எடுக்கக்கருப்பாயிருக்கும். அத ப்பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-வ.

அநுபானம்:—தேன், நெய், முலைப்பால், பேய்க் ப்பஞ்சாறு ஆகியவைகளாம்.

உபயோகம்:—கபக்கட்டு அறும், கெட்டி க்கிறகபம் தண்ணீர்போலாகி வெளிப்பட்டுப் கோழைக்கட்டு, கபத்தினால் குரல் கம்மியிருத்த லிய கபசம்பந்தரோகங்கள் தீரும்.

## 111. கலிக்க மாத்திரை.

மேற்றோல் சீவியசுக்கு, மிளகு, அரிசித்தி வசம்பு, தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ், வெ சாரணை வேர்ப்பட்டை, மகிழம் விதைப்பருப் துகொட்டை நீக்கிய பழம்புளி இவை வகைக்கு கனெடை-உ, வெள்ளைச்சாரணை சமூலச்சாறு வெ கக்க அளவு.

செய்முறை:-எல்லாவற்றையும், தூள்செய் வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவ இரண்டுசாமநேரம் மைபோலரைத்து நீள மாத்திரை ளாகச்செய்து நிழலிலுலர்த்திவைத்துக்கொள்ள

உபயோகம்:—இதனை முலைப்பாலில் இழை இரண்டு கடுகளவு கண்ணிலிடவேண்டியது. கண் டுவதைப்பார்க்கிலும் கொஞ்சம் முலைப்பாலில் க து ஒன்றிரண்டு துளி நாசித்துவாரத்தில் விடுவ தமம். இப்படிச்செய்யத் தலைநோய், சிரபாரம், ணியாய் உண்டாகும் மயக்கம், ஒருபக்கத்தலைநோ மூர்ச்சை, சன்னி, ஜலதோஷம், மூக்கடைப்பு பவைகள் தீரும். இதுசற்று முரட்டுச் சிகிச்சைய யால் சுகுமாரதேகி முதலியவர்களுக்கு மிகவும் ந்த அளவாக உபயோகிக்கவேண்டியது.

## 112. சஞ்சீவி மாத்திரை.

மேல்தோல் சீவினசுக்கு, அரிசித்திப்பிலி, ளகு, மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்



ங்கிமுள்ளி, மேற்றோலைப் போக்கிய சித்திரமூல ம்பு, சுத்திசெய்த சேங்கொட்டை, சுத்திசெய்த ப சாரி இவை வகைக்குப்பலம் அரை, கோமூத்தி செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இவற்றுள் இடிக்கவேண்டியவைக இடித்துச்சூரணம் செய்து ஒன்றாக்கலந்து கெ வேண்டும். சேராங்கொட்டையைக் கல்வத்திலிட்டு கிரந்தையுடன் நசுக்கி மேற்படி கோஜலத்தைச்சிறு சிறுகவார்த்து மைபோலரைத்துப்பிறகு மற்றதுா ங்களையும் சேர்த்து ஒருமணி நேரமரைத்து எல்லா நன்றாகமிஸ்ரமான பின்பு மேற்படி கோமூத்திரத் தச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு ஜாமநேரமரைத் மைபோலானபின்பு குன்றிமணியளவு மாத்திரை ய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ, ங, ச.

அனுபானம்:—இஞ்சிச்சாறு, தேன், சுக்குக்கஷா யம், சோம்புக்கஷாயம், சோம்புத்திராவகம் முதலிய பகளாம்.

உபயோகம்:—அக்கினிமந்தம், பேதி, பலவகைவி ரங்கள், சன்னி முதலியவைகளுக்குச் சமயோசிதம் போல தகுந்த அனுபானங்களிலிடவும்.

## 113. காச உலாந்தகமாத்திரை.

சுத்திசெய்த வெண்காரம், சுத்திசெய்தலிங்கம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த அரிதாரம், சுத்தி செய்தவீரம், சுத்திசெய்தகாரி, மேல்தோல் சீவினசுக் குச்சூரணம், மிளகுச்சூரணம், அரிசித்திப்பிலிச்சூரண

ம் இவை வகை-க-க்கு விராகனெடை-ஐ, இஞ்சிச்சா று செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சரக்குகளைத் தனித்தனி பொடித்து ஒன்றாகக்கலந்து மூன்றுவகைச் சூரணங்க ளையும் அதிற்சேர்த்து ஒருமணிநேரமரைத்து எல்லா ம் ஒன்றாக மிஸ்ரமானபின்பு இஞ்சிச்சாற்றைச் சிறுக ச்சிறுகவார்த்து இரண்டுசாம நேரமரைத்து உழுந் துப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை—உ-க.

அநுபானம்:—ஆடாதோடையிலைக் கஷாயம், சிற்றரத்தைக்கஷாயம், சரகசாப்பால், கசகசாக்கஷாயம், அதிமதுரக்கஷாயம், லேகியவகைகள், ஷர்பத்வகைகள் முதலியவைகளாம்.

உபயோகம்:— எட்டுவகைக்காசங்கள், ஒன்பது வகை க்ஷயங்கள், ஐந்துவகைப்பாண்டுகள், சூலை, பித்த சுரம், மாறல்சுரம், சன்னி பதின்மூன்று, வாய்புலம்ப ல், விக்கல், திமிர்வாதம், மேல்மூச்சு முதலிய ரோகங் கள் தீரும்.

## 114. சுவாசக்குடோரி.

சுத்திசெய்தலிங்கம், சுத்திசெய்த நாபி, பச்சைக் கற்பூரம், கோரோசனை, அரிசித்திப்பிலி இவை வகை-க-க்கு விராகனெடை இரண்டரை, இளநீர் செல்லத் தக்க அளவு.

செய்முறை:—எல்லாச்சரக்குகளையும் தனித்தனி யே பொடித்து ஒன்றாகக்கலந்து ஒருமணி நேரமரை



த்து எல்லாம் நன்றாக மிஸ்ரமானபின்பு மேற்படி இ ளநீரைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரை த்து மிளகளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை—உ-க.

அநுபானம்:—ஆடாதோடை வேர்ப்பட்டைக்க ஷாயம், சுக்குக்கஷாயம், கடுக்காய்க்கஷாயம், அதிமது ரக் கஷாயம், முலைப்பால் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைச் சுவாசகாசங்களும் தீரும்.

### குறிப்பு.

இந்தமாத்திரையை ஊமத்தனிலைச் சாற்றிலரைத் து வெள்ளைச்சீலைத்துண்டில் தடவியுலர்த்திச் சுருட் டி நெருப்பில் கொளுத்தி வைத்துப் புகைபிடிக்க, மேல்மூச்சு, பெருமூச்சு ஆகியவை உடனே தீரும்.

மஞ்சட்கடுக்காய்த்தோல் பத்துப்பங்கு, இந்தமாத் திரை ஒருபங்கு. இவ்விரண்டையும் நூல்செய்து சுங் கானில் வைத்துப் புகைபிடிக்கமேல்மூச்சு பெருமூச்சு ஆகியவை தீரும்.

## 115 குன்ம குடோரி.

சுத்திசெய்த தாம்பிர அரபொடி, சுத்திசெய்தவெ ள்ளைப்பாஷாணம், சுத்திசெய்த பச்சைநாபி, சுத்திசெ ய்த இரசம், சங்குத்நாள் ஆகிய இவை வகைக்குப்பல ம்-க, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு, தாய் ப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் பாஷாணத்தையும் சேர்த்துத்தரைத்து இரசம் மடிந்தபின்பு மற்றசரக்குக

சில் பொடிக்கவேண்டியவைகளைப் பொடித்தும் மற்றவைகளைப் பொடிக்காமலும் சேர்த்து இரண்டுநாழிகைநேரமரைத்து எல்லாம் ஒன்றாக மிருதுவானபின்பு எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து எட்டுச்சாமநேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி அகலிலிட்டு மேலகலூடிச் சீலைமண்செய்துலர்த்திக் கவசத்திற்குப் பத்துபங்கொடை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுத்துப் பில்லையைக் கல்வத்திலிட்டுப் பொடித்து ஞை. பாலைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்துச் சின்னக்குன்றி மணிப்பிரமாண மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨.

அனுபானம்:—காலையில் இஞ்சியை அரைத்தவிழுது, சுக்கைரைத்தவிழுது, மாலையில் உள்ளியை அரைத்தவிழுது, பனைவெல்லம் முதலியவைகளாம். ஏழுநாள் ஒன்பதுநாள் வியாதிபலத்துக்குத் தக்கபடி கொடுக்கவேண்டும்.

உபயோகம்:—அஷ்டாங்கம், ருத்திரவாயு சகலமும், அறுவகைக்குடல் வாதமும், அண்டவியாதி, இடுப்புநோய், வயிற்றுக்கட்டிகள் ஆகியவைகளும் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 116. சர்வாங்க வாத குடோரி.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், பச்சைக்கர்ப்பூரம், வெடிசாரம், நவச்சாரம், இந்துப்பு, கோஷ்டம், மருட்டுமுங்கு, வசம்பு, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, கடுகு, மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, அதிவிடயம், மைசாக்ஷி,



சுத்திசெய்த எட்டிவிதை, அலரிவேர்ப்பட்டை, இவை வகைக்குப்பலம்-௧, பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்டவைகளில் இடிக்கவேண்டியவைகளை இடித்துச் சூரணித்தும் அம்மியிலரைக்கவேண்டியவைகளை அம்மியிலரைத்தும் ஒன்றாகக்கலந்து கல்வத்தில் அல்லது அம்மியில்வைத்து ஒருநாழிகைநேரமரைத்து எல்லாம் மிருதுவானபின்பு எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணம் மாத்திரைகள் செய்து உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:—நோயுள்ள விடத்தில் கூரிய கத்தியினால் அல்லது ஊசியினால் கொஞ்சம் கீறிவிட்டு மேற்படி மாத்திரையை எலுமிச்சம்பழச்சாற்றில் இழைத்து அந்த இடத்தில் தடவவேண்டும். உடனேவலி நின்றுவிடும். இவ்விதம் எண்பதுவகை வாதரோகங்களுக்கும் குளேப்பிடிப்பு சகலத்துக்கும் உபயோகப்படுத்தலாம்.

## 117. திரிலோக சிந்தாமணி.

சுத்திசெய்த இரசம் விராகனெடை-௨0, சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் விராகனெடை-௪0, இந்துப்பு விராகனெடை-௪0, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாகக்கருத்த பின்பு இந்துப்பையும் சேர்த்தரைத்து எலுமிச்சம்பழச்சாற்றைச்சிறு

கச்சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்து வெண்கலக்கிண்ணியில் வட்டமாகத்தட்டி வைத்துக்கொள்ளவும். வாயகன்றசட்டியில் எலுமிச்சம்பழச்சாற்றைச்சுவறச்சுவற ஊற்றி உலர்த்திக்கொள்ளவேண்டும். இந்தச்சட்டியில் முன்சித்தப்படுத்தின கிண்ணியை ஒரு அங்குலம் அதைச்சுற்றிலும் இருக்கும்படியாக அதைக்கவிழ்த்துச்சட்டிக்கும் கிண்ணிவாய்க்கு மிடையிலுள்ளபொருத்தில் சந்தில்லாமல் சீலைமண் செய்து அந்தச்சந்திலும் கிண்ணியின்மேலும் மணலைக்கொட்டிவிடவேண்டும். கிண்ணிக்குமேல் மணலானது நாலங்குலத்திற்குக்குறையாமலிருக்கவேண்டும். பின்பு அடுப்பேற்றிக்கமலாக்கினியாக நான்குசாமம் எரித்துக்குளிர ஆறவிட்டு ஜாக்கிரதையுடன் கிண்ணியை எடுத்தால் கிண்ணியில் பதங்கமேறியிருக்கும். பதங்கத்தைச் சுரண்டி இந்தப்பதங்கத்துடன் பொரித்தவெண்காரம் விராகனெடை-ரு, சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றைச்சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்துச் சிறுகுன்றிமணிபோல் மாத்திரைகள் செய்துலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-அ-க.

அநுபானமும், உபயோகமும்:—தேனில் அநுபானித்துண்ண எண்பதுவகை வாத ரோகங்களும் தீரும்.

வெண்ணெயில் அநுபானித்துண்ண, ஈளை, எலும்புருக்கி, பெரும்பாடு, சோமரோகம், பிரமியம் ஆகியவை தீரும்.

நெய்யில் அநுபானித்துண்ணச் சூலைரோகம் தீரும்.



## 118. சுவாசக் குடோரி (வேறு.)

மாவுப்பு, கெந்தவெடியுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, கருப்புப்பு இவைவகைக்கு விராகனெடை-அ, சதுரக் கள்ளிப்பால் பலம்-உச, ஆற்றுத்தும்மட்டிக்காய்-க.

செய்முறை:—உப்புக்களைப்பொடித்து ஓர் கலயத்திலிட்டுக் கள்ளிப்பாலையும் ஆற்றுத்தும்மட்டிக்காயையும் போட்டுக்கலயத்தின் வாய்க்குச்சில்லிட்டு இரண்டு மூன்றுசீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றி இரண்டுசாமநேரமெரித்து ஆறினபின் எடுக்க எல்லாம் கருகிப்போயிருக்கும். இதனைக்கல்வத்திலிட்டுத் தும்பைச்சாறும் தேனும் சமமாகக்கலந்து சிறுகச்சிறுகவார்த்து மைபோலரைத்துக்கடலையளவுருட்டிச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ-க.

அநுபானமும், உபயோகமும்:—தும்பைச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை இழைத்துக் கொடுக்க எல்லாவகைச் சுவாசரோகமும் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 119. சந்திரபிம்பாச மாத்திரை.

சுத்திசெய்த இரசம் விராகனெடை-க, சுத்திசெய்தநாபி விராகனெடை-உ, சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் விராகனெடை-உ, சுத்திசெய்த பால்துத்தம் விராகனெடை-உ, கடுகரோகணி விராகனெடை-உ, சுத்திசெய்த எட்டிக்கொட்டைச்சூரணம் விராகனெடை-உ, கொம்புப்பாகல் இலைச்சாறு செல்லத்தக்க அளவு, ஊமத்தஇலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் பாஷாணத்தையும் சேர்த்தரைத்து இரசம் மடிந்தபின்பு மற்றச்சரக்குகளையும் தனித்தனி சேர்த்துப்பொடித்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் நன்றாகமிஸ்ரமானபின்பு கொய்யப்பாகல் இலைச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துப் பிறகு ஊமத்தையிலைச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்துக் கடுகளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨-௩.

அநுபானம்:—பசுவின்பால், தாய்ப்பால் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவித சுரங்களும் தீரும். இதனை உபயோகித்து ஐந்து நாழிகைக்குள் சுரம் நின்று போகும்.

பத்தியம்:—மோருஞ்சாதமும்.

## 120. சுரநிவாரண மாத்திரை.

சுத்திசெய்த அரிதாரம் விராகனெடை-௧, சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் விராகனெடை-௧, சுத்திசெய்த லிங்கம் விராகனெடை-௧, எலுமிச்சம்பழச்சாறு, ஊமத்தையிலைச்சாறு இவைவகை-௧-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—முன்மூன்று சரக்குகளையும் தனித்தனிபொடித்து ஒன்றாகக்கலந்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்துப்பி



றகு ஊமத்தையிலைச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்துக் கடுகுப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨-௩.

அநுபானம்:—இஞ்சிச்சாறு, சுக்குக் கஷாயம், பனைவெல்லம் ஆகியவைகளாம்.

உபயோகம்:— எல்லாவகைச் சுரங்களும் உடனே நிற்கும்; சில சுரங்களுக்கு இரண்டு மூன்றுவேளையும் கொடுக்கநேரிடும். சமயோசிதம்போல் கொடுக்கவும்.

பத்தியம்:—புளியில்லாமல் வைப்பது உத்தமம்; அவசியமானால் அரைப்புளி கூட்டவும்.

## 121. கௌரி மாத்திரை.

சுத்திசெய்த கௌரி விராகனெடை-௧, சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் விராகனெடை-௧, சுத்திசெய்த இரசம் விராகனெடை-௧, அரிசித்திப்பிலிச் சூரணம் விராகனெடை-௧, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனெடை - ௧, பாகலிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—கௌரி, வெள்ளைப்பாஷாணம் ஆகிய இரண்டையும் கல்வத்திற்பொடித்து இரசத்தையும் சேர்த்தரைத்து இரசம் மடிந்தபின் மற்ற சரக்குகளையும் தனித்தனிபொடித்துச் சேர்த்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் நன்றாக மிஸ்ரமான பின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமமரைத்துச் சிறுபயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧, ௨.

அநுபானம்:—இஞ்சிச்சாறு, முலைப்பால், வெந்நீர் ஆகியவைகளாம்.

உபயோகம்:—வெந்நீரில் அநுபானித்துக் கொடுக்கச் சீதசுரம், குளிர்சுரம் ஆகியவைகள் தீரும்; முலைப்பாலில் அநுபானித்துக்கொடுக்க அறுபத்து நான்கு வகைச் சுரமும் தீரும்.

பத்தியம்:—சுரம் பலமாயிருந்தால் கஞ்சிகுடிப்பாட்டவும். எல்லாச்சுரத்திலும் புளியை நீக்கிவைப்பது உத்தமம்.

## 122. சஞ்சீவி மாத்திரை.

சுத்திசெய்த பொன்னரிதாரம், நீற்றி வடிகட்டின கற்சுண்ணாம்பு, சங்கு சுட்டு வடிகட்டின சுண்ணாம்பு, கொட்டாங்கச்சி சுட்டுக்கரியாக்கிப் பொடித்து வடிகட்டினது ஆக இவை வகைக்குப்பலம்-௨, கொம்புப்பாகல் இலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—அரிதாரத்தைக் கல்வத்திற்பொடித்து மற்ற மூன்றுவகைகளையும் அதிற்சேர்த்துக் கைவிடாமல் ஒருமணிநேரமரைத்துக் கொம்புப்பாகல் இலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துச் சிறுபயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧, ௨.

அநுபானம்:—இஞ்சிச்சாறு, சுக்குக்கஷாயம், தண்ணீர் முதலியவைகளாம்.

உபயோகம்:—இந்த மருந்தைச்சாப்பிட்டுப் பதினைந்து நிமிஷம் சென்று கஞ்சி குடிக்கவேண்டும். அப்



படிக்குடிக்காவிட்டால் வாந்தியாகும். இதனால் எல்லாவகை குளிர் சுரங்களும் தீரும்.

பத்தியம்:—காரமான கஷாயங்கள், காரமான வஸ்துக்கள் முதலியவைகளை உபயோகிக்கலாகாது. இதனை இரண்டுமூன்று வேளைக்கதிகம் உபயோகிக்கலாகாது. அப்படி அவசியமானால் இடையில் நான்கைந்துநாள் விட்டு மறுபடி கொடுக்கவேண்டும்.

## 123. இராமபாண மாத்திரை.

சுத்திசெய்த இரசம் விராகனெடை-௧௦, சுத்திசெய்த அரிதாரம் விராகனெடை-௫, சுத்திசெய்த கெந்தி விராகனெடை இரண்டரை, சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் விராகனெடை-௧, பொரித்த வெண்காரம் விராகனெடை-௧, மேற்றோல் சீவின சுக்குச்சூரணம் விராகனெடை அரை, மிளகுச்சூரணம் விராகனெடை அரை, திப்பிலிச்சூரணம் விராகனெடை அரை, வெற்றிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—அரிதாரம், கெந்தகம், பாஷாணம் ஆகிய மூன்றையும் தனித்தனி பொடித்து ஒன்றாகக் கலந்து இரசத்தையும் சேர்த்தரைக்க இரசம் மடிந்துபோகும். பிறகு மற்றவைகளையும் சேர்த்து ஒருமணி நேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு வெற்றிலைச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து மூன்றுசாமநேரமரைத்து ஒரு உருண்டையாகச் செய்து அதன்மீது வெற்றிலையைப்பொதிந்து மறைத்து ஒரு சாண் சதுரக்குழிதோண்டி அதில் அரையாசி மணலைக்கொட்டி அதன்மீது எருக்கம்பழுப்பை அடுக்கி அதன்மீது முன்சித்தப்படுத்தின மருந்தைவைத்து அதன்மீது எ

பூ எருக்கம்பழுப்பை அடுக்கி அதன்மீது குழிநிறைய மணலைக்கொட்டி ஒருசாண் உயரம் எருவடுக்கிப்புடமிட்டு ஆறினவுடனே எடுத்துக்கல்வத்திலிட்டு மறுபடியும் வெற்றிலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமநேரமரைத்துச் சிறுபயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧.

அநுபானம்:—தேன், முலைப்பால், சீரகக்கஷாயம், சுக்குக்கஷாயம் ஆகியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைச் சுரங்களும் தீரும்.

பத்தியம்:—ஒன்றுமில்லை; எல்லாம் உபயோகித்துக் கொள்ளலாம்.

## 124. விஷசுரக் குளிகை.

சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த அருசு, சுத்திசெய்த கௌரி இவைவகைக்கு விராகனெடை-௧வ, கோரோசனை விராகனெடை-௩ஆ, பசுவின்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சரக்குகளைத் தனித்தனி பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து ஒருமணிநேரமரைத்து நன்றாக மிருதுவானபின்பு மேற்படி பாலைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்து அரைக்குன்றிமணியெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திப்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨.

அநுபானம்:—இளநீர், பசுவின்பால் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகை விஷசுரங்களும் தீரும்.



## 125. சீதசுராங்குசம்.

சுத்திசெய்த கௌரி, சுத்திசெய்த பொன்னரிதாரம், சுத்திசெய்த பால்துத்தம், அரிசித்திப்பிலிச்சூரணம், ஆகியவை வகைக்கு விராகனெடை-௧, அறுகம்புல்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட நான்கு சரக்குகளையும் தனித்தனி பொடித்து ஒன்றாகக்கலந்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் நன்றாகமிருதுவான பின்பு அறுகம்புல் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து மூன்று சாமநேரமரைத்து மிளகளவு மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨.

அநுபானம்:—மோர், சுக்குநீர் ஆகியவைகளாம்.

உபயோகம்:—குளிர்சுரம், மூன்றுமுறைசுரம், நான்காமுறை சுரம் முதலிய எல்லா முறைசுரங்களும் தீரும்.

## 126. மாறல்சுர மாத்திரை.

சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணக்கட்டி விராகனெடை-௧, மிளகுச்சூரணம் விராகனெடை-௨, எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—பாஷாணக்கட்டியை எருக்கம்பாலில் முழுகும்படியாகப்போட்டு நான்குநாள் வைத்து ஐந்தாம் நாள் பாலுடன் கல்வத்திலிட்டு மிளகுத்தூளையும் சேர்த்து இரண்டு சாமநேரமரைத்துக் கசகசாப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ.

அநுபானம்:—மோர்.

உபயோகம்:—எல்லாவகை மாறல் சுரங்களும் தீரும்.

## 127. சீதசுராங்குசம் (வேறு.)

இரண்டரை விராகனெடையுள்ள வெள்ளைப்பாஷாணக்கட்டியைக் கொம்புப் பாகற்பழத்திற்குட் செலுத்தி அரைப்படி சிறுநீரில் கிழிகட்டித் தொங்கவிட்டு எரித்து நீரெல்லாம் சுண்டினபின் எடுத்துக்கழுவி சாமுலர்த்திக்கொள்ளவும். சுத்திசெய்த வெங்கம் விராகனெடை-உ௦, மிளகு, சித்திரமூலவேர்ப்பட்டை இவை யிரண்டையும் சமனாக எடுத்து எட்டுப்பங்கு ஜலத்திற்போட்டு நான்கிலொரு பாகமாகச் சுண்டவைத்த கஷாயம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி இரண்டு சரக்குகளையும் தனித்தனி பொடித்து ஒன்றாகக்கலந்து ஒருமணிநேரமரைத்து இரண்டுமொன்றாகக்கலந்த பின்பு மேற்படி கஷாயத்தைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துக் குன்றிப் பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ.

அநுபானமும், உபயோகமும்:—முலைப்பால் விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்து மூன்றுவேளை கொடுக்கச் சீதசுரங்கள் தீரும்.



மேற்சொல் சீனசுக்கு, சன்னராஷ்டம், நிலவேம்பு, முக்காவேளை, சிறுதேக்கு இவை வகை-க-க்கு விராகனெடை-க. இவற்றைச்சிதைத்து ஒன்றரை ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகச்சுண்டவைத்திறக்கி வடிகட்டி அதில் இரண்டு விராகனெடை தேனைக்கலந்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண வாதசுரம் தீரும்.

கொத்துமல்லிவிதை, நெற்பொரி, கோரைக்கிழங்கு, வில்வவேர்ப்பட்டை இவை வகை-க-க்கு விராகனெடை-க௦, இவற்றைச் சிதைத்து ஒன்றரை ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகச்சுண்டவைத்திறக்கி வடிகட்டி அதில் ஒருவிராகனெடை தேனைச்சேர்த்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ணப் பித்தசுரம் தீரும்.

மேற்கண்ட இரண்டுவகைக் கஷாயத்தையும் சேர்த்து அதில் இரண்டு விராகனெடை தேனையுங் கலந்து மேற்படி மாத்திரையை அநுபானித்து மூன்றுவேளை கொடுக்கக் கபசுரம் தீரும்.

தும்பைப்பூ விராகனெடை அரை, மிளகுச்சூரணம் விராகனெடை அரை, இவ்விரண்டையும் சேர்த்தரைத்து அதில் இம்மாத்திரையை அநுபானித்து மூன்று அல்லது ஆறுவேளை கொடுக்க, மாறல் சுரம் முதலிய எல்லாசுரங்களும் தீரும்.

## 128. மாறல்சுர உசிதம்.

மரக்கரியைப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்தநான் விராகனெடை-ரு, இதைக்கல்வத்திலிட்டுச் சிற்று

மணக்கெண்ணெயைச் சிறுகச் சிறுகவார்த்து ஒரு சாமநேரமரைத்து ஆறு உருண்டைகளாகச் செய்துவைத்துக்கொள்ளவும். காலையில் ஒரு உருண்டையாகவும் மாலையில் ஒரு உருண்டையாகவும் மூன்றுநாள் சாப்பிட ஒன்றைவிட்டொருநாள் வரும் முறைசுரம் தீரும்.

## 129. ஷ வேறு.

மிளகாயிலையை அரைத்தவிழுது விராகனெடை-க, இதில் ஒரு கல்லுப்பையுவைத்து விழுங்கிவிடவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையுமாக மூன்றுநாள் உட்கொள்ள ஒருநாள் மாறல்சுரம், விட்டுசுரம் ஆகியவை தீரும்.

பத்தியம்:—புளியைத் தவிர்க்கவும்.

## 130. வசூரிசுர மாத்திரை.

சுத்திசெய்த இலிங்கம், பச்சைக்கற்பூரம், பொரித்தவெண்காரம், கோரோசனை இவை வகைக்கு விராகனெடை இரண்டரை, இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளைத் தனித்தனிபொடித்து ஒன்றாகக்கலந்து ஒருமணி நேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு இஞ்சிச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்து உழுந்துப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திக்கொள்ளவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨.

அநுபானமும், உபயோகமும்:—முலைப்பால் விராகனெடை-க, தேன் விராகனெடை-க, இவ்விரண்



டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துக்கொடுக்கத் தாபசுரம் தீரும்.

இஞ்சிச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துக்கொடுக்கச் சீதசுரம் தீரும்.

வெந்நீர் விராகனெடை-க, தேன் விராகனெடை-க, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண, வசூரி சுரந்தீரும்.

## 131. அர்த்தநாரீசுரமாத்திரை.

சுத்திசெய்தவெள்ளி, சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்தலிங்கம், சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த அப்பிரகபற்பம் அல்லது செந்தூரம், தாம்பிரபற்பம் அல்லது செந்தூரம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த இரசம், சுத்திசெய்தநாபி, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, சுத்திசெய்த துத்தம், சுத்திசெய்த துருசு, இரசபற்பம் அல்லது இரசசெந்தூரம், எருக்கின்விதைப்பருப்பு, அதிமதுரம் இவைவகைக்கு விராகனெடை-க, ஊமத்தைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சரக்குகளில் சுத்திசெய்யவேண்டியவைகளைச் சுத்திசெய்தும் சூரணிக்கவேண்டியவைகளைச் சூரணித்தும் இரண்டையும் கலந்துவைத்துக்கொள்க. இரசத்தையும் கெந்தகத்தையும் தொங்கித் தரைத்து நன்றாகக்கறுத்த பின்பு முன்சித்தப்படுத்தினவைகளையும் இதனுடன் கலந்து இரண்டுமணிநேரம் அரைத்து எல்லாம் நன்றாக மிஸ்ரமானபின்பு மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒவ்வொருசாமமாக

இரண்டுநாள் அரைத்துக்குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ-க.

அனுபானமும், உபயோகமும்:—வெள்ளாட்டுமடியின் இடது காம்பின் பாலில் அனுபானித்துக்கொண்டால் இடதுபக்கத்து சுரம் நிற்கும். மேற்படி வலதுபுறத்துக்காம்பின் பாலில் அனுபானித்துக்கொடுக்கவலதுபுறத்துசுரம் நிற்கும்.

## 132. தோஷநிவாரணக் குளிகை.

கல்நார், இலவங்கம், ஜாதிக்காய், அதிமதுரம், அக்கிராகாரம், அரிசித்திப்பிலி, மேற்றோல்சீவினசுக்கு, ருத்திராக்ஷம், பவழம், முத்து, சுத்திசெய்த இரசம், சுத்திசெய்தகாரீயம், நாயுருவிவேர்ப்பட்டை, நாயுருவிவிதை, அவுரிவேர்ப்பட்டை, அவுரிவிதை, கடுகுரோகணி, நன்னாரிவேர் இவைவகை-க-க்கு விராகனெடை-க, மயிலிறகைச்சுட்டசாம்பல் விராகனெடை-உ, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்டசரக்குகளில் நாள்செய்யவேண்டியவைகளை நாள்செய்தும் சூரணிக்கவேண்டியவைகளைச் சூரணித்தும் ஒன்றாகக்கலந்து வைத்துக்கொள்ளவேண்டும். காரியத்தை உருக்கி இரசத்தில் தொக்கித்து அதைப்பொடித்து மேற்படிமருந்தில் மிஸ்ரமித்துக்கொள்ளவேண்டும். முத்தையும் பவழத்தையும் தனித்தனி பன்னீர்வார்த்து மூன்று நாளரைத்து வில்லைசெய்துலர்த்திப்பொடித்து முன்மருந்தோடுசேர்த்துக்கொள்ளவேண்டும். இந்தக்கலவையைப்பக்கல்வத்தி



விட்டு இரண்டுமணிநேரமரைத்து எல்லாம் நன்றாகமிஸ்ரமானபின்பு எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டுசாமநேரமரைத்துத் தூதுவளங்காய்ப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க.

அனுபானமும், உபயோகமும்:—முலைப்பாலில் அக்கிராகாரத்தை இழைத்து அதில் இந்த உருண்டையும் சேர்த்திழைத்து முலைப்பாலில் குழைத்து வைத்துக்கொண்டு ஒருநாழிகைக்கொரு தடவைநாக்கில் தடவிவரவும். இவ்வாறு பத்துத்தடவை செய்தால் தோஷத்தினால் நாக்குக்கறுத்திருத்தல், வறட்சி, நாவில்முள்ளுண்டாயிருத்தல், வாந்தி, தாகம், விக்கல், அரோசிகம் முதலிய ஒன்பது வகைத்தோஷமும் நீங்கும்.

### குறிப்பு.

இதில் நற்பவழம், நன்முத்து ஆகியவைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சேர்க்கும்பக்ஷத்தில் மேற்சொல்லியிருக்கிறபடி அவற்றைத்தனித்தனி பன்னீர்வார்த்தரைத்துச் சேர்க்கவேண்டியது. அப்படிச் சேர்க்காமல் எல்லாச்சரக்குகளுடனும் சேர்த்தரைத்தால் எத்தனை நாளரைத்தபோதிலும் அரைபடாமல் துண்டு துண்டாயிருக்கும். இன்னும், இவற்றைச்சேர்க்கச் சக்தியில்லாதவர்கள் நற்பவழத்திற்குப் பதிலாகப்பவழப்புற்றையும், நன்முத்திற்குப்பதிலாகமுத்துச்சிப்பியையும் மேற்கண்டபடி தனியே அரைத்துச்சேர்த்துச்செய்துகொள்ளலாம்.

## 133. மிருதுவாதிக் குழம்பு.

தேற்றான்கொட்டையைப் பன்னீர்வார்த்து இழைத்தவிழுது விராகனெடை-க, இலவங்கச்சூரணம் விராகனெடை-வ, அரிசித்திப்பிலிச்சூரணம் விராகனெடை-வ, பச்சைக்கற்பூரம் விராகனெடை-க, அக்கிராகாரத்தூள் விராகனெடை-வ, தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—பச்சைக்கற்பூரத்தைப் பொடித்து மற்றவைகளையும் சேர்த்து அரைமணி நேரமரைத்து அதன்மேல் தேனைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுமணி நேரமரைத்துக் குழம்புப் பதமாகப் பிங்கான் பரணியில் பத்திரப்படுத்தவும்.

அனுபானமும், உபயோகமும்:—இந்தக் குழம்பில் சுமார் அரை விராகனெடை யெடுத்து அரை விராகனெடை தேனும், அரை விராகனெடை முலைப்பாலும் கலந்துவைத்துக்கொண்டு ஒருநாழிகைக்கொரு தடவைநாக்கில் தடவிவரவேண்டும். இவ்விதம் சில தடவைகள் செய்யின் சுரத்திலுண்டாகும் நாவறட்சி, விக்கல், வாந்தி, தாகம் ஆகியவை தீரும்.

## 134. கௌரி சிந்தாமணி மாத்திரை.

கௌரி விராகனெடை-உ, (இதனை ஒருசொம்புப் பாகற்பழத்திற்குட் செலுத்தி, எருமைச்சாணிப்பால் படி ஒன்றை ஒரு பாத்திரத்திலிட்டு அதில் மேற்படி பழத்தைக் கிழிகட்டித் தொங்கவிட்டு அடுப்பேற்றிச் சுண்டக்காய்ச்சி யெடுத்துக் கழுவிச் சுத்தியாக்கி ஈரமில்லாமல் உலர்த்திக்கொள்ளவும்.) இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.



செய்முறை:—முன் சித்தப்படுத்தின கௌரியைக் கல்வத்திலிட்டுப் பொடித்து அரைமணிநேரம் தனியே அரைத்துப்பிறகு இஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்துக் கடுகுப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-அரை, க.

அனுபானம்:—இஞ்சிச்சாறு, முலைப்பால், மோர், பனைவெல்லம் ஆகியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைச் சுரங்களும் தீரும்.

பத்தியம்:—புளியைத் தவிர்க்கவேண்டியது. கஞ்சி அல்லது மோர்ச்சாதம் கொடுக்கவேண்டும். தேகசுபாவத்திற்குத் தகுந்ததுபோல் பத்தியம் ஏற்படுத்தவேண்டியது சிகிச்சகரின் கடமையாம்.

வைத்தியசிகாமணி முறைவிளக்கம்
முற்றுப்பெற்றது.

கடவுள் துணை.

இராஜரிஷி

வீரமாமுனி மகானுபாவர்

அருளிச்செய்த

# சூடாமஞ்சரி.

## கடவுள் வணக்கம்.

நேரிசை வெண்பா.

பிடிபெற்ற மானிடர்க்காய்ப் பேருலகி லேதோன்றிப்
பாடுபட்ட யேசு பரனிவரைப்—பாடிச்
சூடாமஞ் சரியென்னுந் தூய நூ றன்னை
யடைகவே மொழிகு வாம்.

## நூல்.

### 135. பூபதி மாத்திரை.

அறுசீர்விருத்தம்.

நேர்பொரியஞ்சுக்கு
    திரைத்தகால்காணம்நாபி
சேர்பெறுஞருக்கெந்நு
    இப்பிலிமிளகுடல்லி
கார்செறிகையான்சாற்றிற்
    கருக்குடன்சேர்த்தரைத்தே
ஏர்பெறுகுன்றிபோல
    வியலவேயெடுத்துருட்டே. (க)



எடுத்ததோர்குளிகைதன்னை
    யிரியதோரிஞ்சிச்சாற்றில்
கொடுத்திடச்சுரமெட்டெட்டுங்
    கூர்சன்னிபத்துமொன்றும்
நடுக்குவாதம்பத்தெட்டு
    நாடும்விக்கல்பத்தாறும்
தொடுத்தகுன்மமோரெட்டுஞ்
    சொல்சூலைபதினெட்டோடு. (உ)

வேறு.

எடுத்தபித்தநாற்பதுவு
    மேங்கிக்குடிபோமிவையன்றிக்
கடுத்துவருமாபூகமொடு
    கதறிக்கடித்துவெறிகொண்டு
பிடித்தபேயும்பின்வாங்கும்
    பேசும்பைத்தியரோகமுடன்
அடுத்தபோதேபோடிவிடு
    மப்பூபதியாங்குளிகையிதே. (௩)

### 136. விஷ்ணு சக்கரக்குளிகை.

வேறு.

மருவுகாயபஞ்சதிலிங்குதமும்
    வாய்த்தகாந்தமற்கெந்தகமோரிடை
சருக்குரோகணிசார்புடையிந்துவுந்
    தக்கதிப்பிலிசுக்குமரீசமும்
மருவுநேரிடைகொண்டுகொள்தேசியின்
    வாய்த்தசாற்றிலரைத்திடுசக்கரம்
பொருவுருண்டைபயறளவாகவே
    போற்றுந்தேனிஞ்சிச்சாற்றிலுரைத்திடே.

இடிகபாலவகையொடுபிளிச
 மேறுபித்தமிசைந்தெழுவாயுவும்
முடுகுவாதமகோதரமுஞ்சயம்
 முற்றுஞ்சோகைசுழிய்நிசாரமும்
கடிகவேர்வையமுற்றல்சுரங்களுங்
 கண்டெரிவிடுப்பில்லோயற்றிடும்
வடிவிவேலேந்தியசெங்கைமுருகனுர்
 வணங்குகையிற்றெருசெக்கராமமே. (௫)

## 137. அதிசார கேசரம்.

நாவியுடன்மாய்கொட்டைமுத்தக்காசு
 நல்லபொரிக்காரமுடன்குடசப்பாலை
ரவிவிழைசரிபாகங்கூட்டிக்கொண்டு
 கஞ்சாவின்நீர்ச்சாற்றிலரைத்தேயுண்டை
மேவிவிடுத்தேற்றுணின்வித்துப்போலே
 விரும்பியுண்ணுப்தப்பிவிதேனனுபானத்தில்
ஆவிபெருவயிறோடல்மாற்றுங்கண்டா
 யதிசாரகேசரத்தினைடவுதானே. (௧)

## 138 சர்வசுரத்திற்குங் குளிகை.

நாத்தமரைநாவியரைசிரகமுமரையாங்
 நாலங்குடுவ்ரானுருசொன்றுகெந்தகமுமொன்று
பித்திரவரிதாரமொன்றுபாகலிலைச்சாற்றில்
 விரைவாகவரைத்துண்டையற்றளவுசெய்தே
ஒத்தவனுப்பானமறிஞரைத்துள்ளேகொள்ள
 வுடலிலுள்ளசுரவகைகளவையொருங்கேநீரும்
அத்தனருளாலிதுவுஞ்சத்தியமாமென்றே
 யறிவறிந்தோர்சொன்னபடிபரிவாகச்செய்யே. ()



## 139. இரணாங்க வயிரவன்.

வேறு.

கரியமிளகுநேர்வாளம்
 கடுக்காய்சுக்குவெண்காரம்
முரியநாபிபரிதார
 மொளிசேரிரதம்பாஷாணம்
அரியநொச்சிச்சாறதிலு
 லரைத்தேதாருண்டையபறளவாய்
இரவும்பகலுங்கிழலுலர்த்த
 விரணாரங்கவயிரவனோ. (அ)

வேறு.

நக்கருராருப்மாமுனிவோராருள்
மெய்க்கவேயுளமீதிரிலுட்கொண்டு
சுக்குநீரிலோருண்டையுரைத்திட
விக்குணமதிற்றீர்விளையுமெதனில். (௯)

தக்ககாய்ச்சல்குளிர்நடுக்கல்வெப்பு
முக்குளிகையிற்றுவ்பறந்தோடிடும்
புக்கநாள்மூன்றுமுப்பும்புளிப்புகை
நீக்கிநீக்கியேநீருமுட்கொள்ளுமே. (௧௦)

## 140. சன்னிவாத சுரக்குளிகை.

வேறு.

வெண்காரிரதம்திரிகடுகு
 மிருத்கவிந்தகெந்தகமும்
நண்பாலோரொன்றொருகழஞ்சு
 நலஞ்சேர்வாளமிருகழஞ்சு

முன்பார்கடுகுரோகணியு
முறைவேனான்குகழஞ்சாய்சி
வன்சேர்முலைப்பால்தனிலூ
சாமமரைக்கும்வகையாமே. (௧௧)

வருந்தியரைத்துவழித்துருந்து
வகைபோலுண்டைப்பிரமாணம்
மருந்தமிஞ்சிச்சாற்றிலிட
மருவுங்குணங்கண்டொவ்வொன்றா
யிருக்கக்கொடுத்தப்பத்தியமுந்
திறமாவியற்றிக்கூசாம
லிருந்திப்படியேசனிவாத
சுரத்துக்குண்டையிடலாமே. (௧௨)

## 141. இரணரங்கவயிரவன் (வேறு.)

இடராஞ்சன்னிசுரம்போக
வின்னுங்குளிகைவகைகேளாய்
தொட்டேவேகலமாம்புளிப்புநனி
சுட்டாம்பற்பமிருகழஞ்சு
புடைவேசெயியும்பூரணிப்பூ
பொருந்துமிரதமுமெருமுட்டை
இடவே கழஞ்சுமோரொன்று
மிவையுமிஞ்சிகொல்கொள்ளே. (௧௩)

கொள்ளுங்கிறைபேகொண்டதற்பின்
குமுறவரைக்குமிலைச்சாறு
விள்ளுமாறுவெற்றிலையாம்
விழுநீர்பிழிந்திட்டிலரைத்து
உள்ளேகொள்ளவுழுந்தளவா
முருண்டைதன்னையுருட்டிபயின்



தென்னும்கல்லமுலைப்பாலில்
தெரிந்திசன்னிசுரம்போமே. (௧௪)

## 142. குசிகாபரணம்.

### வேறு.

வெண்காரம்சேர்வாளமிரதமனோசிலையும்
மிருகமிருகிரோகணியுமிலுப்பைப்பூசுக்கு
பண்பார்குந்திராக்கமொடுதிப்பிலிகெந்தகமும்
பரிவினுடன்வகைமூன்றுகழஞ்சரைக்குஞ்சாறு
நன்பாருங்கரிப்பான்பின்முருக்கிலைபின்சாறு
நன்றாகவகையொன்றுக்கொருசாமமரைத்தே
யென்சேருங்குன்றியளவாய்க்குளிகைசெய்தே
யியல்பாகவுலர்த்தியிஞ்சிச்சாற்றிலிடே. (௧௫)

இப்படியேகுசிகாபரணமெனுங்குளிகை
யியல்பர்கமுன்றுமாகரிந்சியின்சாற்றிட்டால்
செப்பரியசன்னிபதின்மூன்றுமுடன்தீரும்
திகழ்முறுங்கைச்சாற்றிலிடக்குன்மமறுதிரும்
மைப்படியுங்கண்மடவாயிரதமெனுஞ்சொல்லாய்
வகையாகயாமுரைக்குங்குளிகையின்பத்தியங்கேள்
சைப்புடனேபுளிப்பிவிப்புகார்ப்புறுவர்ப்போடு
காதலியுமெதிரினிலேகாணுமொண்ணாதே. ()

## 143. அக்கினிகுமாரன் குளிகை.

### வேறு.

செந்தகம்வீரகணாட்டிங்
கார்மனோசிலைபிரசம்
அந்தமாங்காந்தம்பன்னா
கரபொடியைபத்தாறு
குந்திபருமிச்சாற்றி
லிருசாமமரைத்துக்கொண்டு

விந்தையாயுலர்த்திப்பின்னர்
மிகுமொருசட்டியிட்டே. (கஎ)

இட்டகன்மருந்துதன்னைமேல்பாயோர்சட்டியிட்டே
திட்டமாய்மூடிமீதுசீலைமண்செய்துபின்னர்
வட்டமாயெருவடுக்கிவைத்தபுடமதிட்டே
குட்டஞ்சேர்கரிப்பான்சாற்றிலரைத்ததன்னைகுன்றி
[யாக்கே. (கஅ)

ஏற்கவேகுளிகைமேரி
மிராணிக்காமிஞ்சிச்சாற்றில்
நாக்கியசன்னிக்காருங்
கருந்தேளில்வாயுநீரும்
சோக்கருப்பவுரிசேர்வடை
ஆண்டிரிகநேருநோயில்
வாக்கினிலக்கினிகுமாரன்
குளிகையாம்வழுத்தலாங்காலே. (கசு)

144. ஆனந்தபயிரவன் குளிகை.

வேறு.

சாதிலிங்கம்நாபிரசந்திரிகமேவெண்காரம்
தக்கவகைகெந்தியும்விராகனென்றுக்கூட்டி
ஓதெலுமிச்சம்பழச்சாற்றிருசாமமரைத்தே
யுண்டைபயறளவுலர்த்திதிப்பிலிசேகந்தில்
குதசெய்யுஞ்சுரந்திருக்குஞ்சமயிஞ்சியிற்போகு
சொலவிடயஞ்சாதிக்காய்மிராம்புமிராணிக்காம்
வாதசன்னிமுருங்கைத்தோல்கொச்சிமிலைச்சாற்றில்
வசமாகவானந்தவயிரவனாமிதுவே. (உ0)

145. ஷை வேறு.

சந்தகங்கழஞ்சுகாரி
கழஞ்சுமேன்கபிக்காய்முக்காம்



அந்தமாஞ்சாதிலிங்க
மார்நெல்லியுமுள்ளிமுக்கால்
மூர்த்ததிப்பிலியுமூன்று
காசிடைமுடிகக்கூட்டிக்
கொந்துசேர்நெருஞ்சிச்சாற்றி
லொருசாமமரைத்துக்கொள்ளே. (உக)

கொண்டமாமருந்தைக்குன்றி
யளவினில்குளிகைசெய்து
மண்டியநிழலுலர்த்தி
வருமிஞ்சிச்சாற்றிலூட்ட
மிண்டுசெய்சனியல்லாமல்
விஷசுரமனைத்தீரும்
பண்டரும்பெரியோர்சொன்ன
பத்தியம்பயற்றின்கஞ்சி (உஉ)

146. சர்வசுரபேதிக்குளிகை.

வேறு.

சுக்குமிளகுதிப்பிலியுந்
தூய்யகடுக்காயிந்துப்பு
மிக்ககடுகுரோகணியும்
விளம்புகெந்திரதங்கழஞ்சி
ஒக்கச்சரிகொள்சேர்வாள
மொன்றுபடவேயெலுமிச்சைத்
தக்கபழத்தில்மிளகுண்டை
சரியாயிடுகவிரேசனமே
வெக்கேசிதற்குப்பரிமாற
மிருந்தாகழியிற்பாற்கஞ்சி

சொன்னோர்சுருகாலன்டையிலே
சுரமுங்குளிரும்பலவுமறும்
முன்னோருரைத்தமொழிகண்டு
முயன்றுகடவுளடிபோற்றி
யின்னபடியேசெய்தாக்கா
லிருள்போந்திபமெனலாமே. (உ௫)

## 147. சர்வசுரக்குளிகை.

### வேறு.

இரைவெள்ளைவாளமும்வெண்காரமுமேகமுஞ்சா
யிலற்றைலிங்கத்துநிறையின்வேரொட்டொன்றுங்கா [ய்ச்சி
விரைகமழுங்கதோயத்தில்லிழுதுபடவரைத்தோர் [ளர்
மிளிர்கலிகாய்க்குளிகைசெய்துநிழலுலர்த்திப்பின்
உரைசெய்புளிவிரையளவுவெல்லத்திற்குளிகை
பொன்றிடவேயிருசாமத்தற்றசுரந்தீரும்
பரிவுடனேபத்தியங்கேள்பொரியரிசிக்கஞ்சி
பண்புடையசர்வசுரக்குளிகையிதுதானே. (உ௬)

## 148. ஸ்ரீராமபாணம்.

இலவங்கங்கெந்தகத்தோடிபறுபிபிரத
மினவசமினோர்பங்குதபிபிரமாகக்கூட்டித்
தலமாகுநெருஞ்சிபுளியிலைச்சாற்றில்வெற்றைச்
சதுருடனேயொவ்வொன்றுக்கிருசாமமரைத்து
நிலவுருண்டைகுன்றியளவாகநிழலுலர்த்தி
நிச்சயமாய்வாதசுரஞ்சேத்துமசுரத்திற்குப்
பறைடையவிஞ்சிச்சாற்றிருகுளிகையிட்டால்
பலிதமாம்ஸ்ரீராமபாணமிதுதானே. (உ௭)



## 149. மேற்படி வேறு.

சாதிலிங்கமிருகழஞ்சுவெள்ளைப்பாஷாணஞ்
சார்விடமுங்கழஞ்சுதனிச்சுத்திசெய்தே
எதமிலாக்கருமத்தைச்சாற்றினைவிட்டேதா
னியல்கடிகைநாலரைத்துக்கடுகளவாவுருட்டி
நீதமுடனிழலுலர்த்தியொருமாதஞ்சென்றால்
நிச்சயஞ்சர்க்கரையாதல்நெற்பொரியிலாதல்
கோதில்ஸ்ரீராமசரமுன்றுநாள்கொடுத்தால்
குளிர்சுரம்போம்பாற்கஞ்சிபத்தியமாக்கொள்ளே.

## 150. சர்வகுலாந்தகக் குளிகை.

இலவங்கஞ்சாதிக்காய்பச்சைக்கர்ப்பூர
மிரதமுடன்கெந்தகமுமொருநிறையாப்பொடித்
குலவியதோர்நேர்வாளமிருகழஞ்சுகூட்டிக் [துக்
குமரியின்சாற்றாலரைத்துக்குளிகையுழுந்தளவா
நிலவியதோர்நிழலுலர்த்திச்சீரவகையறிந்து
நிச்சயமாயதுப்பானச்சர்க்கரையிலிட்டால்
சலமுடையசுரமெட்டுமுக்கடிகைதனிற்போம்
சர்வகுலாந்தகனிதற்குப்பத்தியமுமில்லையே. (உ௮)

## 151. நாளையென்பான் நாராயணக் குளிகை.

வெண்காரம்படிக்காரம்வெள்ளைப்பாஷாணம்
விதமுடையவிம்மூன்றுஞ்சமனாகக்கூட்டிப்
பண்பாருமந்துங்காய்விரைபோக்கியுள்ளே
பரிவுடன்வைத்துநன்றாய்க்கயிறுகொண்டே
ரண்பாகமூன்றுகரம்நெல்லினில்வைத்தவித்தே
யெடுத்துநொச்சியிலைச்சாறுவிட்டரைத்துப்பாம்
நன்பாகநிழலுலர்த்திப்பாகலிலைச்சாற்றில் [
நாளையென்பார்சுரமினிடச்சுரம்போங்கண்டறு

## 152. குளிர்சுரக் குளிகை.

சந்தனத்தைப்பரைத்தபொடியொருமூன்றுகழஞ்சு
தனில்வெள்ளைப்பாஷாணமிருகழஞ்சுகூட்டி
வித்தைசெறிமுலைப்பாலைச்சிறுகவார்த்தரைத்து
மிளிர்கடுகாய்க்குளிகைபொன்றுபசுவின்வெண்
நந்திலாவெந்நீரிலாதலுள்ளேகொண்டு [ணெய்தனில்
நலமுடையசிறுபயறுமுருங்கையிலைபரிசி
வெந்தகஞ்சிபத்தியங்கொள்ளற்றையிராத்திரிக்கு
விரைகமழும்பசுவின்பால்வார்த்தசனம்விரும்பே

## 153. சர்வசுர சங்காரக்குளிகை.

கெந்தகம்நேர்வாளமிவைவகைதனக்கோர்கழஞ்சு
கிளர்சாதிலிங்கமரைக்கால்கழஞ்சிரதங்கால்
முந்தியதோர்திப்பிலிபன்னிருகழஞ்சுசுக்கு
முதிராமனூற்கழஞ்சுகடுக்காயென்கழஞ்சும்
இந்தவகைமருந்தெல்லாமாவரைக்கூட்டி
யியல்பானநீர்வார்த்துக்கல்லுரலிலரைத்துச்
சிந்துமிளகிற்சிறியகுளிகைதன்னைச்செய்தே
சீராகநிழலுலர்த்திச்செப்பில்வைத்துக்கொள்ளே;

கொண்டதொருகுளிகைபசுவின்பாலிற்கொடுக்கக்
கூறியதோர்மாறல்விடாக்குளிர்சுரமுந்தீரும்
இஞ்சியுங்கற்கோசலத்திலிங்கவெறுப்பும்போ
தலமாமியல்பானதயிர்வடித்தநீர்வாதந்துரத்தும்
சலிபன்றதலைநோவுதாபசுரம்வந்தா
செலவுருவின்தபரபரப்புக்குமிளகுநீராகும்
கிட்டயிஞ்சிச்சாற்றிருமல்காமாலையிளைப்பு
றமைபெறந்தோடம்பரணுளாசர்வசங்காரமிதே. (௧௨)



## 154. நான்குநாள் மாறலுக்குக் குளிகை.

வேறு.

எலிப்பகைதன்னைநல்லவெருக்கதின்பாலில்விட்டே
கலிப்பறநான்குநாளுஞ்சென்றபின்னெடுத்தேநன்றாய்க்
கலிப்புறவரைத்தேயுண்டைகடுகுபோற்செய்துமோரில்
சலிப்பறக்கொள்ளில்நான்குநாள்மாறற்சுரம்போந்தா
னே. (௧௩)

## 155. ஷை வேறு.

வேறு.

காயமிரதங்கெந்தகமும்
நலமாயொவ்வொன்றிருகழஞ்சு
மேவுமொருகாசெடைவிங்க
மிக்கயிளகுகாசாறு
தாவில்மருந்தைப்பொடித்துவெந்நீர்
தன்னிற்குழைத்துப்பயறளவாய்ப்
தூவில்குளிகையுடன்கொள்ள
வுடனேமாறலொழிந்திடுமே. (௧௪)

## 156. இலகு ஆனந்த வயிரவன்.

வேறு.

காவிலிங்கஞ்சிலையுடனேகெந்தகமுஞ்சமனு
கன்றுகத்தேசிச்சாற்றரைத்துடனேபயறு
மேவியதோர்குளிகைநிழலுலர்த்திவொருகுளிகை
மிருந்தனிற்சர்க்கரையில்பனைவெல்லத்
தாவில்சுரமனைத்தும்போம்வாயுவுக்குக்காய
தனைக்கூட்டிவிளக்கெண்ணெய்தன்னிலிட ராம்
லுவில்சன்னிதிரிகடுகுப்பொடியுமன்றுந்தேனு
முடன்கூட்டிக்கொண்டுகொடுத்திடப்போம்

## 157. பிரதாப்லிங்கேசுரன் குளிகை.

தாரமுடன் கௌரிவெள்ளை வகைதனக்கோர் கழஞ்சு
தனியிரதமரை யுத்தம்கால் துரிசே காரமரைக்கால்
பிருடைய முலைப்பால்வார்த்தரைத் தருங்கடையதுப்
பிரியமுடனி முலர்த்தியப்பாலிற் கொதிக்கத்
தீரியவிடச் சுரந்தீர்த்திடுந்துயிரிற் கொடுக்கத்
தில்லைமுடன் மாறல் குளிர்சுரந்திருமிதற்குப்
பாரதியப் பத்தியமுமுன்றோசப் பாராய்
பண்புள் பிரதாபலிங்கேசுரன் குளிகையாமே. ()

## 158. சுராங்குசக் குளிகை.

இரதமுடன் கெந்தகமு நாவியு மோரளவா
யெவ்வளவு மத்தின் விரையபல் பாகங்கூட்டி
யிரதமுடன் சரிப்பாமைத்தையிலைச் சாறு
விட்டிரண்டு நாளரைத்துக் குன்றியளவாக்கிச்
சாதமிஞ்சிச் சாற்றில் விட்டிடவுமுங்காய் சுரம்போம்
தவறின்றி சீதசுரம் நான்மாறல் துவிரும்
புரையறவே யிம்மருந்து பயமுமொன் றுகாளாம்
புளியுமுப்பு நீக்குசுராங்குசக்குளிகை தனக்கே. ()

## 159. கர்ப்பூராதிக் குளிகை.

சாதிக்காய் கெந்தகத்தோடிரதமிலவங்கம்
சதுருடையப் பச்சைக்கர்ப்பூரமிவை கழஞ்சு
தலமா ரச்சுத்திசெய்தவர்கள் திருக்கழஞ்சு
சது நியிவைகுமரிச்சாற்றரைத்துக் குன்றினாவாய்
செல்வுருண் ணமன்றிகிமுலர்த்தாயுலர்த்தி
திர் பர்சரிரம்வகைய சர்க்கரையிலிட்டால்
றடை துஞ்சுரமுன்றேமுக்காலு ழிகையில்
வசமாகுங்கர்ப்பூரக்குளிகைவகையிதுவே. (௩அ)



## 160. இரச பூபதி.

செல்விக்காய்க் கெந்தகமோரா விரதமாறு
நிகழ்த்திய தாய்ப்பூரமறு கழஞ்சனைத்துங்கூட்டிப்
புல்லுசெருப்படிச் சாற்றிலொருசாமமரைத்துப்
போதுமென்றபின் மிகவினைவி லுண்டைசெய்து
சொல்காசிக்குப்பியிலிட்டேபலப்பங்கல்லால்
சுகமாகமூடி பெருசீலையின்மண் செய்தே
நல்லபுதுச்சட்டியிலே மணல்சேர்த்துக் குப்பி
நன்றாகச்சாய்த்து வைத்துமேலு மணல் சொரிந்து
மெல்லவொருசட்டி கொண்டு டையின்றிமூடி
வீறுசீலையின் மண் செய்து பினும் விரும்பே. ()

விரும்பியனல் மூன்றுவகை கேள் நீபமிரண்டு
மிருகமலமிரண்டு மற்றதற்கிரட்டி யெரித்துத்
திரும்பவெடுத்தாறவைத்து க்குளிகை யெலாமொன்றாத்
திறமாகவிஞ்சிச்சாற்று லரைத்தபின்னர்
அரும்புபடப்பருத்தி விரையளவாகவுருட்டி
யக்குளிகையிஞ்சிச்சாற்றிலரி பமுலைப்பாலில்
தருக்குள்ளிட்டவித்தசாற்றிலுறக் கொடுக்கச்
சர்வசன்னிபோமிரசபூபதியாமிதுவே. (௪0)

## 161 சுரகேசரி.

வேறு.

மஞ்சளுப்பி வெண்காரம்
மதிக்குங்கெந்திவாய்விளங்கம்
வஞ்சமில்லாத்திரிகடுகு
வகையொவ்வொன்றுக்கிரண்டரையாம்
கஞ்சபோக்கிசேர்வாள
நல்லபருப்புயொன்றேகால்

அஞ்சக்கசக்கும்வேம்பினிலை
யன்பாயிருபதுடன்கூட்டே. (௪௧)

ஆகாரப்பத்தொன்றேகா
லாவிலீர்விட்டேயிருநாள்
வேகமானகொடிவேலி
வேர்த்தகஷாயத்தைந்தாநாள்
பாகப்படிநாளேழரைத்துப்
பருத்திவிதையினளவுண்டை
சோகம்போகச்செய்திதனைச்
சுரத்திற்கிஞ்சிச்சாற்றிலிடே (௪௨)

## 162. திருநீலகண்டம்.

வேறு.

சுத்தம்வெள்ளிபாஷாணமுன்றுடன்
சொல்லும்வாளமிரண்டொக்கக்கூட்டியே
மற்றசால்திரவேதியுமொன்றதாய்
வபக்கமோரிலரைத்துப்பயறுபோல்
சித்தனாருளாலேபுரிந்திட
நீலகண்டனெனும்சொற்குளிகையாம்
இத்தலத்தினில்மோரிற்கொடுத்திட
வேகுமெங்குளிரானசுரமெலாம். (௪௩)

## 163. மிருத்தராசிக்குளிகை

வேறு.

சுத்தமரைகாயமரைசீரகமுமரையாந்
துலங்குமின்றதுருசொன்றுகெந்தகமுமொன்று
வெற்றியரிதாரமொன்றுபாகலிலைச்சாற்றில்
விரைவாகவரைத்துண்டைபயற்றளவுசெய்தே



புற்றவனுப்பானமதிலுரைத்துள்ளேகொள்ள
வுடலிலுள்ளசுரவகைகளனைத்துமுடன்தீரும்
அத்தர்சொன்னமித்ராசியிம்தன்றோராரு
மறியவறிந்தோர்சொன்னபடியடைவாகச்செப்பே.

## 164. அர்த்தநாரீசுரன் குளிகை.

சாதிலிங்கங்கெளரிபப்பிரேசுமரிதாரந்
தாம்பிரமனோசிலைகெந்தகம்வெள்ளையிரதம்
கோதில்சேர்வாளமதுமெழுகினோடின்றுவங்
குலப்புரண்டைப்பழந்துருசித்தமதுதாமும்
நீதியதாயொவ்வொன்றுசமனிறுத்துப்பின்னர்
நிலைத்தபன்றிப்பித்துடனேமீன்பித்துங்கூட்டித்
தீதகலுங்கொடுவேலிவெந்தகசுநீரும்
திகழலகைக்கொமட்டிச்சாறதுவுமுடன்கூட்டே.

கூட்டிகொர்த்திலைக்கிழங்குக்கஷாயத்தினோடு
குலவிபன்னீர்வாளக்கஷாயமதுஞ்சேர்த்து [ர்
காட்டுபித்துமுதலாசேர்வாளமிருக
நன்மருந்தொவ்வொன்றுமொருநாளரைத்தபின்ன
வாட்டடங்கன்றுப்கடினளவுண்டைவகுத்தே
வளமைபெறநிழலுலர்த்திவைத்தெடுத்தபின்னர்
ஆட்டுப்பாலதனிலொருகுளிகையுள்ளேகொடுத்தா
லம்பிரொருபுறச்சுரம்போமர்த்தவீசுரனே. ()

## 165. விஷச்சுரக்குளிகை.

வேறு.

கெந்தகமிரதாபிகேடிலாமிளகுகாரம்
வெந்தசேர்வாளந்தன்னைவிஷந்தன்னிச்சமனாக்கூட்டிப்
முந்துபூசணிப்பருப்புமுன்னொண்டைவிரவிபங்கீர்
தந்தரைத்துமூந்தினுண்டைதானுணச்சுரவிஷம்போம்.

## 166. ஆனந்தவயிரவன் குளிகை.

எத்திவிசாதிலிங்கமிளகுவெண்காரமெட்டு
தேற்றியவிராகனுபிசுக்குமிப்பாதிகூட்டி
ஆற்றுநற்பழத்தின்சாற்றிலரைத்துநற்குன்றிபோலே
போற்றியுருண்டைதன்னைப்புகழ்ந்தாளமயிழ்ந்துசேர்த்
தே. (சஅ)

சேர்த்ததைச்சன்னிக்கின்று
திரிகடுப்பொடியிலீயப்
பேர்த்திடுஞ்சுரத்தாக்கின்று
பிரமேகத்தனக்குக்கன்னல்
ஆர்த்திடுஞ்சாற்றிற்கொள்ள
வினைத்தும்போம்பெரியோர்சொன்ன
வார்த்தைபொய்யில்லையானந்த
வயிரவன்குளிகையீதே. (சகூ)

## 167. மேற்படி (வேறு.)

வேறு.

காபிருதயமேருவிலேகெந்தக
நல்லலிங்கம்வெண்காரஞ்சமவிடை
நீலிவேபபழச்சாற்றிலரைத்துநீ
கிலைத்தவுண்டைபயறளவேசெய்து
மேவுசன்னிக்கோரிஞ்சியின்சாற்றினில்
மிக்ககன்னிமுலைப்பாலில்சேர்த்திட
ஆவிதன்னைத்தளராமற்காத்திடு
மாதியானந்தவயிரவன்குளிகையே. (ரு0)

145



## 168. கிருமிக்குளிகை.

வேறு.

மிளகுசுக்குகடுக்காயைந்து மிருந்தவாமணக்குமுன்று
வளமுள்ளவாளமேழுவரும்பிள்ளைச்சாற்றரைத்து
உளமகிழ்பழத்தில்தேனிலுகந்துநீர்கொள்வீராகில்
தளமிகுங்கிருமிசீதஞ்சடக்கெனத்தள்ளுங்காணே. ()

## 169. இதுவுமது.

வேறு.

கடுகுரோகணிகாக்கணஞ்சாரணை
காரந்திப்பிலிமிளகுஞ்சிவதைமேவ
இந்துசமன்கொள்ளிவையிடைபாதியா
மிலங்குவாளப்பருப்பதுங்கூட்டியே
முடிகலானபிரமியின்சாற்றினால்
முற்றுமேயரைகுன்றியளவிடக்
கொடியபிற்றுக்கிருமியுஞ்சீதமும்
கூட்டுடன்விழும்வாட்டமுமில்லையே. (ருஉ)

## 170. கோடாசுழிக்குளிகை.

வேறு.

நல்லகுருந்தங்கெந்தகமுநவிலரசாயகாரமுடன்
சொல்முப்பலையுந்திரிகடுகுதொடர்மால்நாரமிவைசமனு
எல்லாமும்போனேர்வாளமிசைந்துகொண்டங்கெழிற்
[குழியாங்
கல்லிற்கையாந்தகரைதன்றாற்கடிகவரைத்தேயுண்டை
செயே. (ருக)

உண்டைகுன்றிநேர்செய்தே
யுண்பாய்வெல்லம்பாலரடை

கண்டிற்பித்தமகோதரமுங்
காணுமிருமல்சலோதரமும்
கொண்டகுன்மஞ்சோகையுடன்
கொழுத்தமலக்காரிவைகளறும்
பண்டிபெரியோர்சொன்னபடி
பாலும்பழமும் பத்தியமே. (௰௪)

## 171. இராமபாணக்குளிகை.

கௌரிசுத்தமரிதாரங்
ளொருமூன்றுமோரிடையே
பவுரிமத்தஞ்சாற்றுடனே
யரைத்தேயுண்டைபயற்றளவு
குலிபொறுக்கிப்பொடிசெய்து
கொடுப்பிரிஞ்சிச்சாற்றுடனே
தவறுநீக்குங்குளிர்சுரமும்
சாருமிராமபாணமிதே. (௰௫)

## 172. அழகியசோக்கன் குளிகை.

செந்நிறப்பிலிவெங்காரம்
ளொருமிரதமுரோசனையு
முந்துவாளஞ்சமனாக
முன்னுபாகற்சாற்றரைத்துச்
சந்தக்குன்றிபோலுருட்டித்
தாபசுரத்துக்கொளேரில்
உந்தக்கொடியசிதசுர
முற்றசுரங்களோடிடுமே. (௰௬)



## 173. குளிர்சுரவுண்டை.

வெண்பாஷாணங்கழஞ்சுசுத்த
மிகாமனிரண்டுகழஞ்சேகொள்
நண்பாந்துருசுமரைக்கழஞ்சு
நன்றாயிவைசேர்முறைகூட்டிப்
பண்பாங்கல்வந்தனிலிட்டுப்
படியாருமத்திலைச்சாற்றில்
வண்சேர்மைப்போலரைத்துண்டை
மதித்துக்கடுகுபோலுருட்டே. (௰௭)

உருட்டியுண்டைபகப்பாகி
லொன்றுகலந்தேயுறுத்துமிக
வெருட்டுங்குளிர்தானுடன்வந்து
மேவாழியிரண்டிருக்கத்
தெருட்டிக்கொடுக்கக்குளிர்சுரந்தான்
சிதறியோடுமதனாலே
யுருட்டிவிடப்பட்டிருந்தவுட
லுடனேதிடமாமுவந்துசெயே. (௰௮)

### வாழ்த்து.

### நேரிசை வெண்பா.

சொற்சுர மஞ்சரியைச் சூழ்ந்துபடிப் போர்கேட்போர்
கற்றிம் முறைப்படியே காசினியில்—வெற்றிமிகச்
செய்வோர் மிகவாழ்கத் தேர்ந்திவ் வயித்தியத்தா
லுய்வோரும் வாழ்க வுவந்து.

சுரமஞ்சரி முற்றுப் பெற்றது.

கடவுள் துணை.

இராஜரிஷி

வீரமாமுனி மகானுபாவர்

அருளிச்செய்த

# சுரமஞ்சரி

## முறைவிளக்கம்.

விண்ணப்பம்.

வைத்திய நண்பர்களே!

இந்தச் சுரமஞ்சரியானது மிகவும் அருமைவாய்ந்த நூல். சுரத்துக்கே உபயோகப்படக்கூடிய பலமுறைகளையும் ஒரே சேர்க்கையாகத் திரட்டியமைத்த இந்நூல்போன்ற சிறந்த நூலை உலகத்தில் காண்பதரிதாகும். இதிலுள்ள முறைகளெல்லாம் எமது பரம்பரையிலும் பெரும்பான்மையும் அனுபவப்பட்டுவந்திருப்பதால் ஒவ்வொன்றும் சிறப்புற்றதென்பதில் தடையில்லை. இத்தகைய அருமைவாய்ந்த முறைகளெல்லாம் உலகத்தாருக்குப் பிரயோசனப்படவேண்டுமென்பதே எமதுகருத்து. அதனாலேயே இதுவும் மற்றவைகளும் சில்லரை நூல்களாயிருந்தபோதிலும் பலவற்றைத் திரட்டிக்கூடியவரை பிரயாசைப்பட்டு அச்சிடத்துணிந்தோம். இந்நூலின் பாடல்களெல்லாம் இலகுவில் பொருள்விளங்கக்கூடியவைகளாயினும் செய்பாகம் முதலியவைகளில்



சமது சந்தேகம் எற்படக்கூடுமாகையால் அவையும் இல்லாதிருக்கும்பொருட்டு நாம் நமது அனுபவப்படி மற்ற நூல்களுக்கு எழுதியதுபோலவே இதற்கும் இவ்விளக்கத்தை எழுதிச்சேர்த்தனம். இதுபற்றி எல்லோரும் திருப்தியடைவீர்களென்றே எண்ணுகிறோம்.

### 135. பூபதிமாத்திரை.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த கெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த நாபிச்சூரணம், மேற்றோல் சீவின சுக்குச்சூரணம், மிளகுச்சூரணம், அரிசித்திப்பிலிச்சூரணம், வறுத்திடித்த கருஞ்சீரகம், வறுத்திடித்த கொத்துமல்லிச்சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-௩வ, பொரித்தவெண்காரம் விராகனெடை-ரு, கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:——இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக் கருத்தபின்பு மற்றச்சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து ஒருசாமநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு கையாந்தகரைச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்துக் குன்றிமணிப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-ஒ-க-கஉ-உ.

அனுபானம்:—இஞ்சிச்சாறு, தேன், சுக்குக்கஷாயம், வெற்றிலைச்சாறு, வெற்றிலை, சர்க்கரை, பனைவெல்லம் முதலியவைகளாம்.

உபயோகம்:—அறுபத்துநான்குவகைச் சுரங்கள், பதின்மூன்றுவகை சன்னிகள், எண்பதுவகை வாதங்கள், பதினாறுவகை விக்கல், எட்டுவகைக்குன்மங்கள்,

பதினெட்டுவகைச் சூலைகள், நாற்பதுவகைப் பித்தங்கள், அறிவு மப்பத்தியம், உன்மத்தம் முதலிய பைத்திய ரோகங்கள் ஆகியவைகள் தீரும். பேய், பூதம் முதலியவை நீங்கும்.

பத்தியம்:—வியாதி, தேகம், தேகசுபாவம், ஆகியவைகளுக்குத் தகுந்தபடிசமயோசிதம்போலப் பத்தியம் ஏற்படுத்தவும்.

## 136. விஷ்ணுசக்கரக் குளிகை.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த நாபி, சுத்திசெய்த காந்தம் இவை வகை-க-க்கு விராகனெடை-உ, கடுகுரோகணிச் சூரணம், இந்துப்புத்தூள், அரிசித்திப்பிலிச்சூரணம், மேற்தோல் சீவியசுக்குத்தூள், மிளகுத்தூள், வகை-க-க்கு விராகனெடை-ரு, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக் கருத்தபின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனிபொடித்துச் சேர்த்தும், மற்றச் சூரணங்களை ஒன்றாகக்கலந்துசேர்த்தும் ஒருமணிநேரம் நன்றாயரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு பழச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்துப் பயறளவுமாத்திரைசெய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்திக்கொள்ளவும்.

பிரமாணம்:—மாத்திரை உ-க.

அநுபானம்:—இஞ்சிச்சாறு, தேன், சுக்குக்கஷாயம், முலைப்பால், கடுக்காய்க் கஷாயம், சோம்புக்கஷாயம், சோம்புத்திராவகம் முதலியவைகளாம்.



உபயோகம்:—தலைநோய்வகைகள், பீனிசவகை, தலைமயக்கம், இறைசிறுப்பு, வாயுரோகங்கள், வாதரோகங்கள், மகோதரரோகம், க்ஷயம், சோகை, வயிற்றுப்போக்கு, அதிசாரம், அதிவேர்வைரோகம், தேககாந்தல், சுரங்கள், கண்ணைப்பற்றிய வியாதிகள், சிரசைப்பற்றிய வியாதிகள், இடுப்பைப்பற்றிய வியாதிகள் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:— வியாதிக்குத்தகுந்தபடி ஏற்படுத்தவும்.

## 137. அதிசாரகேசரம்.

சுத்திசெய்த நாபிச்சூரணம், மாங்கொட்டைப்பருப்புச்சூரணம், கோரைக்கிழங்குச்சூரணம், பொரித்த சீனக்காரத்தூள், குடசப்பாலையிலையை உலர்த்தியிடித்தசூரணம், பூங்காவித்தூள் இவைவகைக்குப் பலம் அரை, கஞ்சாவிலைச்சாறு அல்லது கஞ்சாக்கஷாயம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்டவைகளை யெல்லாம்கல்வத்திலிட்டு ஒருமணி நேரமரைத்து எல்லாம் நன்றாக மிஸ்ரமானபின்பு மேற்படிசாற்றை அல்லது கஷாயத்தைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துத் தேற்றான்கொட்டைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க.

அநுபானம்:—திப்பிலியைவறுத்துப் பொடித்த தூள் விராகனெடை அரை, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையுமிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துண்ணலாம். இலவங்கக்க

கஷாயம், வெந்தயக்கஷாயம், சிறுநாகப்பூக்கஷாயம் முதலியவைகளுமாம்.

உபயோகம்:—அதிசாரபேதி, நாட்பட்ட பேதி, மூலக்கிராணி, கிராணி முதலியபலவகைமலப்போக்குகள்நீரும்.

பத்தியம்:—துவர்ப்பான பதார்த்தங்களைக்கூட்டவேண்டியது.

## 138. சர்வசுரக் குளிகை.

சுத்திசெய்த பால்துத்தநாகம், சுத்திசெய்த நாபிச்சூரணம், சீரகச்சூரணம் இவைவகைக்கு விராகனிடை-வ, அருக, (இதனைப்பொரித்துக்கொள்ளவும்) சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த அரிதாரம் இவைவகை-க-க்கு விராகனிடை-ந, பாகலிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எல்லாவற்றையும் தனித்தனிபொடித்து ஒன்றாகக்கலந்து ஒருமணிநேரம் நன்றாயரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு மேற்படி சாற்றைச்சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்துச் சிறுபயறளவு மாத்திரைகள் செய்துநிழலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க.

அனுபானம்:—இஞ்சிச்சாறு, சுக்குக் கஷாயம், கண்டங்கத்திரிச்சாறு முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைச் சுரங்களும் நீரும்.

பத்தியம்:—வியாதியின் பலத்திற்குத்தக்கபடிபத்தியமேற்படுத்தவும்.



## 139. இரணாங்க வயிரவன் மாத்திரை.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த பாஷாணம், சுத்திசெய்தநாபி, சுத்திசெய்தவெண்காரம், சுத்திசெய்தஅரிதாரம், மிளகுச்சூரணம், கடுக்காய்த்தோற்சூரணம், மேற்றோல்சீவின சுக்குச்சூரணம், சுத்திசெய்தநேர்வாளப்பருப்பு இவைவகை-ரு-க்குவிராகனிடை-க, வெள்ளெருக்கிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் பாஷாணத்தையும் தொந்தித்தரைத்து மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்தும், மற்றசூரணங்களையும் ஒன்றாகக்கலந்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் நன்றாகக்கலந்தபின்பு மேற்படி வெள்ளெருக்கிச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துச் சிறுபயறளவு மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ-க.

அனுபானம்:— சுக்குக்கஷாயம், இஞ்சிச்சாறு, பனைவெல்லம், அதிமதுரக்கஷாயம், திராக்ஷைப்பழம் முதலியவைகளாம்.

உபயோகம்:—சுரங்கள், வெப்புசுரம், குளிர்சுரம் கடிக்கல்சுரம் முதலிய எல்லாவகைசுரங்களும் மூன்று வேளைமருந்தில் நீரும். காலை மாலை இரண்டுவேளையும் மருந்தை உபயோகிக்கலாம். சுகுமாரதேகிகளானால் காலையில்மாத்திரம் ஒருவேளை உபயோகிக்கவும்.

பத்தியம்:—உப்பு, புளி, புகை, பெண் ஆகியவைகளை நீக்கிமூன்றுநாள்வரையில் கடும்பத்தியம் வைக்கவும். மறுபத்தியத்தில் வறுத்த உப்பும், சுட்டபுளியும் சேர்த்துக்கொள்ளவும்.

## 140. சன்னிவாத சுரக்குளிகை.

பொரித்தவெண்காரம், சுத்திசெய்த இரசம், மேற்றோல்சீவினசுக்குச்சூரணம், மிளகுச்சூரணம், அரிசித்திப்பிலிச்சூரணம், இந்துப்பு, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் இவைவகை-க-க்குவிராகனெடை-கவ, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனெடை-உகீ, கடுரோகணிச்சூரணம் விராகனெடை-டு, முலைப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் தொங்கித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்றசரக்குகளில் பொடிக்கவேண்டியவைகளைப் பொடித்தும் மற்றச்சூரணங்களையும் ஒன்றாகக்கலந்துகொள்ளவும். வாளத்தைக்கல்வத்திலிட்டு மைபோலரைத்து முன்சொன்னப்படித்திரவியங்களையும் அதிற்சேர்த்து ஒருசாமநேரம் நன்றாயரைத்து எல்லாம்மிஸ்ரமானபின்பு முலைப்பாலைச்சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்துச் சிறு உழுந்தளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க.

அனுபானம்:—இஞ்சிச்சாறு, சுக்குக் கஷாயம், தேன், முலைப்பால் முதலியவைகளாம்.

உபயோகம்:—பதின்மூன்றுவகைச் சன்னிபாதங்கள் தீரும்.

பத்தியம்:—உப்பு, புளி, பெண், புகை, ஆகியவைகளை நீக்கவேண்டியது. மறுபத்தியத்தில் உப்பை வறுத்தும் புளியைச் சுட்டும் சேர்க்கவேண்டியது.



## 141. இரணாங்க வயிரவன் (வேறு.)

புளியம்புறணியைச்சுட்டெடுத்த சாம்பல் விராகனெடை-இரண்டரை, சுத்திசெய்த இரசம், பூசணிப்பூ, முசுறுமுட்டை இவைவகை-க-க்கு விராகனெடை-கவ, இஞ்சி குன்றிமணியெடை-கo, கைம்மாறு வெற்றிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் புளியம்புறணிப்பற்பத்தையும் சேர்த்து அரைத்து இரசம் மடிந்தபின்பு பூசணிப்பூவைச்சேர்த்தரைத்துப் பிறகு முசுறு முட்டையையும் இஞ்சியையும் சேர்த்து ஒருசாமநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு கைம்மாறு வெற்றிலைச்சாற்றைச்சிறுகச்சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துச்சிறு உழுந்துப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-அரை-க.

அனுபானம்:—முலைப்பால், தேன், இஞ்சிச்சாறு முதலியவைகளாம்.

உபயோகம்:—சுரங்கள், சன்னிகள், ஆகியவை தீரும்.

பத்தியம்:—கஞ்சி, புளிப்பாகம் முதலிய இலகு ஆகாரங்களாம்.

## 142. சுசீகாபரணம்.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த மனோசிலை, பொரித்தவெண்காரம், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, கடுரோகணிச்சூரணம், மேற்றோல்சீவினசுக்குச்சூரணம், அரிசித்திப்பிலிச்சூரணம், இந்துப்புச்சூரணம், ருத்திராக்ஷச்சூர

ணம் இவைவகைக்கு விராகனெடை-கூரு, கையாந்தகரைச்சாறு, கடாரமுருங்கிலைச்சாறு இவைவகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்றசரக்குகளையும் தனித்தனி பொடித்துச் சேர்த்தும், குளிகைகளை ஒன்றாகக்கலந்து சேர்த்தும் ஒருமணிநேரமரைத்து, நன்றாகக்கலந்து பின்பு எடுத்துவைத்துக் கொள்ளவும். வாளத்தைக் கல்வத்திலிட்டு மைபோலரைத்து முன்சுத்தப்படுத்தினவைகளையும் சேர்த்து ஒருமணிநேரமரைத்து நன்றாகமிஸ்ரமானபின் கையாந்தகரைச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமமும், முருக்கிலைச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒரு சாமமும் அரைத்துக் குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திவைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—மாத்திரை-அரை-க.

அநுபானமும், உபயோகமும்:—இஞ்சிச்சாற்றில் மேற்படிமாத்திரையை அநுபானித்து அந்தி சந்தியென்றாகக்கொள்ள சன்னி பதின்மூன்றும் தீரும்.

முருங்கைப்பட்டைச்சாற்றில் அநுபானித்துண்ணக்குன்மம் எட்டுவகையும் தீரும்.

பத்தியம்:—இனிப்பு, உறைப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, பெண் ஆகியவைகளாகா. எலிநாம், உப்பில்லாக்கஞ்சி, பாலன்னம் முதலியவைகளைச்சேர்த்துக் கொள்ளலாம்.



## 143. அக்கினி குமாரன் குளிகை.

சுத்திசெய்த மனோசிலை விராகனெடை-உ, சுத்திசெய்தகெந்தகம் விராகனெடை-அ, காந்தம் விராகனெடை-கஅ, சுத்திசெய்த அய அரபொடி விராகனெடை-ருகூ, சோற்றுக்கற்றாழைச்சாறு, கையாந்தகரைச்சாறு இவைவகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மனோசிலையையும் கெந்தகத்தையும் தனித்தனியே பொடித்துக் கொள்ளவும்; அயத்தையும் காந்தத்தையும் சேர்த்தரைத்துப்பிறகு முன்சுத்தப்படுத்தினவைகளையும் சேர்த்து ஒருமணி நேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு குமரிச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்துச் சிறுவில்லைகளாகச்செய்து உலர்த்தி ஒருமண்தாலத்தில் பரப்பிமேல்மூடி ஐந்துசீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப்பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துக்கல்வத்திலிட்டுப் பொடித்துக் கையாந்தகரைச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்துக் குன்றிமணிப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-ஒ-க.

அநுபானமும், உபயோகமும்:—மோர் விராகனெடை-ரு, தேன் விராகனெடை-உ, இவ்விரண்டையும்மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துண்ணக் கிராணிவகைகள் தீரும்.

இஞ்சிச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து. மேற்கண்ட

மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துண்ண, சன்னிவகைகள் தீரும்.

தேன் விராகனெடை-க, இதில் மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துண்ண, வாயு தீரும்.

மேற்சொல் சீனசுக்குச்சூரணம், மிளகுச்சூரணம், அரிசித்திப்பிலிச்சூரணம் இவை வகைக்கு விராகனெடை-வ, தேன் விராகனெடை-ந. இவற்றை மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துண்ணக் கபசைக்கட்டி, கெண்டைக்கட்டி முதலியவை தீரும்.

பத்தியம்:—வியாதிக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்துவது சிகிச்சகரின் கடமையாம்.

## 141. மகா ஆனந்தவயிரவன் குளிகை.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த ஜாதிலிங்கம், சுத்திசெய்த நாபிச்சூரணம், வெண்காரத்தூள், மேற்சொல் சீனசுக்குச்சூரணம், மிளகுச்சூரணம், அரிசித்திப்பிலிச்சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-கவ, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்றவைகளைத் தனித்தனி பொடித்துச்சேர்த்தும், சூரணங்களை ஒன்றாகக்கலந்து சேர்த்தும் ஒருமணிநேரம் நன்றாயரைத்து எல்லாம் ஒன்றாய் மிஸ்ரமான பின்பு பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரை



த்துப் பயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ

அனுபானமும், உபயோகமும்:—வறுத்திடித்த திப்பிலிச் சூரணம் விராகனெடை அரை, அல்லது வறுத்த சீரகச்சூரணம் விராகனெடை-உ, தேன் விராகனெடை-க. இவற்றை மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துக் கொடுக்கலாம். அல்லது, அரிசித்திப்பிலிச்சூரணம், சீரகச்சூரணம் ஆகிய இரண்டையும் சமனெடையாக எடுத்து அதில் விராகனெடை-உ, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துங் கொடுக்கலாம். இப்படிச்செய்யின் எல்லாவகைச்சுரங்களும் தீரும். ஆனால், கபசுரத்திற்குத் திப்பிலியிலும், பித்தசுரத்திற்குச் சீரகத்திலும், வாதசுரத்திற்கும் தொந்தசுரங்களுக்கும் மேற்கண்ட இரண்டையுங்கலந்தும் அனுபானித்துக்கொடுப்பது அனுபவம்.

இஞ்சிச்சாறு விராகனெடை-கஉ, தேன் விராகனெடை-கஉ, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்கண்ட மாத்திரையை அனுபானித்துண்ணக்குன்மரோகம், வயிற்றுவலி, அக்கினிமந்தம், அஜீரணரோகம் ஆகியவை தீரும்.

அதிவிடயச்சூரணம், ஜாதிக்காய்ச்சூரணம், வறுத்த இலவங்கச்சூரணம் இவை வகை-க-க்குச் சமனெடை. இவற்றைக்கலந்து இந்தக்கலவையில் விராகனெடை-க, தேன் விராகனெடை-க, இவற்றை மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ணக்கிரா

ணிவகைகள், பேதி வகைகள், சீதபேதி ஆகியவை தீரும்.

வெண்ணொச்சி யிலைச்சாறு, முருங்கைப்பட்டைச் சாறு இவை வகை-க-க்கு விராகனெடை அரை, தேன் விராகனெடை-க. இவற்றை மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ணப் பதின்மூன்று வகைச் சந்நிகள் தீரும்.

## 145. ஆனந்தவயிரவன் (வேறு.)

மஞ்சட்கடுக்காய்த் தோற்சூரணம், சுத்திசெய்த ஜாதிலிங்கத்தூள், செல்லிவற்றல் சூரணம், இவை வகை-க-க்குக் குன்றிமணியெடை-௩௦, சுத்திசெய்தநெல்லிக்காய்க்கெந்தகத்தூள், சுத்திசெய்த நாபிச்சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-௩வ. அரிசித்திப்பிலிச்சூரணம் விராகனெடை-௩௫, நெருஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—தூள்செய்ய வேண்டியவைகளைத் தனித்தனி தூள்செய்தும், மற்றச்சூரணங்களையும் கலந்தும் கல்வத்திலிட்டு ஒருமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமான பின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒரு சாமநேரமரைத்துக் குன்றிமணிப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ-க.

அநுபானம்:—இஞ்சிச்சாறு, தேன் ஆகியவைகளாம்.

உபயோகம்:—விஷசுரம், கபசுரம், சன்னிவகைகள் ஆகியவை தீரும்.

பத்தியம்:—பயற்றங்கஞ்சி கூட்டவேண்டியது.



## 146. சர்வசுர பேதிக்குளிகை.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த கெந்தகம், மேற்சொல் சீவின சுக்குச்சூரணம், மிளகுச்சூரணம், அரிசித்திப்பிலிச்சூரணம், மஞ்சட்கடுக்காய்த்தோற் சூரணம், இந்துப்புத்தூள், கடுகு ரோகணிச்சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-கவ, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனெடை-க0, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்றச்சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து அதிற்சேர்த்து அரைமணி நேரமரைத்துத் தனியே எடுத்து வைத்துக்கொள்க. நேர்வாளப்பருப்பைக் கல்வத்திற்போட்டு மெதுவாகத்தட்டிப் பொடித்துப் பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து மைபோலரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் சூரணத்தைச் சிறுகச் சிறுகச்சேர்த்தரைத்து எல்லாம் ஆனபின்பு பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாம நேரமரைத்து மிளகுப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ-க.

அநுபானம்:—இஞ்சிச்சாறு, சுக்குக்கஷாயம், பனைவெல்லம், சர்க்கரை, வாழைப்பழம் முதலியவைகளாம்.

உபயோகம்:—பழையமலம் நீங்கி எல்லாவகைச்சுரங்களும் தீரும். பேதி அதிகமானால்பாற்கஞ்சிகொடுக்கவேண்டும். வசம்பைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேனிற் குழைத்துக்கொடுக்க உடனேபேதி நிற்கும்.

பத்தியம்:—கஞ்சி, புனற்பாகம் ஆகியவைகளாம். வெந்நீரையே எல்லாவற்றிற்கும் உபயோகிக்கவேண்டியது.

### 147. சர்வ சுரக்குளிகை.

சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, பொரித்த வெண்காரம், இவை வகை-க-க்கு விராகனெடை-கவ, நிலத்துத்தி வேர்க்கஷாயம் செல்லத்தக்க அளவு. (நிலத்துத்தி வேர்ப்பட்டையில் ஐந்துபலத்தை ஒருபடி ஜலத்திற்போட்டு எட்டிலொருபாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டிக் கொள்ளவேண்டும்.)

செய்முறை:— பாஷாணத்தையும், வெண்காரத்தையும் தனித்தனிபொடித்து ஒன்றாகக்கலந்து அரைமணி நேரமரைத்துத்தனியே வைத்துக்கொள்ளவும். பிறகு வாளத்தைக் கல்வத்திலிட்டு நசுக்கிப் பொடித்து மேற்படி கஷாயத்தைச் சிறுகச் சிறுகவார்த்து அரைத்து வெண்ணெய்போலான பின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருப்பதையும் சேர்த்து இரண்டுசாமநேரமரைத்துக்கடுகளவு மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ.

அனுபானம்:—வெல்லம், பனைவெல்லம், சர்க்கரை முதலியவைகளாம்.

உபயோகம்:—நடுக்கல்சுரம், குளிர்சுரம், முறைசுரம் முதலிய எல்லாவகைச்சுரங்களும் தீரும். இதனை உபயோகித்த இரண்டு சாமத்திற்குள் சுரம் நிற்கும். தேகபலமறிந்து அதற்குத்தக்கபடி ஒருவேளை அல்லது இரண்டுவேளை உபயோகிக்கவும். மூன்றுநாளைக்கதிகம் உபயோகிக்க நேரிடாது. அப்படி நேரிட்டால் இடையில் மூன்றுநாள் நான்குநாள்விட்டு மறுபடியும் உபயோகிக்கவும்.



பத்தியம்:—பொரியரிசிக்கஞ்சி, புனற்பாகம், பாற்கஞ்சி, முதலியவைகளை உபயோகிக்கவேண்டியது.

### 148. ஸ்ரீராமபாணம்.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்தி செய்தநாபி, இலவங்கச்சூரணம், மிளகுச்சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-கவ, நெருஞ்சிச்சாறு, புளியிலைச்சாறு இவை வகைக்குச்செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் தெந்தித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்றவைகளையும் சேர்த்து ஒருமணி நேரமரைத்து எல்லாம் நன்றாகமிஸ்ரமான பின்பு நெருஞ்சிச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமமும், புளியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமமும் அரைத்துக் குன்றிமணிப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ.. க.

அனுபானமும், உபயோகமும்:—இஞ்சிச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை - க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண வாதசுரம், கபசுரம் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—சமயோசிதம்போலேற்படுத்தவும்.

## 149. இராமபாணம் (வேறு.)

சுத்திசெய்த ஜாதிலிங்கம் விராகனெடை - உ௰, சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், அதிவிடயச் சூரணம் இவை வகைக்கு விராகனெடை - கஅ, கருஊமத்தையிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—பாஷாணத்தையும் இலிங்கத்தையும் தனித்தனி பொடிந்து ஒன்றாகக்கலந்து அதிவிடயச்சூரணத்தையும் சேர்த்து ஒருமணிநேரமரைத்துப் பிறகு மேற்படிசாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்குநாழிகைநேரம் அரைத்துக் கடுகுப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும். இதனை ஒருமாதம் சென்று உபயோகிக்கவேண்டியது.

பிரமாணம்:—மாத்திரை. க. கஉ.

அநுபானம்:—நெற்பொரித்தூள், சர்க்கரை, தேன் இவைகளில் தனித்தனியாயாவது ஒன்றோடொன்றைக் கலந்தாவது அநுபானித்துக் கொடுக்கலாம்.

உபயோகம்:—குளிர்சுரம், நடுக்கல்சுரம், முறைசுரம், விஷசுரம் முதலிய எல்லா சுரங்களும் தீரும்.

பத்தியம்:—பாற்கஞ்சியை உபயோகிக்கவேண்டியது.

## 150. சர்வகுலாந்தகக் குளிகை.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், இலவங்கச்சூரணம், ஜாதிக்காய்ச்சூரணம், பச்சைக்கர்ப்பூரம் இவை வகைக்கு விராகனெடை - க௰, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனெடை - உ௰, சோற்றுக்கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.



செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும்சேர்த்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்ற சரக்குகளையும் சேர்த்து அரைமணிநேரமரைத்துத் தனியேவைத்துக்கொள்ளவும். நேர்வாளத்தைக் கல்வத்திலிட்டு நசுக்கிப்பொடித்து மேற்படிசாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து அரைத்து மைபோலானபின்பு முன் சித்தப்படுத்தினதையும் கொஞ்சங்கொஞ்சமாகச்சேர்த்து எல்லாம் ஆனபின்பு மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாமமரைத்துச் சிறுபயறளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ. க. உ.

அநுபானம்:—சர்க்கரை, வெல்லம், வெண்ணெய், வாழைப்பழம் முதலியவைகளாம்.

உபயோகம்:—மூன்று நாழிகையில் எல்லாவகை சுரமும் தீரும்.

## 151. நாகோபேன்பான் நாராயணக் குளிகை.

படிக்காரத்தூள், வெண்காரத்தூள், சுத்திசெய்த பாஷாணத்தூள் இவை மூன்றும் வகை-க-க்கு விராகனெடை-க௰, ஊமத்தங்காய்-ரு, வெண்ணொச்சியிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மூன்று சரக்குகளையும் கல்வத்திலிட்டு ஒருமணிநேரமரைத்து எல்லாம் நன்றாகமிஸ்ரமானபின்பு இதனையெடுத்துக்கொள்ளவும். பின் ஒருவூமத்தங்காயைக்குடைந்து அதிலுள்ள விதைகளை நீக்கி அதற்குள் முன் சித்தப்படுத்தினதை வைத்து நூல்கயிற்றினால் சந்தில்லாமல்கட்டி நெல்லிற்குள்வைத்து வேகவைத்து நெல்வெந்தபதத்தில் எடுத்துக் குளிர ஆற

வைத்து முன்போல் இரண்டாவது காய்க்குள்வைத்து முன்போல்கட்டி முன்போல் செல்லுக்குள்வைத்து அவித்தெடுத்துக்கொள்ளவும். மூன்றாவது காயிலும் இவ்வாறேசெய்துகொள்ளவும். பிறகு காய்க்குள்ளிருக்கிற மருந்தையெடுத்துக் கல்வத்திலிட்டு வெண்ணொச்சியிலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்துச் சிறுபயறளவு மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ-க.

அநுபானமும், உபயோகமும்:—பாகலிலைச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்தால், எல்லாவகைச் சுரங்களும் தீரும்.

பத்தியம்:—பாற்கஞ்சி, புனற்பாகம் ஆகியவைகளாம்.

## 152. குளிர்சுரக் குளிகை.

சந்தனத்தை அரைத்து உலர்த்திப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்தசூரணம் விராகனெடை-உரு, சுத்திசெய்த வெள்ளைப் பாஷாணத்தூள் விராகனெடை-உ0, முலைப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டு ஒருநாழிகைநேரமரைத்து நன்றாகமிஸ்ரமானபின்பு முலைப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்துக் கடுகுப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ. க.



அநுபானம்:— பசுவின்வெண்ணெய், வெந்நீர், வெல்லம் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைக் குளிர்சுரங்கள், விக்கல்சுரங்கள் ஆகியவை தீரும்.

பத்தியம்:—முருங்கைக்கீரையைச் சட்டியிலிட்டு வதக்கி அதில் பச்சைப்பயறு அரிசி ஆகியவைகளைப் போட்டுக் கஞ்சிசெய்துபகலில்பானஞ்செய்யவேண்டும்; அன்றிரவு பசும்பாலன்னம் சாப்பிடவேண்டும். தேகம் பலமாயிருந்தால் இம்மருந்தைக் காலைமாலைஇரண்டுவேளையும் உபயோகிக்கலாம். சுகுமார தேகிகளாயின் ஒருவேளை மருந்து போதுமானது. தேகபலம் வியாதிபலம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி உபயோகிக்கவேண்டியது சிகிச்சகரின் அபிப்பிராயமாம்.

## 153. சர்வசுர சங்காரக் குளிகை.

அரிசித்திப்பிலிச் சூரணம் விராகனெடை - கரு, மஞ்சட் கடுக்காய்த்தோற்சூரணம் விராகனெடை-க0, மேற்றோல் நீக்கின சுக்குச்சூரணம் விராகனெடை - ரு, சுத்திசெய்த கெந்தகம், சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு இவை வகை-க-க்கு விராகனெடை-கவ, சுத்திசெய்த இரசம் குன்றிமணியெடை-கா, சுத்திசெய்த லிங்கம் குன்றிமணியெடை-ரு, குளிர்ந்த ஜலம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் தொக்கிந்தரைத்து நன்றாகக் கருத்தபின்பு மற்றவைகளில் பொடிக்கவேண்டியவைகளைத் தனித்தனி பொடித்துச்சேர்த்தும் மற்றச் சூரணங்களையும் சேர்த்து

ம் ஒருமணிநேரம் நன்றாயரைத்து எல்லாம் ஒன்றாக மிஸ்ரமானபின்பு குளிர்ந்தஜலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாமநேரமரைத்து மிளகுப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-௪.

அநுபானமும், உபயோகமும்:—பசுவின்பால் விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண, குளிர்சுரம், மாறல்சுரம், விடாசுரம் ஆகியவை தீரும்.

கோமூத்திரம் விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண, வீக்கம், வெளுப்பு ஆகியவை தீரும்.

தயிர்த்தண்ணீர் விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண, வாதரோகங்கள் தீரும்.

மிளகுக்கஷாயம் விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண, தலைநோவு, தாபசுரவேகம் ஆகியவை தீரும்.

இஞ்சிச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவற்றை மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண, இருமல் இளைப்பு, காமாலை ஆகியவை தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.



## 154 நான்காமாறல் குளிகை.

சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் விராகனெடை இரண்டரை, எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—பாஷாணத்தை ஒருபீங்கான் பாத்திரத்திற்போட்டு அது முழுகும்படியாக எருக்கம்பாலைவிட்டு வைக்கவேண்டும். மறுநாள் அதில் தெளிந்திருக்கிற நீரை இறுத்துவிட்டு முன்போல் புதியபாலைவிட்டு வைக்கவேண்டும். அதற்கு மறுநாளும் முன்போல் தெளிவையிறுத்து விட்டு முன்போல் மூன்றாந்தடவையும் புதியபாலைவிட்டு வைக்கவேண்டும். அதற்கு மறுநாளும் முன்போல் தெளிவையிறுத்துவிட்டு முன்போல் நான்காந்தடவையும் புதியபாலை விட்டு வைக்கவேண்டும். அதற்கு மறுநாள் தெளிவையிறுத்துவிட்டுப் பாத்திரமிருக்கிற எருக்கம்பால் சக்கையுடன் பாஷாணத்தையும் கல்வத்திலிட்டு அரைத்துப் புதிய எருக்கம்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துக் கடுகளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க.

அநுபானம்:—மிளகுச்சூரணம், மோர், தேன் முதலியவைகளாம். ஆனால், மிளகுச்சூரணத்துடன் மோரை அல்லது தேனை மிஸ்ரமித்து அநுபானித்துக் கொள்வது உசிதம்.

உபயோகம்:—நான்காமாறல் சுரம் தீரும்.

பத்தியம்:—மோர்ச்சாதம், பாற்கஞ்சி முதலியவைகளாம்.

### 155. நான்காமாறல் குளிகை (வேறு-)

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த நாபிச்சூரணம் இவை வகைக்கு விராகனெடை இரண்டரை, சுத்திசெய்த இலிங்கம் விராகனெடை-௧௰, மிளகுச்சூரணம் விராகனெடை-௭௰, வெந்நீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்றவைகளைத் தனித்தனிபொடித்துச் சூரணங்களையும் கலந்து ஒருமணிநேரமரைத்து நன்றாகமிஸ்ரமானபின்பு வெந்நீரைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துச் சிறுபயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨.

அனுபானம்:—தேன், சர்க்கரை, வெண்ணெய், சுக்குக்கஷாயம், இஞ்சிச்சாறு முதலியவைகளாம்.

உபயோகம்:—நான்காமாறல் சுரம் தீரும்.

பத்தியம்:—மேற்கண்ட பத்தியமேயாம்.

### 156. இலகு ஆனந்தபயிரவன்.

சுத்திசெய்த நாபிச்சூரணம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகத்தூள், சுத்திசெய்த மனோசிலைத்தூள், சுத்திசெய்த இலிங்கத்தூள் இவை வகை-௧-க்கு விராகனெடை-௨௰, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளைக் கல்வத்திலிட்டு ஒருமணி நேரமரைத்து எல்லாம் நன்றாகமிஸ்



ரமானபின்பு எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாம நேரமரைத்துப் பயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨.

அனுபானமும், உபயோகமும்:—தேன், சர்க்கரை, பனைவெல்லம் ஆகியவைகளில் ஒன்றில் மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண, எல்லாவகைச்சுரங்களும் தீரும்.

பெருங்காயத்தைப் பொரித்துப் பொடித்தசூரணம் விராகனெடை அரை, சிற்றாமணக்கெண்ணெய் விராகனெடை-௧. இவ்விரண்டையும் மிஸ்ரமித்துமேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண, எல்லாவகை வாதரோகங்கள், வாயுரோகங்கள் தீரும்.

மேற்சொல்லின சுக்குச்சூரணம், மிளகுச்சூரணம், அரிசித்திப்பிலிச்சூரணம் இவை வகை-௧-க்குச் சமனெடை. இக்கூட்டில் விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண, பதின்மூன்றுவகை சன்னிகளும் தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபோலப் பத்தியமேற்படுத்தவும்.

### 157. பிரதாபலிங்கேசுரன் குளிகை.

சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த கௌரி, சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் இவை வகைக்கு விராகனெடை-௧௰, சுத்திசெய்த இரசம் விராகனெடை

-,௨௫, சுத்திசெய்த பால்துத்தம் குன்றிமணியெடை -௧௦, பொரித்ததுருசு குன்றிமணியெடை-௫, முலைப் பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—பாஷாணத்தையும் இரசத்தையும் தொங்கித்தரைத்து இரசம் மடிந்தபின்பு மற்றசரக்குகளையும் தனித்தனி பொடித்துச்சேர்த்து ஒருமணி நேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு முலைப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துச் சிறு பயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை அரை, ௧.

அனுபானமும், உபயோகமும்:—முலைப்பால் விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துக்கொடுக்க, விஷசுரங்கள் தீரும்.

தயிர் விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண மாறல் சுரம், முறைசுரம் ஆதியவைகள் தீரும்.

பத்தியம்:—புளி, புகை, பெண் ஆகியவற்றை நீக்கவேண்டும்; பாற்கஞ்சியையே உபயோகிக்கவேண்டும். இவ்வாறு மூன்றுநாள் உபயோகித்தால்போதும், அதற்குமேல் வேண்டியதில்லை.

## 158. சுராங்குசக் குளிகை.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த கெந்தகம், சுத்திசெய்த காபி, ஊமத்தைவிதை இவை வகை-௧-க்கு



விராகனெடை-௧௮, கையாந்தகரைச்சாறு, ஊமத்தையிலைச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையுந்தொங்கித்தரைத்து நன்றாகக் கருந்த பின்பு மற்ற இரண்டு சரக்கையும் தனித்தனி பொடித்துச் சேர்த்து ஒருமணிநேரம் நன்றாயரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து மூன்றுநாளும், ஊமத்தையிலைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருநாளும் அரைத்துக்குன்றிமணிப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை அரை, ௧.

அனுபானமும், உபயோகமும்:—இஞ்சிச்சாறு விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண, ஒருநாள் மாறல், விடாசுரம், நான்காமாறல் முதலிய மாறல் சுரங்கள் தீரும். இம்மருந்தை மேற்படி சுரங்களுக்கு மூன்றுநாள் உபயோகித்தால் போதுமானது.

பத்தியம்:—மூன்றுநாள் வரையில் புளி, உப்பு, புகை ஆகியவைகளை நீக்கவேண்டியது. மறுமூன்று நாளும் புளியைச்சுட்டும் உப்பைவறுத்தும் சேர்த்து மறுபத்தியமிருக்கவேண்டியது.

## 159. கர்ப்பூராதிக்குளிகை.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த கெல்லிக்காய்க் கெந்தகம், ஜாதிக்காய்ச்சூரணம், இலவங்கச்சூரணம்.

பச்சைக்கற்பூரம் இவை வகைக்கு விராகனெடை-௩ம், சுத்திசெய்த சேர்வாளப்பருப்பு விராகனெடை இரண்டரை, சோற்றுக்கற்றாழைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் தொட்டித்தரைத்து நன்றாகக்கருத்த பின்பு மற்றச்சரக்குகளையும் சேர்த்து அரைத்துத்தனியே வைத்துக்கொள்ளவும்; சேர்வாளத்தைக் கல்வத்திலிட்டுத் தட்டிப்பொடித்து மேற்படிசாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து அரைத்து வெண்ணெய் போலானபின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருப்பதையும் சேர்த்து இரண்டு சாமநேரமரைத்து உழுந்துப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:-மாத்திரை-அரை, ௧.

அனுபானம்:-சர்க்கரை, வெல்லம் முதலியவைகளாம்.

உபயோகம்:-அதிசீக்கிரத்தில் எல்லாவகை சுரங்களும் தீரும்.

பத்தியம்:-கஞ்சி, பாற்கஞ்சி, புனற்பாகம் முதலியவைகளாம். வியாதிபலம், தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி காலையில் மாத்திரம் ஒருவேளை உபயோகிக்கவும்.

## 160. இரசபூபதி.

சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் விராகனெடை ஏழரை, சுத்திசெய்த இரசம் விராகனெடை ஏழரை, செப்புத்தகட்டிற்குச் சமனெடை தாளகத்தை செய்வார்த்தரைத்து அத்தகட்டிற்குப்பூசி ஓட்டில்வைத்து



மேலோடுமூடி மூன்று சீலைமண்செய்து கவசத்திற்கு இருபது பங்கெரு வறட்டியில் புடமிட்டுக் களங்கமாக்கி அந்தக்களங்கம் விராகனெடை ஏழரை, சிறு செருப்படிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:-கெந்தகத்தையும் இரசத்தையும் சேர்த்தரைத்து கல்லாகக்கறுத்த பின்பு தாம்பிரக்களங்கத்தைச்சேர்த்து ஒருமணி நேரமரைத்து கல்லாக பின்பு மேற்படி சிறு செருப்படிச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஏழு சாமநேரமரைத்து மிளகுப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி ஏழு சீலைமண்செய்துலர்த்தின குப்பியிற்போட்டு வாய்க்குப் பலப்பக்கல் அடைத்திட்டு அதற்கும் சீலைமண் செய்துலர்த்திச் செங்கற்சட்டியில் நாலங்குலமணல் பரப்பி அதன்மேல் முன் சித்தப்படுத்திய குப்பியை வைத்து அதன் கழுத்துவரையில் மணலைக்கொட்டி மேற்சட்டிமூடி சந்து சீலைமண்செய்துலர்த்தி அடுப்பில் வைத்துத் தீபாக்கினி ௩-சாமம், கமலாக்கினி-௨-சாமம், காடாக்கினி-௪-சாமம் எரித்து ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் சீசாவிலுள்ள மருந்தையெடுத்துக் கல்வத்திற்போட்டுப் பொடித்து இஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துப் பருத்திக்கொட்டைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திச் சீசாவிற்பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨.

அனுபானம்:—இஞ்சிச்சாறு, தனப்பால், துளசியைப்பிட்டவித்தசாறு ஆகியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைசன்னிகள், எல்லாவகைசுரங்கள், தோஷங்கள், வாயுகள், மேகவகைகள், வாதரோகங்கள் ஆகியவைதீரும்.

பத்தியம்:—தேகபலம், ரோகபலம், முதலியவைகளுக்குத்தகுந்தபடி சமயோசிதம்போலேற்படுத்தவும்.

## 161. சுரகேசரி.

மஞ்சள் சூரணம், சுத்திசெய்த நாபிச்சூரணம், வெண்காரத்தூள், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகத்தூள், வாய்விளங்கச்சூரணம், மேற்தோல் சீவினசுக்குச்சூரணம், மிளகுச்சூரணம், அரிசித்திப்பிலிச்சூரணம் இவைவகை-க-க்கு விராகனெடை-உ௰, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனெடை-க௰, வேப்பிலைச்சூரணம் விராகனெடை-உ௰, கோமூத்திரம் செல்லத்தக்கஅளவு, கொடிவேலிவேர்க்கஷாயம் செல்லத்தக்கஅளவு.

செய்முறை:—சூரணங்களையும், தூள்களையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு ஒருமணிநேரமரைத்து எல்லாம் ஒன்றாகமிஸ்ரமானபின்பு கோமூத்திரத்தைச் சிறுகச்சிறுகவார்த்து நாளொன்றிற்கு நான்குசாமமாக இரண்டுநாளும், கொடிவேலிவேர்க்கஷாயத்தைச் சிறுகச்சிறுகவார்த்து நாளொன்றுக்கு நான்குசாமமாக ஐந்நாளுமரைத்துப் பருத்திக்கொட்டைப் பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவிற்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ.



அநுபானம்:—இஞ்சிச்சாறு, சுக்குக்கஷாயம், வெல்லம், சர்க்கரை, வாழைப்பழம் ஆகியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைச் சுரங்களும் தீரும்.

### குறிப்பு.

இந்தமாத்திரை அதிகக்கசப்பாயிருக்குமாகையால் இதன்மீது வெள்ளிரேக்கைச்சுற்றி உபயோகிப்பது உத்தமம். சுரத்திற்குப்பிரபலமான மருந்து கொய்னாவென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். ஆனால் சில தேகிகளுக்கு ஒத்துக்கொள்ளாமல் சில சமயங்களில் விஷமாகின்றது. அத்தகையினர்களுக்கும், மற்றவர்களுக்கும் இது அதிக மேன்மையானது. வேப்பிலைக்குப்பதிலாக முற்றின வேப்பம்பட்டைச் சூரணத்தை அல்லது சரப்பட்டைச்சூரணத்தைச் சேர்த்தும் செய்துகொள்ளலாம்.

பத்தியம்:—தேகசுபாவம், வியாதிபலம் முதலியவைகளுக்குத்தகுந்தபடிபோல சமயோசிதமாகக் கஞ்சி முதலிய இலகு போஜனங்களைப் பத்தியமாக ஏற்படுத்தவும்.

## 162. திருநீலகண்டம்.

சுத்திசெய்த துத்தத்தூள், சுத்திசெய்தவெள்ளைப்பாஷாணத்தூள் இவைவகை-க-க்கு விராகனெடை-க, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனெடை-உ, சஸ்திரபேதிச்சூரணம் விராகனெடை-க, மோர்செல்லத்தக்க அளவு.

செய்முறை:—வாளத்தைத்தவிர மற்றமூன்று சரக்கையும் கல்வத்திற்போட்டு ஒருமணிநேரமரைத்து எல்லாம் ஒன்றாக மிஸ்ரமான பின்பு எடுத்துவைத்துக்

கொள்ளவும்; பிறகு வாளத்தைக் கல்வத்திலிட்டு நசுக்கிப்பொடித்து மோரைச் சிறுகச்சிறுகவார்த்து மைபோலரைத்து முன் சுத்தப்படுத்தின சூரணத்தைச் சிறுகச் சிறுகத்தூவி எல்லாம் சேர்ந்தபின்பு மேற்படி மோரையே சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்துச் சிறுபயறளவு மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-ற-க.

அநுபானம்:—மோர், தயிர்த்தெளிநீர், தண்ணீர் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைக் குளிர்ச் சுரங்கள், விக்குசுரங்கள், நடுக்குசுரங்கள் ஆகியவை தீரும்.

## 163. பித்தசாந்திக் குளிகை.

சுத்திசெய்தநாகம், சுத்திசெய்த காசிச்சூரணம், சேர்க்கூரணம் இவைவகை-க-க்கு வராகனெடை-½, சுத்திசெய்த அருகு, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த அரிதாரம் இவைவகை-உ-க்கு வராகனெடை-க, பாகலிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—நாள்செய்ய வேண்டியவைகளைத் தனித்தனி நாள் செய்தும், மற்றச்சூரணங்களை ஒன்றாகக்கலந்தும் ஒருநாழிகைநேரமரைத்து எல்லாம் ஒன்றுகலந்தமான பின்பு பாகலிலைச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டுசாமநேரமரைத்துச் சிறுபயறளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-அரை-க.



அநுபானம்:—இஞ்சிச்சாறு, சுக்குக் கஷாயம், பனைவெல்லம் முதலியவைகளாம்.

உபயோகம்;—எல்லாவகைச்சுரங்களும்போகும்.

பத்தியம்:-வியாதிபலம், தேகபலம் ஆகியவைகளுக்குத்தகுந்தபடி கஞ்சிவகைகள், புனற்பாகம் முதலியவைகளை உபயோகிக்கவும்.

## 164. அர்த்தநாரீசுரன் குளிகை.

சுத்திசெய்த ஜாதிலிங்கம், சுத்திசெய்த கௌரிப்பாஷாணம், அப்பிரேகபற்பம் அல்லது செந்தூரம், சுத்திசெய்த அரிதாரம், சமவெடை தாளகத்தை நெய்யைவிட்டரைத்துத் தாம்பிரத்தகட்டிற்குக் கவசித்து அகலில்வைத்து மேலகல்மூடி மூன்றுசீலைமண் செய்து லர்த்திக்கஜபுடத்தின் இருபது பங்கெருட்டியில் புடமிட்டெடுத்த பின்னெடுத்த வங்கம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்தநெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்தவெள்ளைப் பாஷாணம், சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, சுத்திசெய்த தேன்மெழுகு, உலர்த்தின புராண்டைப்பழம், சுத்திசெய்த அருகு, சுத்திசெய்த நந்தப் இவைவகை-க-க்கு வராகனெடை-கவ, பற்பிப்பித்த ஜலம், மீன்பித்தஜலம், கொடிவேலிவேர்ப்பட்டைக் கஷாயம், பேய்க்குமட்டிச்சாறு, கார்த்திகைக்கிழங்குக் கஷாயம், நேர்வாள வேர்ப்பட்டைக் கஷாயம் அல்லது இதன் பட்டைக்கஷாயம் இவைவகை-க-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்டவைகளில் நாள்செய்ய வேண்டியவைகளைத் தனித்தனி நாள் செய்து ஒன்றாகக்கலந்து வைத்துக்கொள்ளவும். வாளத்தைக்கல்வத்தி

மெட்டுருக்கிப் பொடித்துத் தேன்மெழுகையுஞ்சேர்த்து வெண்ணெய்போலரைத்து முன் சித்தப்படுத்தினவைகளையும் கலந்து ஒருமணிநேரம் நன்றாயரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு மேற்படி பன்றிப்பித்து நீரைச் சிறுகச்சிறுகவார்த்து ஒரு நாளரைக்கவேண்டும். இவ்விதமே மற்றவகைகளிலும் தனித்தனி ஒவ்வொருநாளரைத்து முடிவில் கடுகளவு மாத்திரை செய்து சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧.

அனுபானமும், உபயோகமும்:—வெள்ளாட்டுமடியின் வலதுகாம்பின் பாலில் கொடுத்தால் வலப்பக்கத்து சுரமும், மேற்படி இடக்காம்பின் பாலில் கொடுத்தால் இடப்பக்கத்துச் சுரமுந்தீரும்.

## 165. விஷசுரக் குளிகை.

சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நாபி, மிளகுச்சூரணம், பொரித்த வெண்காரம், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, பூசணி விதைப்பருப்பு இவைவகை-௧-க்குவிராகனெடை-௧, பூசணிக்காய்ச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்டவைகளைத் தனித்தனி சூரணஞ்செய்து எல்லாவற்றையும் ஒன்றாக மிஸ்ரமித்து வைத்துக்கொள்ளவும். நேர்வாளப்பருப்பையும் பூசணி விதைப்பருப்பையும் கல்வத்திலிட்டு வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தினவைகளையுஞ்சேர்த்து ஒருமணி நேரமரைத்து எல்லாம் ஒன்றாகமிஸ்ரமான பின்பு பூசணிக்காய்ச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாம நேரமரைத்து உழுந்தப்பிரமாண



ம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௨-௪.

அனுபானம்:—இஞ்சிச்சாறு, சுக்குக்கஷாயம், வெல்லம் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகை விஷசுரங்களும் தீரும்.

பத்தியம்:—சமயோசிதம்போல் பத்தியமேற்படுத்தவும்.

## 166. ஆனந்தவயிரவன் குளிகை.

சுத்திசெய்த ஜாதிலிங்கம், பொரித்த வெண்காரம் இவைவகைக்கு விராகனெடை-௮, சுத்திசெய்த நாபிச்சூரணம், மேற்றோல் சீவிய சுக்குச்சூரணம் இவை வகை-௧-க்கு விராகனெடை-௪, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளைப்பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் நன்றாகமிஸ்ரமானபின்பு எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௨-௧.

அனுபானமும், உபயோகமும்:—இஞ்சிச்சாறு விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧. இவ்விரண்டையுமிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ணப் பதின்மூன்றுவகை சன்னிகள், தோஷங்கள், எல்லாவகை சுரங்கள் ஆகியவை தீரும்.

மேற்சொல் சீனிய சுக்குச்சூரணம், மிளகுச்சூரணம், அரிசித்திப்பிலிச்சூரணம் இவை வகை-க-க்குச் சமனெடை. இந்தக்கலவைச்சூரணம் விராகனெடை-க, தேன் விராகனெடை-க, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துட்கொள்ளக் கபசம்பந்தமான சன்னிகள், கபாதசுரங்கள், கபவாத தோஷங்கள் ஆகியவைகள் தீரும்.

கருப்பஞ்சாறு விராகனெடை-ங, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித் துட்கொள்ளப் பிரமேக ரோகங்கள், நீரெரிச்சல் முதலியவை தீரும்.

பத்தியம்:—வியாதிபலம் தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடியும், சமயோசிதம் போலவும் பத்தியமேற்படுத்தவும்.

## 167. ஏகாந்தவயிரவன் குளிகை (வேறு.)

சுத்திசெய்த நாபிச்சூரணம், சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த செவ்விக்காரம், கெந்தகம், சுத்திசெய்த ஜாதிலிங்கம், பொரித்த வெண்காரம் இவை வகை-க-க்கு விராகனெடை-கவ, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக்கருத்த பின்பு மற்றவைகளையும் தனித்தனிபொடித்து ஒருயாம நேரமரைத்து எல்லாம் ஒன்றாக மிஸ்ரமானபின்பு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துப் பட்டாணியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.



பிரமாணம்:—மாத்திரை-க-உ.

அநுபானம்:—இஞ்சிச்சாறு, முலைப்பால், சுக்குக் கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:—சுரங்கள், சன்னிகள், ஜலதோஷம், வாதரோகங்கள், வாயுரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 168. கிருமிக்குளிகை.

மிளகுச்சூரணம் விராகனெடை-ரு, மஞ்சட்கடுக்காய்த்தோற்சூரணம் விராகனெடை-ரு, உள்ளிலே மேல்தோல் முதலியவற்றை நீக்கின தூமணக்கம்பருப்பு விராகனெடை-ரு. (இதனை மணம் வரும்படியாக வறுத்துக் கொள்ளவேண்டியது.) சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு விராகனெடை-எ, அவுரிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட இரண்டு பருப்புகளையும் கல்வத்திலரைத்து மைபோலானபின்பு மேற்கண்ட இரண்டு சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து அதிற்சேர்த்து ஒருமணி நேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துக் குன்றிமணிப் பிரமாணம்மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ-ங.

அநுபானம்:—வாழைப்பழம், தேன், சீனிசர்க்கரை, வெல்லம் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைக் கிருமிகளும் வெளிப்படும்.

## 169. கிருமிக்குளிகை (வேறு.)

கடுகுரோகணிச்சூரணம், வறுத்திடித்த கொடிக் காக்கரட்டான் விதைச்சூரணம் வெள்ளைச்சாரணைவேர்ப்பட்டைச்சூரணம், பொரித்தவெண்காரம், அரிசித்திப்பிலிச்சூரணம், மிளகுச்சூரணம், பாலில் வேகவைத்துச் சுத்திசெய்த சிவதைவேர்ச்சூரணம், இவைவகை-க-க்கு விராகனெடை-க, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனெடை-ட-உ, பிரமிபிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—வாளத்தைக் கல்வத்திலிட்டு மைபோலரைத்து, மற்றவைகளையும் ஒன்றாகக்கலந்து அதிற்சேர்த்து ஒருமணிநேரமரைத்து நன்றாகக்கலந்த பின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துக் குன்றியளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ.

அநுபானம்:—முன் முறையிற் சொன்னவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைக் கிருமிகளும் நீங்கும்.

## 170. கோடாசுழிக் குளிகை.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், சுத்திசெய்தநாபி, பொரித்தவெண்காரம், சுத்திசெய்த அரிதாரம், மேற்றோல் சீவினசுக்குச்சூரணம், மிளகுச்சூரணம், அரிசித்திப்பிலிச்சூரணம், மஞ்சட்கடு



க்காய்த்தோற் சூரணம், தான்றிக்காய்த்தோற் சூரணம் நெல்லிமுள்ளிச்சூரணம் இவைவகை-க-க்கு விராகனெடை-க, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனெடை-க, கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்தும், சூரணங்களையெல்லாம் ஒன்றாகக்கலந்தும் கல்வத்திலுள்ள மருந்துடன் சேர்த்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமான பின்பு மேற்படிசாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப்பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ, பேதியாகவேண்டுமானல்-ங-ச-ரு. தேகபலத்திற்குத் தகுந்தபடி உபயோகிக்கலாம்.

அநுபானம்:—வெல்லம், பாலேடு, கற்கண்டுத்தூள், சீனி சர்க்கரை, வாழைப்பழம் முதலியவைகளாம்.

உபயோகம்:—சுரம், சன்னி, வாயுரோகங்கள், மலக்கட்டு, சீதக்கட்டு, மகோதரம், ஜலோதரம், குன்மம், சோகை, பெருவயிறு, பாண்டு, நீரடைப்பு முதலியபலரோகங்கள் தீரும். இன்னும் அநுபவத்தினாலும் அந்தந்த வியாதிகள் தீருகின்ற நிலைமையைக்கண்டு கொள்ளலாம்.

பத்தியம்:—பால், பழம், பாற்சாதம் ஆகியவைகளைச்சேர்த்து, இன்னும் சமயோசிதம்போல் தேகத்துக்குளற்கும் வஸ்துக்களையும் கூட்டவும்.

## 171. இராமபாணக் குளிகை.

சுத்திசெய்தகௌரி, சுத்திசெய்ததுத்தம், சுத்திசெய்தஅரிதாரம், இவைவகை-க-க்கு விராகனெடை-க, ஆவுரியிலைச்சாறு, ஊமத்தயிலைச்சாறு, இவைவகை-க-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—முன் மூன்றுசரக்குகளையும் தனித்தனிபொடித்து ஒன்றாகக்கலந்து அரைமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு மேற்படிசாறுகளைத் தனித்தனி சிறுகச் சிறுகவார்த்துத் தனித்தனி ஒவ்வொருநாளரைத்துக் குன்றிப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ.

அனுபானம்:—இஞ்சிச்சாறு,சுக்குக்கஷாயம்,வெல்லம் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைக்குளிர் சுரம், எல்லாவகை நடுக்குசுரம் முதலியவைகள் தீரும்.

## 172. அழகிய சொக்கன் குளிகை.

சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த இரசம், பொரித்தவெண்காரம், அரிசித்திப்பிலிச்சூரணம், கோரோசனைத்தூள், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு இவை வகை-க-க்கு விராகனெடை-கவ, பாகலிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாய்க்கருத்தபின்பு மற்ற மூன்று சரக்கையும் சேர்த்து நன்றாயரைத்துத் தனியே வைத்துக்கொள்ளவும். நேர்வாளத்தைக் கல்வத்திலிட்டு நறுக்கிப்பொடித்து வெண்ணெய்போலரைத்து முன் சித்தப்படுத்தினவைகளையுஞ் சேர்த்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து மூன்று சாமநேரமரைத்துக் குன்றிமணிப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.



பிரமாணம்:—மாத்திரை-ஒ-க-உ.

அனுபானம்:—இளநீர், முலைப்பால், இஞ்சிக்கஷாயம், சுக்குக்கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:—தாபசுரம், சீதசுரம் முதலிய எல்லாவகைச் சுரங்களும் தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம், ஆகியவைகளுக்குத் தகுந்தபோல் ஏற்படுத்தவும்.

## 173. குளிர்சுரவுண்டை.

சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் விராகனெடை-கவ, சுத்திசெய்த துத்தம் விராகனெடை-உஅ, சுத்திசெய்த துருசு விராகனெடை-ஒஞு, ஊமத்தையிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சரக்குகளைத் தனித்தனி பொடித்து ஒன்றாகச்சேர்த்து அரைமணி நேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்துக் கடுகளவுமாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-ஒ-க.

அநுபானம்:—பசும்பால், தனப்பால், தேன், இஞ்சிக்கஷாயம், வெல்லம் முதலியவைகளாம்.

உபயோகம்:—குளிர் காண்பதற்கு ஒருமணிக்கு முன் இதனைக்கொடுத்தால் குளிரைவராமல் தடுத்துவிடும்; அல்லது குளிரின் வேகத்தைத்தணித்து விடும். வழமைபோல் காலை மாலையிலும் உபயோகித்து வரலாம்.

பத்தியம்:—இதுபாஷாணம் சேர்ந்த மாத்திரையாகையால் பாலன்னம், அவசியமானால் புளித்தமோர் ஆகியவைகளைச் சேர்த்துக்கொள்ளலாம்.

சுரமஞ்சரி முறைவிளக்கம் முற்றுப்பெற்றது.

இராஜரிஷி

வீரமாமுனி மகானுபாவர்

அருளிச்செய்த

தனிமுறைத் திரட்டு.

## 174. பூவரசங்கா யெண்ணெய்

கலிவெண்பா.

மூவுலகுந்தான்படைத்தமுன்னோன்றனைப்பணிந்து
பூவரசங்காயெண்ணெய்பூவுலகில்—மேவக்கேள்

கட்டாகப்பூவரசங்காய்ச்சாறுநாலுபடி
திட்டநற்சங்கஞ்சாறுசேரஞ்சு—இட்ட

எருக்கின்கிழங்குடனே பேய்க்குஞ்சுதொத்தி
மருவுங்கொடைக்கிழங்குவன்மை—பெருகுகின்ற

வாதமடக்கிவளருஞ்சிவகரந்தை
நீதகிளிமூக்குக்கிழங்குடனே—பாதரவாக்

கோழியாவாரைகுலவுசிலாவாரைகளில்
வாழுமிலைகள்வகைகளெல்லாம்—மீளவே

சாறுபடியரையாத்தானெடுத்துமுன்சாற்றில்
மீறவேசேர்விபரம்விள்ளக்கேள்—கூறுங்

கசாயவகையைக்கருத்தாகக்காண்ப
பசாவியபூவரசிலுற்ற—விசேஷமாம்

பட்டைவெட்டியாறுபலஞ்சேர்பெருமரத்தின்
பட்டைபலம்நாலுபகரக்கேள்—நிட்ட

அழுக்குராவின்கிழங்கிலேத்துபலங்கூட்டு
சமவிருவாட்சிப்பட்டைதானும்—நமதுநறு

மாவிலிங்கப்பட்டைவளர்செங்கத்தாரியுடன்
மேவுமுபர்நிலிகிலவேம்புடனல்—ஆவிரைவேர்

வேம்பின்பட்டையுடனேவிள்ளுங்கொட்டைக்கரந்தை
ஆய்கருவாப்பட்டையறைவகைக்கு—தாங்குபலம்

பத்துக்கால்நல்லபருந்தாழியிற்சேர்த்துச்
சுத்தநீர்நாளிதெடுத்துவிட்டு—வற்றவே

நாலொன்றுக்காய்ச்சிநலமாகமுன்சாற்றில்
ஏலவேசேர்த்தபிப்பிலேற்றியபின்—சாலுமுபர்

கற்கவகைகாந்தம்கருஞ்சீரகத்துடனே
தக்ககார்போகரிசிதாளகமும்—மிக்கதொரு

நெல்லிக்காய்க்கெந்தகமும்நீள்கடுகுரோகிணியும்
செல்வமுடன்காட்டுமிருசீரகமும்—வல்லமையாய்

அன்பானவாலுழுவையாகவகைவகைக்குத்
தென்பாவிராகனைந்துசேர்த்தரைத்து—முன்போல

சிற்றாமணக்கெண்ணெய்செப்பமாய்நாலுபடி
வற்றமல்விட்டுவலைகயாகச்—சொற்றமுன்னும்

கற்கத்தையெல்லாங்கரைத்துமுன்சாற்றிற்கலந்து
மிக்ககடவுள்பதம்வெண்டியபின்—உக்கிரமாத்



திரட்டியேயெரித்துச்சேர்த்தமெழுகுபத
மாமையைப்பார்த்துவடித்தார்பிணிக்கு—ஏமமுறக்

கூறுமொருகாலடிகொன்றடிப்போர்தங்களுக்குப்
பாறும்வியாதிபகரக்கேள்—மீறும்

அழுகிரந்திசெங்கிரந்திபத்திக்காயாற்காய்
முழுக்கிரந்திபுண்கிரந்திமொச்சை—யெழுகிரந்தி

சூலைபதினெட்டுச்சுழல்மேகவாயுபல
பாலபவுத்திரபுண்பாய்சூலை—மேலடக்கும்

அந்திரவாய்வோடனல்கொள்ளும்வாயுபல
கந்தரத்தின்வீக்கங்கருங்கிரந்தி—சிந்தனையாய்

ஈழைவருங்காசமெதிர்க்கின்றசோகையெல்லாம்
விழுமரிகண்டவெங்கயம்போல்—ஞாலமுறு

பத்தியத்தைக்கேளும்பகர்முருங்கைப்பிஞ்சுடனே
வற்றுவின்பாலாம்வழுதுணைங்காய்—சொற்றதொரு

பங்கைப்பயறும்பருப்புடனின்பிஞ்சாகும்
மெச்சுமுளைக்கீரையாம்மெல்லியரே—இச்சையுடன்

உப்புமுருங்கிலையுமொன்றுவறுத்துக்கொள்
கைப்புபுளிகாட்டாதேகாதலுடன்—ஒப்பாகுஞ்

சரீரபலம்பார்த்துச்சுருபத்தியங்கள்
வரிசிபருத்திவ்வெண்ணெய்த்தனைவாய்ந்து.

---

பூவரசங்காயெண்ணெய் மூலம்

முற்றுப்பெற்றது.

கடவுள் துணை.

இராஜரிஷி

## வீரமாமுனி மகானுபாவர்

அருளிச்செய்த

## தனிமுறைத்திரட்டு

## முறைவிளக்கம்.

### 174 பூவரசங்கா யெண்ணெய்.

முறைவிளக்கம்.

(a) சிற்றாமணக் கெண்ணெய் படி-௨.

(b) பருமனானவைகளும், அதிக முற்றலாயில்லாதவைகளும், அதிக இளசாயில்லாதவைகளுமான நடுத்தரமுள்ள பூவரசங்காய்களின் காம்பைக்கத்தரித்து நீக்கிக்கல்லுரலில் அல்லது மரவுரலில்விட்டு இரும்புப்பூணில்லாத மரவுலக்கையாலிடித்துப் பிழிந்த தனிச்சாறு படி-௨. (இதற்குப் பூவரசங்காய்ப் பாலென்று சொல்வது வழக்கம்) அவசியமானால் தனிச்சாறெடுத்த திப்பியில் கொஞ்சம் ஜலத்தைவிட்டுப் பிசைந்து மறுபடியும் நைய இடித்துப்பிழிந்து கொள்ளலாம். கூடியவரையில் தனிச்சாறெடுப்பதற்கே முயற்சி செய்யவேண்டும். இந்தப் பூவரசமரமானது அதிகம் வயதுசென்றதாயிருந்தால் மிகவும் சிரேஷ்டம். அவ்விதம்கிடைக்காதபோது அகப்பட்ட வகையைத்தான் சேர்த்துக்கொள்ளவேண்டும். சங்கங்குப்பியிலைச்சாறு படி-௨,



எருக்கங்கிழங்குச்சாறு, * சுடுதாத்தியிலைச்சாறு அல்லது பொடுதலைச்சாறு, † கோடைக்கிழங்குச்சாறு அல்லது ஆகாசக்கருடன் கிழங்குச்சாறு, வாதமடக்கியிலைச்சாறு, சிவகரந்தை சமூலச்சாறு, (சிவகரந்தை அகப்படாவிட்டால் கொட்டைக் கரந்தையிலைச் சாற்றைச்சேர்த்துக்கொள்ளலாம்.) ‡ கிளிமூக்குக் கிழங்குச்சாறு அல்லது கோவைக்கிழங்குச்சாறு, கோழியாவரையிலைச்சாறு, நிலாவாரைச்சாறு இவை வகை-௧-க்குப் படி-௨. இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து மேற்படி (a) யிலுள்ள எண்ணெயில் விட்டு வைக்கவேண்டும்.

குறிப்பு.

இந்தச்சாறுகளும், மற்றவகைகளும்ஏககாலத்தில் கிடைப்பது அரிதாகையால் அப்போதைக்கப்போது அகப்படும் சாறுகளை மேற்படி எண்ணெயில் விட்டுப் பிரதிதினமும் இளஞ்சூடாகக் காய்ச்சிக்கொண்டு வரவேண்டும்.

(c) முற்றின பூவரசம்பட்டை, (இதிலுள்ள மேற்புறணியையும் உட்சல்லையையும் நீக்கி மத்தியில சிவப்பாயிருக்கிற சதைப்பாகத்தில் ஆறுபலம் நிறுத்தெடுத்துக்கொள்ளவேண்டும்.) பெருமரப்பட்டைபலம்-௪. அமுக்கிராக்கிழங்கு பலம்-௫, இருவாட்சி மரப்பட்டை, மாவிலிங்கப்பட்டை, செங்கத்தாரிப்பட்டை, அவுரிவேர், நிலவேம்பு, ஆவாரைவேர், முற்றினவேம்பின்பட்டை, கொட்டைக்கரந்தைவேர், பெருலவங்கப்பட்டை இ

* † ‡ இம்மூன்று புட்கோட்டுக்கும் விபரம் இம்முறைகளின் ஈற்றில் எழுதியிருக்கும் விண்ணப்பத்திற் கண்டுகொள்க.

யை வகை-க-க்குப் பலம்-உ௦. இவற்றுள் ஒவ்வொன்றையும் நைய நறுக்கி ஒருபெரிய பாண்டத்திற்போட்டுப் பதினாறுபடி ஜலத்தைவிட்டு ஒரு நாளூறவைத்து மறுநாள் அடுப்பேற்றி நான்கிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி இளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கின கஷாயத்தை முன் (a) யில் உள்ளதில் சேர்த்து விடவேண்டும்.

(b) காந்தம் சுத்திசெய்த தாளகம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் இவை வகைக்கு விராகனெடை-ரு. இம்மூன்றையும் தனித்தனி பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து ஒருமணிநேரமரைத்து அஞ்சனம்போலான பின்பு (a) யிலுள்ளதில் தூவிவிடவேண்டும்.

(c) கருஞ்சீரகம், கார்போகரிசி, கடுகுரோகணி, கற்சீரகம், பெருஞ்சீரகம், வாலுழுவைபரிசி இவை வகை-க-க்கு விராகனெடை-ரு. இவற்றை ஒன்றாகச்சேர்த்திடித்துத் தூளாக்கி மேற்கண்ட கஷாயத்தில் கொஞ்சம் எடுத்து வைத்திருந்து அதைச் சிறுகச்சிறுக வார்த்து அம்மியில்வைத்து மைபோலரைத்து மேற்படி (a) யிலுள்ளதில் கரைத்து விடவேண்டும்.

பிறகு மேற்படி (a) யிலுள்ளவைகள் நிறைந்த பாத்திரத்தை அடுப்பில் வைத்துப் புளித்துப்போகாமல் இளஞ்சூடாக மூன்றுநாள் காய்ச்சிவரவேண்டியது. நான்காம் நாள் தீமூட்டித் தீபாக்கினி ஒருசாமம் கமலாக்கினி ஒருசாமம் ஆக இரண்டு சாமமெரித்துப் பிறகு காடாக்கினியாக எரிக்கவேண்டியது. எரிக்கும்போது பாணியினடியில் பிடித்துக்கொள்ளாமலும், பொ



ங்கிவழியாமலும் அடிக்கடி துழாவிக்கொண்டேயிருக்கவேண்டும். ஒருவேளை பொங்கினால் அக்கினியை வெளியில் இழுத்துக்கொள்ளவேண்டும். அல்லது அதைத்தணித்து மெதுவாயெரிக்கவேண்டும். இவ்விதம் ஜாக்கிரதையுடனெரித்து வந்து மெழுகு திரள்பதத்திலிறக்கித் தான் வழிபடுகடவுளைத் தோத்திரம்செய்து கூடியவரையில் தானதருமமும் செய்து கம்பளியால் வடிகட்டிப்பீங்கான் ஜாடியில்பத்திரப்படுத்தவேண்டும். அந்தப்பீங்கான் ஜாடிக்குக் காரக்கிட்டு இருபது நாள் தானியபுடம் வைத்தெடுத்து உபயோகிக்கவேண்டியது. இந்த அருமையான எண்ணெயானது எத்தனை நாளிருந்து பழமையாகிறதோ அதற்குத்தக்கபடி விசேஷகுணத்தைத்தரும்.

பிரமாணம்:—விராகனெடை-க-உ. காலை மாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

அனுபானம்:—இளநீர், சுக்குக்கஷாயம், சோம்புக்கஷாயம், சோம்புத்திராவகம், கொத்துமல்லிக்கஷாயம், பால் சர்க்கரைசேர்த்த காப்பிபானம், பால் சர்க்கரை சேர்த்த தேயிலைப்பானம் ஆகியவைகளாம்.

உபயோகம்:—அழுகிரந்தி, கருங்கிரந்தி, செங்கிரந்தி, அத்திக்காய்க்கிரந்தி, ஆலங்காய்க்கிரந்தி, நுணாக்காய்க்கிரந்தி, கள்ளிப்பூக்கிரந்தி, புண்கிரந்தி, மொச்சைக்காய்க்கிரந்தி, முதலிய கிரந்திவகைகளும், பதினெட்டு வகைச்சூலைகளும், மேகவாயுகளும், பவுத்திரங்களும், ஓடுகிறவாயுசூலைகளும், அனல்வாயு, அந்திரவாயு முதலிய வாயுவகைகளும், கழுத்துவீக்கம், கண்டமாலை ஆகிய வியாதிகளும், ஈழை, இருமல், இளைப்

பு, காசரோகம் முதலிய கொடியபிணிகளும், சோகைரோக முதலிய பல கடினரோகங்களும் தீரும்.

பத்தியம்:—முருங்கைப்பிஞ்சு, பசுவின்பால், வழுதுணங்காய், பச்சைப்பயறு, புடலம்பிஞ்சு, முளைக்கீரை முதலியனவைகளாம். கசப்பு, புளிப்பு, பெண், புகை ஆகா. முருக்கிலைசேர்த்து வறுத்த உப்பைக்கூட்டிக்கொள்ளலாம். இன்னும் தேகபலம் வியாதிபலம் ஆகியவற்றிற்குத் தக்கபடி சமயோசிதம் போலவும் பத்தியமேற்படுத்தவும்.

## விண்ணப்பம்.

கனவான்களே!

வைத்தியத்தில் வல்லவராகிய இந்த வீரமாமுனிவர் இந்தப் பூவரசங்காயெண்ணெய் முறையை அதிக விசேஷமாகச் சொல்லியிருக்கின்றபடியால், நமது பரம்பரையிலும் உபயோகித்துவரும் பூவரசின் சம்பந்தமான சில முறைகளை லோகோபகாரமாகவும், ஜீவகாருண்யமாகவும் நமது நண்பர்களுக்கு உபயோகப்படும்படி எழுதுகிறோம். அவை பின்வருபவைகளாம்:

## அனுபந்த முறை.

### நமது பூவரசங்காயெண்ணெய்.

(a) சிற்றாமணக்கெண்ணெய் படி-௨, மேற்கண்டபடி எடுத்ததான பூவரசங்காய்ப்பால் படி-௨. இவ்விரண்டையும் மிஸ்ரத்தப்படுகின. எண்ணெய்ப்பானையில்விட்டு வைத்துக்கொள்ளவும்.

(b) ஆடாதோடையிலை, அகத்தியிலை, ஆவாரையிலை, ஆமணக்கிலை, துளசியிலை, இவற்றின் சாறுவகைக்குப்படி-௨, அமுக்குராக்கிழங்குச் சாறுபடி-௨, இச்



ச்சாறுகளை ஒன்றாகக்கலந்து மேற்படி (a) யிலுள்ளதோடு கலந்து வைத்துக்கொள்ளவும்.

(c) வாதமடக்கியிலைச்சாறு, முடக்கொற்றான் சமூலச்சாறு, வேலிப்பருத்தி சமூலச்சாறு, வெண்பருத்தியிலைச்சாறு, சிவப்பு முருக்கிலைச்சாறு, சிறு செருப்படி சமூலச்சாறு, கற்பூரவல்லி சமூலச்சாறு, பாவட்டைச்சமூலச்சாறு, கோழிபாவாரை சமூலச்சாறு, கண்டங்கத்திரி சமூலச்சாறு (இதனைமாத்திரம் கற்கவகைச் சரக்குகளை யரைக்கத் தனியே எடுத்துவைத்துக்கொள்ளவேண்டும்.) பிரமியவழுக்கைச் சமூலச்சாறு, தும்பை சமூலச்சாறு, பொடுதலை சமூலச்சாறு, ஆகாசக்கருடன் கிழங்குச்சாறு, ஆதன்டை சமூலச்சாறு, புளியாரை சமூலச்சாறு, நிலாவாரை சமூலச்சாறு, புரசிலைச்சாறு, சங்கங்குப்பியிலைச்சாறு, வெள்ளறுகு சமூலச்சாறு இவை வகைக்குப்படி-வ, கண்டங்கத்திரிச் சாற்றைத் தவிர மற்ற எல்லாவகைச்சாறுகளையும் ஒன்றாகக்கலந்து முன் (a) யிலுள்ளவற்றோடு சேர்த்துக்கொள்ளவேண்டியது.

(d) தேங்காய்த்தனிப்பால், பருத்திக்கொட்டைப் பருப்புப்பால், வெங்காயச்சாறு இவை வகைக்குப்படி-ரு. இவைகளை ஒன்றாகக்கலந்து முன் (a) யிலுள்ளவைகளில் சேர்த்துக்கொள்ள வேண்டியது.

(e) மேற்றோல் சீவியசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, சதகுப்பை, வசம்பு, வெந்தயம், வெள்ளைப்பூண்டிதழ், ஓமம், சந்தனத்தூள், கருஞ்சீரகம் இவை வகைக்குப்பலம்-௧. இவற்றை சூரணிக்கவேண்டிய

வைகளைச் சூரணித்தும் மற்றவைகளைச் சேர்த்தும் அம்மியில்வைத்து முன் (c) யில் சொல்லியபடி எடுத்துவைத்திருக்கும் கண்டங்கத்திரிச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து அரைத்து வெண்ணெய்போலான பின்பு (a) யிலுள்ளவற்றோடு கரைத்துவிட வேண்டியது.

எல்லாச்சாறு வகைகளும் ஏககாலத்தில் கிடைப்பது கஷ்டமாகையால் கிடைக்கும் சாறுகளை எண்ணெயுடன் கலந்து பிரதிதினமும் முன் முறையிற் சொன்னபடியே கொஞ்சம் சுண்டக்காட்டிக்கொண்டு வரவேண்டியது. அப்படிச் செய்யாவிட்டால் எண்ணெயானது புளித்துப்போய்க் குணம் குறைய ஏதுவாகும். எல்லாவகைகளும் சேகரமானபின்பு இவை மூட்டி முதல்நாள் தீபாக்கினியாகவும், இரண்டாம் நாள் கமலாக்கினியாகவும் பிறகு காடாக்கினியாகவும் எரித்துக் கடுகு திரள்பதத்தில் கீழிறக்கி இளஞ்சூட்டுடன் கம்பளியில் வடிகட்டி அதில் சீனிசர்க்கரைபலம்-ல, நற்சீரகம் பலம்-ல, ஆகிய இரண்டையும் சூரணித்து மென்பொடியாகத் தூவித் தான் வழிபடுகடவுளை ஸ்தோத்திரம் செய்து தன்னுடையவறையில் தான தருமம் நடத்தி ஜாடிவாயை மூடித் தானியபுடத்தில் இருபது நாள் வைத்தெடுத்துப்பிறகு உபயோகிக்க வேண்டியது.

பிரமாணம்:—விராகனெடை-க-ரு.

அனுபானம்:—இளநீர், பால் சர்க்கரை சேர்த்த காப்பிப்பானம், பால் சர்க்கரை சேர்த்த தேபானம், சுக்குக்கஷாயம், சோம்புத்திராவகம், சோம்புக்கஷாயம் முதலியவைகளாம்.



உபயோகம், பத்தியம் முதலியவைகளெல்லாம் முன்முறையிற் கூறியவைகளேயாம்.

நமது பூவரசங்காயெண்ணெய் (வேறு.)

(a) பூவரசங்காய்ச்சாறு, பூவரசம்பட்டைச்சாறு, வெங்காயச்சாறு, நுணாவிலைச்சாறு, அகத்தியிலைச்சாறு, கோவையிலைச்சாறு, விழுதியிலைச்சாறு, ஊணுணியிலைச்சாறு இவைவகைக்குப்படி-வ, சிற்றாமணக்கெண்ணெய் படி-க, இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து ஒரு பாத்திரத்தில் விட்டுவைத்துக் கொள்ளவும்.

(b) பறங்கிப்பட்டை, இலவங்கம், ஏலரிசி, இலவங்கப்பட்டை, அதிமதுரம், நற்சீரகம், ஜாதிக்காய், கார்போகரிசி, வெட்பாலையரிசி, நீர்முள்ளிவிதை, துத்திவிதை இவை வகைக்குப்பலம்-வ. இவைகளையிடித்துச்சூரணித்து அம்மியில்வைத்து மேற்படிசாறுகளில் ஒருவகையைவிட்டரைத்துமுன் (a) யிலுள்ளவற்றோடுகலந்து அடுப்பேற்றித்தீபாக்கினி ஒருசாமமும், கமலாக்கினி ஒருசாமமும் எரித்துப்பிறகு காடாக்கினிசாக எரித்துக்கடுகு திரள்பதத்தில் இறக்கி இளஞ்சூட்டுடன் கம்பளியில் வடிகட்டி ஒருஜாடியில் விட்டுத்தான்வழிபடுகடவுளைத்தியானித்து ஜாடிவாய்க்குக் காசகட்டி இருபதுநாள் தானியபுடம்வைத்து எடுத்து உபயோகிக்கவும்.

பிரமாணம்:—விராகனெடை-க-முதல் -உ-வரை.

அனுபானமும், உபயோகமும்:— முன்முறைகளில் சொல்லியவைகளே.

## பூவரசெண்ணெய்.

அதிககாட்டப்பட்ட பூவரசம்பட்டைபலம்-உ0, (பட்டையிலுள்ள மேற்புறத்தை, அடியிலுள்ள ஜவ்வு ஆகியவைகளை நீக்கி நடுவிலுள்ள சதையைமாத்திரம் மேற்கண்ட எடைநிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். இது எத்தனைநாள் பழமையுள்ளதாயிருக்கிறதோ அத்தனைக் கத்தனை குணம் தரும்!) இந்தப்பட்டையை இடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்ளவும். சிற்றாமணக்கெண்ணெய் பலம்-௩0, ஏலரிசிச்சூரணம், ஜாதிக்காய்ச் சூரணம்வகைக்குப் பலம்-௰.

செய்முறை:—எண்ணெயை ஈயம்பூசின ஒருதாம்பிரபாத்திரத்தில் விட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து எண்ணெய் கொதிகண்டவுடன் மேற்படிபட்டைத்தூளைக் கொஞ்சமெடுத்துத் தூவித்துழாவ வேண்டும். இவ்விதம் ஒரு க்ஷணத்திற்கொவ்வொருதடவை கொஞ்சம் கொஞ்சம் தூவித்துழாவிக்கொண்டேயிருக்கவேண்டும். இவ்விதம் செய்து தூளெல்லாம் ஆனபின்பு எண்ணெயானது இரத்தத்தைப்போல்சிவந்துபோயிருக்கும். இதில்முன் சொல்லியிருக்கிற இரண்டு சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து மென்பொடியாகத்தூவி நன்றாக மிஸ்ரமித்துச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-உ-௫.

அனுபானம்:—பால், இளநீர், காப்பிப்பானம், தேயானம் முதலியவைகளாம்;

உபயோகம்:—பிரந்திகள், குஷ்டங்கள், மேகங்கள் ஆகிய இவை ஆரம்பமாகவும் சொற்பமாகவுமிருந்தால் தீரும். இன்னும் இதனால் கடினமான வியாதிக



ளும் தீர்ந்திருக்கின்றன. அது அவரவர்களின் அதிர்ஷ்டத்தைச்சார்ந்தது. குழந்தைகளுக்குக்காணும் சிரங்குகள், கரப்பான்கள் ஆகிய பலவகைப்புண்ரோகங்கள் இந்த எண்ணெயைக்கண்டவுடன் பறந்துபோகின்றன.

பத்தியம்:—சமயோசிதம்போலவும், தேகசுபாவத்திற்குத்தக்கபடியும் ஏற்படுத்தவும்.

## விண்ணப்பம்.

* சுடுதாரத்தி—இது புன்னைக்குக்கீரையிலையைப்போன்று சற்று சிறிதாயிருக்குமென்றும், உஷ்ணத்தை அதிக சீக்கிரம் சாந்தப்படுத்துகிறபடியால் இதற்குச் சூடுதாரத்தியென்னும் பெயராய் அதுசுடுதாரத்தியெனக்கூறுகிறதென்றும் சிலர் சொல்லுகின்றார்கள். இன்னும் இந்த இலைச்சாற்றைக் கையில் நன்றாகத்தேய்த்து உலர்ந்தபின்பு நெருப்பைக் கையிலெடுத்தால் சூடு தோற்றுகிறதில்லையாகையால் இதற்கு மேற்கண்டவாறு சூடுதாரத்தியெனப் பெயருண்டாயிற்றென்றும்சிலர் சொல்லுகின்றார்கள். வேறு சிலர் சொல்கிறதாவது: "மேற்கண்ட இனங்கள் அல்ல; இது பொடுதலையினத்தைச்சேர்ந்தது; பொடுதலையிலையைப் பார்க்கிலும் இதுசற்றுதடித்ததாகவும் இதன்சாறு வழ வழப்புள்ளதாகவுமிருக்கும். சற்றேறக்குறையப் பொடுதலையின் குணமே இருக்கின்றபடியால் இதற்குப்பதிலாகப் பொடுதலைச்சாற்றைச் சேர்த்தும் செய்வது உசிதம்" என்பதே. இவ்விதமே நமது நண்பர்களுட் சிலர் தம் தம்முடைய அனுபவத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகையால் நாமும் அவர்கள் அனுபவப்படியே சுடுதாரத்திக்குப்பதிலாகப் பொடுதலையைச் சேர்த்துக்கொள்ளலாமென எழுதியிருக்கின்றோம்.

† கோடைக்கிழங்கு—இது பெரும்பான்மையும் தென் தேசத்தின் புன்செய் நிலங்களில் உற்பத்தியாகும்; இதன் இலை வெள்ளைப்பூண்டின் இலைகளைப்போ

ள்ளிருக்கும்; இதன் கிழங்குகள் வெள்ளைப்பூண்டைப் போலவும் அதற்குச் சற்றுபருமனாகவுமிருக்கும். இது நல்லகோடைகாலத்திலும் ஈரமாகவே யிருக்கின்றபடியால் இதற்குக் கோடைக்கிழங்கெனப் பெயரிடப்பட்டதுபோலும். இந்தக்கிழங்கு எல்லா விடங்களிலும் கிடைக்காததாகையால் இதற்குப் பதிலாக ஆகாசக்கருடன் கிழங்கைச்சேர்த்துச் செய்வது சிலர் அனுபவமுறை; நாமும் அப்படியே எழுதியிருக்கின்றோம்.

‡ கிளிமூக்குக்கிழங்கு—இந்தக்கிழங்கைப் பற்றியும் பலர் பலவிதமாகக்கூறுகின்றனர்; மதராஸில் கலப்பைக்கிழங்கிற்குக் கிளிமூக்குக் கிழங்கெனப் பெயர் வழங்கப்படுகிறது. கலப்பைக்கிழங்கு விஷமுள்ளதாகையால் இது சாஸ்திரம், யுக்தி, அனுபவம் முதலியவைகளுக்கு ஒப்பவில்லை. வேறு சிலர்கோவைக்கிழங்கைக் கிளிமூக்குக் கிழங்கெனச் சொல்கின்றார்கள்; அதிலும் சந்தேகமுண்டு. அடியேன் புத்திக்கெட்டினவரையில் கிளிமூக்குக்கிழங்கு வேறுஇனம், கோவைக்கிழங்கு வேறு இனம் என்று விளங்குகின்றது. ஆனால், கிளிமூக்குக் கிழங்குக்குப்பதிலாகக்கோவைக்கிழங்கைச்சேர்ப்பது சுருதி, யுக்தி, அனுபவத்திற்கு விரோதமாகாது. சில அனுபவசாலிகள் கிளிமூக்குக்கிழங்குக்குப்பதிலாகக்கோவைக்கிழங்கையே சேர்த்துச்செய்துவருவதாகத் தெரியவருகின்றது; அவர்கள் அனுபவப்படியே நாமும் இங்கெழுதி யிருக்கின்றோம்.

இந்த மூன்று மூலிகைகளைப்பற்றி அதிகமாகத் தெரிந்த அனுபவசாலிகள் அநேகரிருக்கலாம். தயவுசெய்து லோகோபகாரமாக இவைகளைப்பற்றி அதிக விபரமாக எழுதினால் அவ்விபரத்தை யுக்தமாயிருந்தால் அவர்கள் பெயருடன் அடுத்த பதிப்பில் வெளிப்படுத்துவோம்.

பூவரசங்காயெண்ணெய் முறைவிளக்கம் முற்றுப்பெற்றது.

---



## 175. மேகனாதித் தைலம்.

### கலிவெண்பா.

சீர்மேவுமாதிபரன்சிந்தைமகிழ்ந்தேபடைத்த
பார்மீதின்மானிடர்க்குப்பண்பாக—ஏர்மேவும்

மாத்திரைகளுண்டைமருந்துபற்பசூரணங்கள் [தாய்
சேர்த்தெண்ணெய்லேகியங்கள்செய்வதிலே—நேர்த்திய

ஆகமத்திலுள்ளபடியன்பார்முறையான
மேகனாதித்தயிலம்விள்ளுகிறேன்—பாகமுடன்

புங்குபிராய்மாவிலுப்பைபுரசமிஞ்சிலெட்டியொடு
சங்குவளையூழலத்திதன்னுடனே—பொங்காண்டு

நாறுசென்றவேம்புநுவலுமுயர்பூவரசு
தேறுகிலவாகைசிவன்வேம்பு—மாவிலிங்கம்

பத்துடனேயைந்தின்பட்டைவகைகால்வீசை
உத்தமியேதூவியவையோங்கியிடி—கைத்தலத்தால்

பானைதனிற்போட்டுப்படிபதினாறுஞ்சலத்தை
யூனமறவிட்டேயுவந்தடுப்பில்—கானவெரி

கொள்குழம்பாவெந்தபின்புகோதுதள்ளியேபிழிந்து
உள்மகிழுந்தாழிதனிலூற்றியே—விள்ளுகின்றால்

கற்றூளேயின்னுங்கருதுமுறையதனை
உற்றுரைப்பேனெல்லாமுகந்தறிவாய்—சித்ரகொழும்

ஆடுதின்னாப்பாளைகழலாங்கொடியும்வெள்ளறுகுந்
தேடுசங்கங்குப்பிசெருப்படையும்—நாடிவளர்

தைவேளைகோரகத்தக்கதொருமேனியுடன்
மொய்கொளாவாரைமுசுமுசுக்கை—தூய்யமுடக்

குற்றான்வல்லாரையுடனுத்தாமணியின்றும்
சொற்றபிரமியிலைதான்றுகின்ற—சித்தியுறும்

கொட்டைக்கரந்தைகுளிர்ந்தபொடுதலையும்
இட்டமுடன்சேர்த்தேதெரிந்திடித்திப்—பற்றுதந்தில்

கூட்டுவகைக்குழங்காங்கோதற்றசாறதனை
வாட்டமின்றிவாங்கிமுன்னீர்மாட்டியே—கூட்டடுப்பில்

கற்பகமாமேகபதங்காதலுடனேதொழுது
நற்றவத்தோர்பொற்பதத்தைநாடியே-பொற்புடனே

வீறுகவேற்றியேவேண்டியெரித்திடே
மீறுக்குழம்பதுபோல்மேவையிலே-பேறுன

நல்லெண்ணெய்ரண்டுபடிநாட்டத்திற்கூசாமல்
சொல்லின்படியதிலேசூழவிடு—வில்பறங்கிப்

பட்டைபலமிரண்டுபண்பாத்தூள்செய்துசேங்
கொட்டைபலமொன்றுகுமிழ்போக்கிக்-கட்டையுரல்

தன்னிலிடித்துமிகத்தாவிக்கின்டித்தெள்ளி
முன்னீரிலெண்ணெயிலேமோதவிடு-மன்றுகலம்

ஏழுடிப்பற்றுமன்மிகக்கிண்டிமெழுகாம்போது
தாழவிறக்கத்தருணஞ்சாற்றக்கேள்—வாழுகின்ற

இட்டதெய்வந்தன்னையியல்பாவணங்கியுடன்
நட்டமின்றியேயிறக்கிநாடிவைப்பாய்—கெட்டதொரு



நோயாளிக்கந்திசந்திரண்மையாங்கற்கமுடன்
காயாதியோங்கக்காண்டியிடு-சாயாத

கால்முடக்குகைமுடக்குகாலும்வெடிகுலைபொடு
மேல்வீக்கமேற்கருப்புமேவுகுஷ்டம்-மால்சேர்

அரையாப்பிலிங்கப்புற்றுனபவுத்திரம்
விரையாப்புவாதம்விலகும்-உரையார

வாய்த்தவருங்கிரந்திவந்திடுங்காமாலையினை
மாற்றுவைக்கும்வேல்விழியாள்மாயமெலாம்-ஏற்ற

மதுமேகங்கிட்டாதுமாதுவிஷமெட்டா
திதிஞலினுங்கேளாயேற்ற-மதுமேகத்

தித்திப்புதிருந்தினவுமுதல்மீன்கவுச்சி
வற்றழுக்குமுட்டையதின்மாகவுச்சி-பற்றிவரும்

கற்றாழைநாற்றங்கனமாகச்சார்ந்துவந்து
பற்றுங்கிரிச்சனங்கள்பாறுமே—முற்றக்கேள்

சத்தியெரிகுன்மந்தளர்மாவிரத்தபித்தம்
மெத்தமகோதரங்கள்விட்டோடும்—வற்றிவரும்

தேகப்புசிப்பாந்திவாகரன்போல்மேனியுண்டாம்
வாகைமதன்போலவசியமுண்டாம்—போகச்

சுரிகுழலைவன்பிகடிருழாபெருநோய்
அரியகரிமேகமடரா—பெரியசொறி

மன்னிமெலிகடிகள்வாய்ந்தகுறைநோய்கள்
கண்டமாலையுங்காந்தோடும்—விண்டிடக்கேள்

பள்ளம்விழுந்தபடர்தாமரைமுதலாங்
கள்ளத்தினவெழும்புங்கட்டிகளும்—விள்ளுகின்ற

கைமறைகள்கால்மறைகள்காட்டுகின்றமெய்மறைகள்
நையுமபானம்மறைகளைந்தோடும்—மைவிழியார்

பக்கந்தொடர்ந்துவந்துபற்றியபுண்ணீராம்பல்
பக்கப்பிளவைபரிசூலைகளும்—கெக்கரிக்கும்

அன்னத்துவாரமழியும்பிரமேகம் [கில்
உண்ணாக்குத்தொண்டையடைப்போயுமே—உண்ணாக்

வாய்சிங்கரோகமுதல்வாய்த்தகன்னப்புற்றுடனே
பாய்மாவயிறூதல்பாண்டுகளும்—மாண்டுவிடும்

வாதமோரெண்பதுமேவந்தபித்தம்நாற்பதுவி
ரோதசிலேற்பனந்தொண்ணூற்றாறு—சாதகமாய்

ஆறுவிஷக்கரப்பானனைவெல்லாம்போம்புவியில்
வேறுவினும்பல்வியாதியும்போம்—பேறுகப்

பத்தியத்தைக்கொள்வதற்குப்பாடுகிறேன்கேள்நீயும்
சத்தியமாவுப்புமோச்சைதான்கூட்டி—நத்துகின்ற

முற்றன்முளைக்கீரைமுன்னுபிஞ்சுக்கத்தரிக்காய்
சுத்தப்பருப்பாந்துவரையுடன்—பற்றியரும்

பாசிப்பயறும்பருஞ்சீனிசர்க்கரையும்
தேசிப்பழமுந்தினங்கூட்டு—வாச

முருங்கையதின்பிஞ்சும்மோசமில்லாமல்வி
வரும்வெந்தயத்துடனேமாண்பு—தருகின்ற



வெள்ளாடுநிம்புமுயல்மேவுங்கவுதாரி
உள்ளான்சிறைக்காடையூர்க்குருவி—நல்லாய்கேள்

செல்வியுயர்நாரத்தைநோராப்பிரண்டையுடன்
சொல்லரியசுண்டைக்காய்தூதுவளை—வெள்ளரியின்

பிஞ்சுடனுதண்டையிறங்குமிந்தவர்க்கமாம்
கொஞ்சம்பசும்பாலுங்கூட்டிவிடு—வஞ்சியரே

ஆறுநாட்சென்றபின்னேயாவின்மோர்தான்கூட்டு
தேறுநாள்மூவைந்துசென்றபின்பு—கூறென்னின்

எண்ணெய்தனின்முழுகிவிதமாஞ்சிகைக்காயால்
வெந்நீர்குளிரவிட்டுமேல்குளிப்பாய்—நன்னயமாய்

மேனிகுளிர்ந்துடனேமெய்ச்சோபந்தான்தீர்ந்து
வான்மலர்போலாகுமினும்வஞ்சியருக்—கானவெழிற்

கெற்பமூன்றுநிவிடக்கேடின்றியேகுழவி
பெற்றுக்குளிர்ந்திருப்பார்பேதமின்றிச்சொற்றதொரு

நாயகமாங்கெற்பப்புழுவினுக்குநாடியிடப்
பயதுவுங்கெண்டைகளும்பாழாகும்—தூய

துறைபிறவாக்கெற்பந்துலங்கிவிளங்கு
மறுகோஷ்டமில்லையகிழ்வாய்—தறையில்வரு

பெற்றமலடிபெருமலடிமேயகற்றும்
மற்றமலடெல்லாமருவாது—பித்தரைப்போல்

ஆலிபத்திலோடிபலைந்தும்வாதபிள்ளை
மூலவிக்கிரகம்போல்முளைக்குமே—ஞாலமிசை

மேகநாதித்தயிலம்மேதினியோர்செய்தபுண்ணிய
வாகினவிக்குவழுத்தினேன்—போகமிகும்

ஆகையினால்மூவேழுநாள்மட்டருந்தியே
தோகைசுதனைப்பெறவேசொல்.

மேகநாதித்தைலம் மூலம் முற்றுப்பெற்றது.

## 175. மேகாருதித் தைலம்.

### முறைவிளக்கம்.

(a) புங்கம்பட்டை, பிராயம்பட்டை, மாம்பட்டை, இலுப்பைப் பட்டை, புரசம்பட்டை, அழிஞ்சில்பட்டை, எட்டிப்பட்டை, ஒதியம்பட்டை, சங்கம்பட்டை, கல்லத்திப்பட்டை, நூறுவருஷஞ்சென்ற வேப்பம்பட்டை, பூவரசம்பட்டை, நிலவாகைப்பட்டை, சிவனார் வேம்புசமூலம், மாவிலிங்கப்பட்டை இந்தப்பதினைந்து வகைகளில் சிவனார்வேம்பைத்தவிர மற்றப்பட்டைகளிலுள்ள மேற்புறணியையும் உள்பாகத்திலுள்ள ஜவ்வுப்பட்டையையும் நீக்கி மத்தியிலுள்ள சதைப்பாகத்தில் வகை-௧-க்கு-௫௦-பலம் வீதமாக நிறுத்தெடுத்துக்கொள்ள வேண்டியது. சிவனார்வேம்பையும்-௧௦-பலம் நிறுத்தெடுத்துக்கொள்ளவேண்டியது. மேற்படி பட்டைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே சிதைத்துப் பழம்பாண்டத்திற் போட்டுப் பதினாறுபடி ஆற்றுஜலத்தை அதில்விட்டு இரண்டு இராப்பகல் ஊறவைத்து மூன்றாநாள் அடுப்பேற்றிக் கமலாக்கினியாக எரித்து எட்டிலொருபாகமாகச் சுண்டினபின்பு இறக்கி இளஞ்சூட்டுடன் நன்றாகப்பிசைந்து வடிகட்டித்திப்பி நீக்கின கஷாயத்தை எடுத்துக்கொள்ளவேண்டியது. இது சுமார் இரண்டுபடிக்குக்குறையாமலிருக்கவேண்டும். இரண்டுபடிக்குக்கொஞ்சம் அதிகமாயிருந்தால் தனியே அந்தக் கஷாயத்தைமாத்திரம்காய்ச்சி மேற்கண்ட அளவுக்குச் சுண்டவைத்துக் கொள்ளலாம். பட்டையில் கஷாயம் நின்றுபோகாமல் கம்பளித்துணியில் கட்டிகட்டி இறுத்துக்கொள்ளவேண்டியது. சாறுபிழிகிற எந்திரமிருந்தால் அதில் வைத்துப்பிழிந்துகொள்வது மிகவும் சிரேஷ்டம்; அப்படியில்லாதபக்ஷத்தில் மேற்கண்டபடி கம்பளியில் வைத்துக் கட்டிகட்டிப் பிழிந்து கொள்ள வேண்டியது. சமயத்திற்குத் தகுந்தபடி புத்திமான்கள் கஷாயம் வீணாகாமல் ஜாக்கிரதையுடன் பிழிந்தெடுத்துக் கொள்வார்கள்.



(b) ஆடுதின்னாப்பாளையிலைச்சாறு, கழற்கொடிசமூலச்சாறு, வெள்ளறுகுசமூலச்சாறு, சங்கங்குப்பியிலைச்சாறு, சிறுசெருப்படிச்சாறு, (இது அகப்படாவிட்டால் பெருஞ்செருப்படிச்சாற்றைச் சேர்த்துக்கொள்ளலாம்.) நைவேளைசமூலச்சாறு, குப்பைமேனியிலைச்சாறு, ஆவாரையிலைச்சாறு, முசுமுசுக்கை யிலைச்சாறு, முடக்கற்றான்சமூலச்சாறு, வல்லாரைச்சாறு, வேலிப்பருத்திசமூலச்சாறு, பிரமிசமூலச்சாறு, கொட்டைக்கரந்தைசமூலச்சாறு, பொடுதலைச்சாறு, ஆகிய இப்பதினைந்துசாறுகளும் வகை-௧-க்கு ஆழாக்கு-௨-இந்தமூலிகைகளிற் சாறெடுக்கும்போது இவற்றுடன் வேறுஜாதி இலைகளும் சேர்ந்திருக்குமாகையால் அவ்விதம் கலந்திருக்கும் வேறுஜாதிகளை நன்றாக ஆய்ந்து அவைகளை நீக்கி இருப்புக்கட்டப்பாரையாலிடிக்காமல் கல்லுரலிற் கழுந்துலக்கையால்ஒவ்வொன்றையும் தனித்தனியிடித்துத்தனிச்சாறாக மேற்கண்ட அளவு பிழிந்தெடுத்துக்கொள்ள வேண்டியது. அல்லது சாறெடுக்கும் எந்திரமிருந்தால் அதில்வைத்துப் பிழிந்தெடுத்துக் கொள்ளலாம். இந்தச்சாறுவகைகளை யெல்லாம் ஒன்றாகக்கலந்துவைத்துக் கொள்ளவும். இந்த மூலிகைகளெல்லாம் ஏககாலத்தில் அகப்படுவது கஷ்டமாயிருந்தால் முன் சித்தப்படுத்தின கஷாயத்தையும் பின் சொ

ல்லப்படும் எண்ணெயையும் ஒரு எண்ணெய்த்தாழி யில் வார்த்து அதில் அப்போதைக்கப்போது அகப்படும் மூலிகைகளின் சாற்றைவிட்டுக் கொஞ்சம்கூட காய்ச்சிக்கொண்டுவந்து எல்லாச்சாறுகளும் அகப்பட்டபின்பு கீழ்ச்சொல்லப்படும் பாகப்படிகாய்ச்சிக் கொள்ளலாம்.

(c) புங்கம்வேரைச் சன்னமாகச் [illegible]இடித்துப் பிழிந்தசாறுபடி-௧.

(d) நல்லெண்ணெய் படி-௨.

(e) பறங்கிப்பட்டை பலம் - ௨, (இதனைச் சுத்தி செய்யாமலே தூள்செய்து கொள்ளவும்.) குழிவெட்டிச்சாணிப்பாலில் வேகவைத்து ஜலத்தில் கழுவிப் புளியஞ்சாற்றில் வேகவைத்து உலர்த்திப்பொடித்த சேங்கொட்டை பலம்-௧, (இதனைக் கல்லுரலில்மைபோலிடித்து வைத்துக்கொள்ளவும்.)

செய்முறை:—(d) யிலுள்ள எண்ணெயை ஒரு பழகினதாழியில்விட்டு அதன்மேல் (a) யிலுள்ள கஷாயத்தையும், (b) யிலுள்ள சாறுவகைகளையும், (c) யிலுள்ள சாற்றையும்விட்டு வழிபடுகவுளைத் தியாளித்து அடுப்பேற்றிக் கமலாக்கினியாகமூன்றுநாள்வரையில் எரித்துக் குழம்புப்பதமாகவருஞ்சமயத்தில் (e) யிலுள்ள பறங்கிப்பட்டைத் தூளையும், சேராங்கொட்டையையும் அதில்போடவேண்டியது. ஆனால், அப்போது உடனே எண்ணெய் பொங்குமாகையால் தீயைக்குறைத்து மேற்படி சரக்கைக்கொஞ்சங் கொஞ்சமாகப்போட்டு அடிபிடிக்காமல் துழாவிக்கொண்டேயிருக்கவேண்டியது. மேற்படி இரண்டு சரக்கும் சேர்த்தபின்பு அடிப்பிடிப்பதும் பொங்குவதும் சகசமாகையால் இதைச்



செய்யும்போது அந்தச் சமயத்தில் அதிக ஜாக்கிரதை யாகத் தீயையெரித்து வருவதுடன் அடிக்கடி துழாவிக் கொண்டேயிருக்கவேண்டியது. இவ்விதம் எரித்துவந்து மெழுகுபதமாகுந்தருணத்தில் இறக்கி இளஞ்சூட்டுடன் கம்பளியில் வடிகட்டிப் பீங்கான் ஜாடியில் வைத்துப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-௧ ௨.

அனுபானம்:—இளநீர், காப்பிபானம், தேபானம், சுக்குக்கஷாயம், வெள்ளரிவிதையை அரைத்துப் பிழிந்தபால், வேப்பங்கொழுந்துச்சாறு முதலியவைகளாம்.

உபயோகம்:—இதனைச் சாப்பிட ஆரம்பிக்கும் போது தங்கள் தங்கள் சக்திக்கியன்றபடி தானதருமங்களைச்செய்து ஆரம்பிக்கவேண்டும். அவ்வாறு உபயோகிக்க, கால்முடக்கு, கைமுடக்கு, வெடிசூலை, மேல்வீக்கம், மேல்கருப்பு, குஷ்டம், அரையாப்பு, இலிங்கப்புற்று, பவுத்திரம், விரைவாதம், கிரந்தி, காமாலை, மதுமேகம், ஸ்திரீவியாதிகள், நீரிலுண்டாம் சர்க்கரை, தினவு, தேகத்திலுண்டாம் மீன்கவுச்சி, முட்டைக்கவுச்சி, கற்றாழைநாற்றம், மூத்திரக்கிரிச்சனங்கள், சத்திகுன்மம், எரிகுன்மம், இரத்தபித்தரோகங்கள், மகோதரரோகம், மந்தாக்கினிரோகம், வண்டுகடி, பெருவியாதி, கரிமேகம், சொறி, எலிகடி விஷம், குறைநோய்கள், கண்டமாலை, உடலில் பள்ளம்விழுந்த படர்தாமரை, தினவோடு சேர்ந்தகட்டிகள், கைகால்தடிப்பு, தேகத்தடிப்பு, ஆசனத்தடிப்பு, பலவகைப்புண்கள், நீராம்பல், பக்கப்பிளவை, சூலை, மேல்வாய்த்துவாரம், பிரமேகம், உ

ள்ளுக்கடைப்பு, தொண்டையடைப்பு, வாயிலுண்டாகும் சிக்கரோகம், கன்னப்புற்று, வயிற்றுப்பொருமல், பாண்டு, எண்பதுவகைவாதம், நாற்பதுவகைப்பித்தங்கள், சிலேற்பனக்கோளாறு, விஷகரப்பான் ஆகியரோகங்கள் தீரும்; பசிதீபனமுண்டாகும்; இரத்தசுத்தியுண்டாகிச் சூரியனைப்போல் தேககாந்தியும் முகவசீகரமுமுண்டாகும்; தேகக்கட்டுமுறும் ஆண்மையுமுண்டாகும்.

வீரியபலம் தேகபலம் ஆகியவைகளுக்குத்தகுந்தபடி இதை ஏழுநாள் பதினொன்றுநாள் இருபத்தொருநாள் உபயோகிக்கவேண்டியது.

சில ஸ்திரீகளுக்குக் கருச்சிதைவு, அகாலப்பிரசவம் ஆகியவைகளுண்டாகிச் சிசுவானது சேதமாகிப்போவதுடன் அபாயமுமுண்டாகும். அத்தகையினர்கள் கருத்தரித்த மூன்றுமாதத்திலும் ஆறுமாதத்திலும் இதனை உபயோகித்துவந்தால் கருச்சிதைவில்லாமல் பூரணமாகச் சிசுபிறக்கும்; ஒன்பதாம்மாதத்தில் உபயோகித்தால் சுகப்பிரசவமுமாகும். கருப்பஸ்திரீகளின் தேகபலத்துக்குத் தகுந்ததுபோல் இதனை மிகவும் குறைந்த அளவாக உபயோகித்துவரலாம்.

வீட்டுக்குவிலக்கான முதல் மூன்றுநாளும், அடுத்த ஏழுநாளும் இதனைப் பிரமாணப்படி ஸ்திரீகள் உபயோகித்துவந்தால், கருப்பையிலுள்ள புழுக்கள், கருப்பையைப்பற்றியிருக்கும் மாசுகள், கருப்பையிற்பற்றியிருக்கும் கொழுப்புகள் முதலிய கருவைவளராமற்செய்யும் பலவிதகுற்றங்கள் நீங்கிக்கருத்தரிக்கும், பெருமலடி, இரண்டொரு பிள்ளைகளைப் பெற்றுப்பின்பு மல



டாய்ப்போகுதல் முதலிய பலவகை மலடிகள் நீங்கிக் கடவுளுடைய கிருபையால் சந்ததியுண்டாகும். இவ்விதம் மூன்றுமாதங்கள் செய்யவேண்டியது. ஆனால் பெரியோர்கள் சாபம், உறவின்முறையின் ஞாயமான சாபம் ஆகியவற்றில் ஏதேனுமிருந்தால் அதைநீக்கி இதனை உபயோகித்தால் நிச்சயமாகப் பலனுண்டாகும்.

பத்தியம்:—உப்பு, மொச்சை, கீரைத்தண்டு, கத்தரிப்பிஞ்சு, துவரம்பருப்பு, பச்சைப்பயறு, சீனிசர்க்கரை, எலுமிச்சம்பழம், முருங்கைப்பிஞ்சு, கொத்துமல்லி, வெந்தயம், வெள்ளாட்டிறைச்சி, உடும்பிறைச்சி, முயலிறைச்சி, கவுதாரி, உள்ளான், சிவற்காடை, ஊர்க்குருவி, நெல்லி, நாரத்தை, பிரண்டை, சுண்டக்காய், தூதுவளங்காய், வெள்ளரிப்பிஞ்சு, ஆதண்டை, பசும்பால் இவை கூட்டிக்கொள்ளலாம். இதை எத்தனை நாள் சாப்பிடுகிறோமோ அத்தனைநாள் மறுபத்தியமிருக்கவேண்டியது. மருந்துவிட்ட ஆறும்நாள் பசுமோர் சேர்த்துக்கொள்ளலாம். பதினோராம்நாள் எண்ணெய் தேய்த்துக்கொள்ளலாம். வெந்நீரைக்குளிர ஆறவைத்துச் சிகைக்காய் தேய்த்து ஸ்நானம்செய்யவேண்டும். சூடானவெந்நீரால் ஸ்நானம்செய்தால் உடம்புக்கு அதிக கஷ்டமுண்டாகும்.

## விண்ணப்பம்.

இந்த அருமையான முறையையும் மற்றமுறைகளையும் நமக்கனுப்பிப் பலருக்கும் உபயோகப்படுமாறு இவற்றை அச்சிட்டு வெளிப்படுத்தும்படி தமக்கு அனுபவமான பல விஷயங்களையும் எழுதி அனுமதி கொடுத்த கன்னியந்தங்கிய புண்ணியபுருஷருக்கு நாம் மன

ப்பூர்வமாக நன்றிசெலுத்துகின்றோம். இக்கனவானைப் போலமற்றவர்களும் முன் வருவார்களாயின், "பொன் மலர்நாற்றமுடைத்து" என்பதுபோல இவ்வைத்தியத் தொழில் பயன்தர, அதனால் உலகத்தார் எண்ணிறந்த பிரயோசனத்தை அடைவார்களென்பதிற் சந்தேகமில்லை. இந்த முறைகளினால் பிரயோசனத்தையடையும் ஒவ்வொருவரும் மேற்படி கனவானுக்கு மனப்பூர்வமாக நன்றிசெலுத்தும்படி அதிக வந்தனத்துடன் கேட்டுக்கொள்கிறோம்.

இம்முறைக்கு ஒருபடி புங்கம்வேர்ச்சாறு சேர்க்கும்படி இப்பாடலில் சொல்லப்படவில்லை. ஆனால், இம்முறையை அனுப்பிய மேற்கண்ட கனவான், மே கண்டபடி அந்தச்சாற்றைச் சேர்த்து ஒரு கெடுதியுமில்லாமல் அதிக நன்மையைக்காண்பி வருவதாகத் தம் அனுபவத்தால் நிச்சயித்து நமக்குத்தெரியப் படுத்தியிருக்கின்றார். ஆதலின், அவர் அனுபவத்தை அனுசரித்தே நாமும் இங்குப்புங்கம்பாலைச் சேர்க்கும்படி எழுதியிருக்கிறோம். இதனால் விசேஷகுணமுண்டாகுமேதவிர தீங்கொன்றுமுண்டாகாது.

மேகநாதித்தைல முறைவிளக்கம்

முற்றுப்பெற்றது.

---



## 176. பஞ்சாக்ஷர மூலிஎண்ணெய்.

ஆனந்தக்களிப்பு.

தானதனதந்ததானா—தந்த
தானதனதந்தனாதந்ததானா.

அஞ்சாசமுள்ளதொருமூலி—அது
அஞ்செழுத்தாகியபஞ்சாக்ஷரத்தால்
மிஞ்சியவித்தத்தயிலம்—இந்த
மேதினியோர்க்குப்பிராணசஞ்சீவி.

சஞ்சீவியெருக்கின்பால்வேரும்—நல்ல
சாற்பியபூவும்பழுப்புடன்காயும்
அஞ்சும்வெவ்வேறாக்கி—ரச
மானதோர்பான்டத்தில்வார்முன்னேசொல்வே[ன்

சொல்வேன்சதுர்முகன்விழுதி—மேனி
சுகஞ்செயுந்தழுதாழைகொற்றான்வெட்பாலை
வல்லாரைபசுமஞ்சள்வேளை—நொச்சி
வாகையுத்தாமணிசங்கிலேசேரே.

சேருபதின்மூன்றுமூலி—இவை
சேர்த்திடிக்குரலிலிடித்துப்பிழிந்து
வாருதினிசுக்குழக்கு—முன்னே
வார்த்தரசப்பாலுழக்கதுவாமே.

ஆமேபதினெட்டுழக்கும்—மிக்க
வத்துடன்வேப்பெண்ணெயாறுழக்காமே
ஏமமாச்சட்டியில்விட்டுப்—பின்னும்
இன்பமாச்சொல்லக்கேள்பஞ்சாக்க

ப்பூர்வமாக நன்றிசெலுத்துகின்றோம். இக்கனவானைப் போலமற்றவர்களும் முன் வருவார்களாயின், "பொன் மலர்நாற்றமுடைத்து" என்பதுபோல இவ்வைத்தியத் தொழில் பயன்தர, அதனால் உலகத்தார் எண்ணிறந்த பிரயோசனத்தை அடைவார்களென்பதிற் சந்தேகமில்லை. இந்த முறைகளினால் பிரயோசனத்தையடையும் ஒவ்வொருவரும் மேற்படி கனவானுக்கு மனப்பூர்வமாக நன்றிசெலுத்தும்படி அதிக வந்தனத்துடன் கேட்டுக் கொள்கிறோம்.

இம்முறைக்கு ஒருபடி புங்கம்வேர்ச்சாறு சேர்க்கும்படி இப்பாடலில் சொல்லப்படவில்லை. ஆனால், இம்முறையை அனுப்பிய மேற்கண்ட கனவான்,ர மே. கண்டபடி அந்தச்சாற்றைச் சேர்த்து ஒரு கெடுதியுமில்லாமல் அதிக நன்மையைக்கண்டு வருவதாகத் தம் அனுபவத்தால் நிச்சயித்து நமக்குத்தெரியப் படுத்தியிருக்கின்றார். ஆதலின், அவர் அனுபவத்தை அனுசரித்தே நாமும் இக்குப்புங்கம்பாலைச் சேர்க்கும்படி எழுதியிருக்கிறோம். இதனால் விசேஷகுணமுண்டாகுமேதவிர தீங்கொன்றுமுண்டாகாது.

மேகனாதித்தைல முறைவிளக்கம்

முற்றுப்பெற்றது.

---



## 176. பஞ்சாக்ஷர மூலியெண்ணெய்.

ஆனந்தக்களிப்பு.

தானாதனதந்ததானா-தந்த
தானாதனதந்தனாதந்ததானா.

அஞ்சுரசமுள்ளதொருமூலி-அது
அஞ்செழுத்தாகியபஞ்சாக்ஷரந்தான்
மிஞ்சியவிந்தத்தயிலம்-இந்த
மேதினியோர்க்குப்பிராணசஞ்சீவி.

சஞ்சீவியெருக்கின்பால்வேரும்-நல்ல
சாற்பியபூவும்பழுப்புடன்காயும்
அஞ்சும்வெவ்வேறாக்கி—ரச
மானதோர்பாண்டத்தில்வார்முன்னைசொல்வே[ன்

சொல்வேன்சதுர்முகன்விழுதி-மேனி
சுகஞ்செயுந்தழுதாழைகொற்றான்வெட்பாலை
வல்லாரைபசுமஞ்சள்வேளை-நொச்சி
வாகையுத்தாமணிசங்கிலைசேரே.

சேருபதின்மூன்றுமூலி-இவை
சேர்த்திடிக்காலிடித்துப்பிழிந்து
வாருதினிசுக்குழக்கு--முன்னை
வார்த்தரசம்பாலுழக்கதுவாமே.

ஆமேபதினெட்டுழக்கும்-மிக்க
வத்துடன்வேப்பெண்ணெயாறுழக்காமே
ஏமமாச்சட்டியில்விட்டுப்-பின்னும்
இன்பமாச்சொல்லக்கேள்பண்பாஞ்சா[illegible]

சரக்கானசிறுநாகப்பூவும்-லவங்கம்
சாம்பிராணிசதகுப்பைசுக்குமதூரம்
அரத்தைமரமஞ்சள்மிளகு-நல்ல
வழுக்கிராக்கிழங்குடனேத்திப்பிலியும்

திப்பிலிமஞ்சிஷ்டிபேலம்—நல்ல
சீரகஞ்சிறுதேக்குதிரிபலைமோடி
தப்பில்லாச்செண்பகப்பூவும்—கிரந்தி
தக்கோலம்வெட்பாலையானதும்வாங்கே.

வாங்கேவிளாவின்பிசினி--நல்ல
வாய்விளங்கஞ்சோமனுதிவிழலரிசி
ஓங்கியமூங்கில்வாலுளுவை--நன்று
வுரைத்தவிம்மருந்தெல்லாமொவ்வொருதினிசு

தினிசுக்குக்காற்பலங்காயங்-கொடுஞ்
சித்திரமூலிமனோசிலைபலமே
அணியாகவேயிவையெல்லாம்-கல்வி
லரைத்துக்கரைத்தேயடைவாகவைத்து

தேவபிதாவைநீவேண்டி-நமது
சேயேசுவையீன்றதாய்பதம்பணிந்து
மாவலுவாயடிப்பேற்றி-நல்ல
வன்னிகமலமெழுகின்பதமே

பதமாகவேயிதையிறக்கி-உயர்
பரனைப்புகழ்ந்து தருமஞ்செய்தழகார்
விதமானபாண்டத்தடைப்பாய்-திரும்
வியாதிசொல்வேன்தலைவலிகுலைமுடக்கு



வாயுபிடரிபிழுப்பு-ரணம்
வலிப்புவாதசன்னிகைகாலுதறல்
பாயும்புழுபக்கப்பிடிப்பி-சிவு
பகர்சிரங்கிடுப்புநோய்மேனித்தடிப்பு

பாரிசமானதோர்வாய்வும்-பொல்லாப்
பக்ஷவாதச்சன்னிவாயுப்பிடிப்பும்
நேரில்திரிதோஷசன்னி-இதில்
நேர்ந்தவெட்டைக்குமேநில்லாமலோடும்

ஓடுமேகுன்மங்களெட்டும்-நல்ல
ஓட்டெபற்றேடுங்கொக்கப்பறக்கும்
தேடினுங்கிடையாதித்தயிலம்-நோய்க்குத்
தேர்ந்துதடவித்தலைக்கிட்டுமுழுங்கே

முழுகவேயோடுமுன்பிணிகள்-ஒன்றும்
மோசம்வாராதுள்ளேகொள்ளுகரண்டி
அழுக்கறப்பனிரண்டுநாளும்-இதை
யன்புடனுட்கொண்டிங்கதிசயம்பாரே.

பார்த்திடுவீரமாமுனிவன்-சொன்ன
பழுதில்லாத்தயிலத்தின்பாகமதனை
ஆர்க்கும்வீணாகவிடாமல்-இங்கே
யமைதியுடையவர்க்காராய்ந்துதவே.

பஞ்சாக்ஷர மூலிஎண்ணெய் மூலம்
முற்றுப்பெற்றது.

## 176. பஞ்சாக்ஷர மூலி எண்ணெய் முறை விளக்கம்.

(a) எருக்கின்பால், எருக்கின் வேர்ப்பட்டைச் சாறு, எருக்கின் பழுப்புச்சாறு, எருக்கின்பூச்சாறு, எருக்கின் காய்ச்சாறு இவ்வைந்தும் வகைக்குப்படி-வ.

(b) சதுரக்கள்ளிப்பால், விழுதிச்சாறு, குப்பைமேனியிலைச்சாறு, தழுதாழைச்சாறு, முடக்கற்றான் சமூலச்சாறு, வெட்பாலைச்சாறு, வல்லாரைச்சாறு, மஞ்சட்கிழங்குச்சாறு, நல்லவேளை சமூலச்சாறு, வெண்ணொச்சியிலைச்சாறு, நிலவாகையிலைச்சாறு, வேலிப்பருத்தி சமூலச்சாறு, சங்கிலைச்சாறு இவை வகைக்குப் படி-வ.

(c) வேப்பெண்ணெய் படி-கஉ.

(d) சிறுநாகப்பூ, இலவங்கம், பளிங்குச்சாம்பிராணி, சதகுப்பை, மேற்றோல் சீவின சுக்கு, அதிமதுரம், சன்னராஷ்டம், மரமஞ்சள், மிளகு, அமுக்கிராக்கிழங்கு, யானைத்திப்பிலி, அரிசித்திப்பிலி, மஞ்சிட்டி, ஏலரிசி, நற்சீரகம், சிறுதேக்கு, மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, கண்டத்திப்பிலி, செண்பகப்பூ, கிராந்தி நாயகம், தக்கோலம், வெட்பாலையரிசி, விளாம்பிசின், வாய்விளங்கம், இந்துப்பு, விழலரிசி, மூங்கிலுப்பு, வாலுளுவையரிசி, இவை வகை-க-க்குப் பலம்-வ.

(e) பெருங்காயம், சுத்திசெய்த மனோசிலை, சித்திரமூலவேர்ப்பட்டைச் சூரணம் இவை வகை-ரு-க்குப்பலம்-க. இவற்றுள் பெருங்காயத்தைப் பொரித்துக்கொள்ளவேண்டும்.



செய்முறை:—பழகின பாண்டத்தில் (c) யிலுள்ள எண்ணெயைவிட்டு (a) யிலுள்ளவைகளையும் (b) யிலுள்ளவைகளையும் ஒன்றாகக்கலந்து அதில் விட்டுவிடவேண்டும். பிறகு (d) யிலுள்ளவைகளை யிடித்து வஸ்திரகாயஞ்செய்து அம்மியில் வைத்துப் பசுவின்பாலை அல்லது மேற்படி சாறுவகைகளில் ஒன்றைச் சிறுகச் சிறுகவார்த்து வெண்ணெய்போலரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் பாண்டத்தில் கரைத்து அதை அடுப்பேற்றித்தான் வழிபடுகடவுளைத் தியானித்துக்கமலாக்கினியாக எரித்துவரவேண்டும். எரிக்கும்போது அடிபிடிக்காமலும், பொங்கிப்போகாமலும் அடிக்கடி துழாவிக்கொண்டேயிருக்கவேண்டும். சாறுவகைகள் அரைவாசி சுண்டின பக்குவத்தில் (e) யிலுள்ள மூன்று வஸ்துக்களையும் தனித்தனி தூள்செய்து ஒன்றாகக்கலந்து மேற்படி எண்ணெயில் தூவி நன்றாகக் கலந்துவிடவேண்டும். இந்த மருந்துகளைச் சேர்த்தபின்பு சீக்கிரம் அடிபிடிக்கவும் அடிக்கடி பொங்கிவிழவும் ஏதுவாகுமாகையால், கைவிடாமல் துழாவிக்கொண்டிருக்கவேண்டும். பிறகு மெழுகுபதத்தில் இறக்கி இளஞ்சூட்டுடன் கம்பளியில் கட்டிகட்டி வடிகட்டிப் பீங்கான் ஜாடியில் விட்டுப்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-க-கஉ.

அநுபானம்:—இளநீர், பால், காப்பிபானம், தேபானம், சோம்புத்திராவகம், சோம்புக்கஷாயம், வெள்ளரி விதையை அரைத்துப்பிழிந்தபால், பருத்திவிதைப்பால் முதலியவைகளாம்.

உபயோகம்:—மேற்கண்டவற்றில் ஒன்றில் பிரமாணப்படி இந்த எண்ணெயை அநுபானித்து வியாதிக்

குத் தகுந்தபடி பனிரண்டுநாள், இருபத்து நான்குநாள் உட்கொள்ளவேண்டியது. ஆனால், தொடர்ச்சியாகச் சாப்பிடுவதைப்பார்க்கிலும் பனிரண்டுநாள் உட்கொண்டு இடையில் இரண்டுமூன்று வாரங்கள்விட்டு மறுமுறை சாப்பிடுவது உசிதம். வியாதிபலம் தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல வைத்தியர்கள் நாளை அதிகப்படுத்தியும் குறைத்தும் கொள்ளலாம். இவ்வாறு நிதானித்தருந்த, தலைவலி, சூலை, முடக்கு, வாயு, பிடரியிழுப்பு, இரணங்கள், வலிப்பு, வாதசன்னி, கைகாலுதறல், அரைகிண்டிப் புழு முதலியபுழுக்கள், பக்கப்பிடிப்பு, இசிவு, சிரங்கு, இடுப்புநோய், மேனித்தடிப்பு, பாரிசவாயு, பக்ஷவாதசன்னி, வாயுப்பிடிப்பு, திரிதோஷசன்னி, பதின்மூன்று வகைச்சன்னிகள், எட்டுவகைக்குன்மங்கள், படை முதலியபற்றுக்கள் முதலிய பலரோகங்கள் தீரும். வலிகளுக்கு இதனை மேலே தடவிச் சிரசிலும்தேய்த்து ஸ்நானஞ்செய்ய உடனே தீரும். இன்னும் இவ்வாறு செய்வதினால் மேற்கூறிய மற்ற வியாதிகளும் தீரும். உள்ளுக்குச் சாப்பிட்டுவரும்போதும் மற்றகாலங்களிலும் இதனைத்தேய்த்து ஸ்நானஞ்செய்யலாம்.

பத்தியம்:—இச்சாபத்தியம்; வியாதிபலம் தேகபலம் ஆகியவற்றிற்குத் தகுந்தபடி புளி, புகை, பெண் ஆகியவற்றை நீக்கியும் பத்தியமேற்படுத்தலாம்.

பஞ்சாக்ஷர மூலியெண்ணெய்
முறைவிளக்கம்
முற்றுப்பெற்றது.

---



## 177. சத்துருசங்கார எண்ணெய்.

### நொண்டிச்சிந்து.

தெந்தினத் தின தினனு—தினனு
தினனு தினதின தினதினனு.

1. அன்னைமரியைப்பணிந்து—சித்த
மன்புடன்வாழ்த்தித்துதித்திறைஞ்சி
மன்னுகின்றவுலகோர்க்கு—வருகின்ற
வன்பிணிகள்தீர்க்கவோரெண்ணெயைச்சொ[ல்வேன்
முன்னுமதன்பேரதைக்கேளும்—நல்ல
முதன்மையானசத்துருசங்காரமாம்
ஆன்றுதியாகவந்து—மிக்க
தூயவருள்புரிந்தோர்க்குரியவனும்

2. வீரியம்பெற்றுவிளங்கும்—இந்த
வீரமாமுனியென்றன்முறையிதுவே
சீரியரேகேளீர்—நல்ல
செம்முருக்குடனே செந்தொட்டியாமே
பேரியல்மேனியது—நன்றுப்
பேசிடுமணித்தக்காளியுடன்
ஓரிலைபிரட்டியுடன்—மிகவே
யுற்றசங்கங்குப்பிபொடுதலையும்

3. புரிகோழியவரை—விழுதி
புகன்றமுன்னையோடிண்டஞ்சாறு
சரியானவெள்ளறுகு—சீந்தில்
சார்ந்தகீழ்காய்நெல்லிவல்லாரை

பரிவெள்ளைக்காக்கணத்தி—காந்தை
பாங்கானவெண்குன்றிதலைசுருளி
துரிதமாச்சேர்த்துக்கொண்டு—இன்னமுஞ்
சொல்லுவேன்மனங்கொண்டுகேட்டிடுவீர்

4. பட்டிடாக்கருநொச்சி—மிகுந்த
பாங்கானவோரிதழ்த்தாமரையும்
வட்டமாம்பேய்மிரட்டி—பிர்ம
ராக்ஷஸ—செருப்படியின்வளச்சாறும்
அட்டதிக்கும்புகழ்துளசி—நல்ல
ஆகாசத்தாமரைநாய்வேளை
மட்டிலானையினெருஞ்சி—நல்ல
வளர்சிற்றாமுட்டியொடுமுடக்கொற்றான்

5. கவியாம்வறட்பூலா—வில்வங்
கையார்ந்தகரையோடிளலாத்தி
சுளியாஞ்சுடுதாரத்தி—சங்கு
தலைபழிஞ்சியுந்தைவேளையுமே
குளிர்சேர்சிறுகுறிஞ்சா—நன்மை
கொண்டமயிர்மாணிக்கமாதொண்டை
கிளிவிட்டுணுகிரந்தி—மிக்கதொரு
கேடில்லாக்கிரந்திநாயகமும்

6. வசைநீர்முசுமுசுக்கை—நல்ல
மலைதாங்கியுத்தாமணிபூவரசு
மசிவின்றமூலிகையா—மிவற்றில்
வகைக்குச்சாறுபடிகாலாவெடுத்து
இசைபவோர்பாண்டத்திட்டு—இனிமே
லேற்கவேபட்டைவகைசொல்லக்கேளும்
பசையாமுதியம்பட்டை—மிக்க
பண்பானவேம்புவெள் வேலம்பட்டை



7. மாவிலிங்கம்வாகைப்பட்டை—நாறுவொடு
வாகானவில்வம்விளாகரணை
கோவுறுநன்னாரி—காரமுள்ள
கொடிவேலிவேருமாவாரம்பட்டை
மேவியநிலவாகை—அதிலுள்ள
வேரிலந்தைப்பட்டையொடுநெல்லிப்பட்டை
தாவிலாக்கருவேற்பட்டை—வரையில்
சாற்றியபட்டைகளானவெல்லாம்

8. கூர்வகைக்கிருபலமாச்—சேர்த்துக்
கூடுகலத்திலிட்டுத்தூணிநீர்வார்த்துச்
சீர்பெறவேயெரித்து—மிக்க
சீக்கிரமாகவேயெட்டொன்றாக்கிப்
பேர்பெறவடித்துக்கொண்டே—இன்னமும்
பெருமையுடனேகேளுங்கடைச்சரக்கை
நேர்வெட்பாலையரிசி—அதனுட
னிகழ்த்துதிரிகடுகோடதிமதுரம்

9. அண்டுகின்றகருஞ்சீரகம்—நல்ல
வருளாங்கார்போகங்கஸ்தூரிமஞ்சள்
கொண்டாடுஞ்சீரகமும்—குணமிகு
கோஷ்டத்துடனேநல்வால்மிளகும்
தண்டாதபிராகணியும்—குளிர்ந்த
தாமரைவலையமானதுவும்
விண்டிடுமதிவிடயம்—ஒழுங்கா
மேவுகின்றவுபர்சிறுநாகப்பூவி

10. ஞேடுசுகமாமஞ்சள்—பெரியோ
ருரைதேவதாரங்குராசாணியுமே

ஆதிமக்கிராகார—மகிழ்கட்டை
யரத்தைபறங்குராவேர்சமூலம்
பிரசத்திச்சாரணைவேர்—தண்ணீர்விட்டான்
பேசுகின்றசாதிப்பத்திரிசங்கின்வேர்
கேடிலாச்சுண்டைவேரும்—வட்டக்
கொருடல்கிழங்கொடிசடாமாஞ்சில்

11. கருவேலமரப்பிசின்—வாசமுள்ள
கருவாப்பட்டையுடனேமாசிக்காய்
உருவாம்லவங்கப்பத்திரி—நல்ல
வேசமஞ்சாளிசப்பத்திரிகள்தமும்
இருவாளத்திக்கோலம்—நினைவொடு
தேடுகின்றசிறுநல்பட்டையுமே
மருவேப்பாடம்பட்டை—நீக்க
வளாஞ்சேர்ந்தமருதம்பட்டையுடனே

12 செங்கத்தாரிவேர்ப்பட்டை—விளங்கும்
திரிபலைபூநகரப்பால்பட்டை
மங்காதவெளிச்சிப்பிசின்—செவியம்
மருவியகூனகநீறுசெண்பகம்
தங்கிகொட்டாத்திப்பூ—குங்கிலியம்
தக்கவாலுளுவைவலம்புரிக்காய்
சிங்காரவெங்காரம்—கூறிய
திறமானவெள்ளைக்குங்கிலியமும்

13. தக்கோலங்குக்குமப்பூ—கலந்தான்
சார்ந்தவசுவாசியுந்தேர்ந்துகொள்வீர்
பக்குவமாவ்வைக்கு—இவற்றில்
பலமுறையாக்கொண்டுபறங்கிப்பட்டை



தக்கதோளரந்துபலந்—தன்னைத்
தவராதெடுத்திடுவீர்வளமாகவே
மிக்கதோர்புக்கிரைநூடால்—அதிலே
விளங்கவரைப்படியைப்பசிக்கெடுப்பீர்

14. வெண்காயச்சாறுபடியாம்—வளப்புடன்
விளங்குசெவ்விளநீர்படிதானொன்று
கண்பானபசுப்பால்படி—யொன்றோடு
நல்லாவாரம்பூச்சாறுமரப்படியாம்
பண்பாவேரண்டத்தென்னைப்—அவித்தூற்றிப்
பக்குவமாவடித்ததிலேந்துபடியாம்
என்பார்த்ததன்னுக்கஞ்சேர்த்தே—முறையா
யிப்பன்றவிவற்றில்சாக்கிடித்து

15. வெர்தானபட்டைகளை—முன்னே
விளம்பியபடியுடன்வடித்துக்கொண்டே
அந்தக்கஷாயத்தைக்கூம்—இதற்குமுன்
ஆதிசிற்கொரண்ணவுயர்சாறுகளுள
முந்தியபாண்டத்திட்டே—யென்னைப்
மொழிசாறுபால்கஷாயங்களையும்
சிந்தாமலுடன்சேர்த்தே—சுகமான
செவ்விளநீரையுமதிற்சொரிந்தே

16. கூறப்பட்டிதுவரையில்—சிறப்பாகக்
கூறியவும்ஞெறினுக்குவாருமற்கலந்து
ஆறுவகைக்குறைபோக்கும்—கடவு
ளாரதணைபுரிந்ததொழுது
பேறுதருமேசுமந்திர—வுருச்செபித்துப்
பேசுமாவாரைவிறகாற்றாலே

வீறுடனேதொடுத்தெரித்துச்-சட்டியடி
மேவிப்பிடிக்காமன்மெழுகாம்பதங்கண்டு

17. குறைவின்றியேயிறக்கி-வடித்துக்கொண்டு
கூறுகின்றதேவனையுஞ்சிந்தைநினைந்து
முறையாகத்தொழுதிறைஞ்சி-இங்கு
மொழிகின்றவேளைகளுக்கன்னமிட்டு
மறைசொலுங்கோதானம்-பூதானம்
வன்மையுடனேபுரிந்துநன்மைபெறவே
நிறைவானநாளறிந்து-அதைத்தா
னீருமனமண்டலந்தொட்டிடைகொள்வீர்

18. துஞ்சமேகமிருபத்தொன்றாய்-மிகவே
சுழல்கின்றநாற்பதுபித்தங்களுமே
மிஞ்சுவாதமெண்பதும்-சூலைகுஷ்டம்
மேகமொடுநீராதமுடக்கதுவும்
அஞ்சாதசோரியழிவு-மிக்க
வஸ்திப்புண்களுங்கிரந்திபரைக்கடியும்
வஞ்சகஞ்சேர்சிலந்திமுதல்-கேடெல்லாம்
வாதடைகண்புற்றுகளும்படுவன்களும்

19. வீறுகெடுநீரழிவும்-மிகவே
மிடிசெயும்வாயுமுதுப்பிளவைகளும்
மீறுதுடைவாழைகளும்-கன்னப்புற்று
கெட்டபோனிப்புற்றுலிங்கப்புற்றுகளும்
மீறுகின்றதோர்வெள்ளை-கேடு
மிகுபவுத்திரமூறல்மதுமேகம்
கூறாதந்துமேகமலடு-கிரந்திரணம்
கொடியமகோதரமும்பெருவயிறும்



20. அறைபாண்டுகாமாலை-சிரப்பிணிக
ளம்பகச்செவிநோய்சோகைபீனிசங்களும்
முறையுடனிதும்பிணிகள்-பலவுந்தீ
முன்னெதிர்ப்பட்டெரிந்ததோர்பஞ்சாகுமே
குறைபாதமதன்போலே-ஒளிமிகக்
கொண்டிடுமேதேகம்வச்சிரமாகும்
நிறையுளபத்தியந்தான்-இதற்குச்
சொல்காப்பான்பண்டமெலாம்புல்லொறுவே

21. உலகோரிதைப்பார்த்துக்-கஷ்டமென்று
லோகோகோமுடியாதெப்பலனுமில்லை
அலையாக்கருத்துடையோன்-இதனை
யஞ்சாமலேசெய்துபலனடைவான்
மலையென்றுமலைத்தாக்கால்-எச்செயலும்
வாய்க்காதுசந்தியஞ்சத்தியமறிவீர்
புலவாளர்க்கிந்தமுறை-தனையே
புகலாதேபவிக்காதுபுகன்றுவிட்டேன்

தெந்தினத்தினதினனா-தினனா,
தினனா. தின தின தின தினனா.

---

சந்திரசங்கார எண்ணெய்மூலம்
முற்றுப்பெற்றது.

## 177. சத்துருசங்கார எண்ணெய் முறைவிளக்கம்.

(a) செம்முருக்கு, செங்கொட்டி, குப்பைமேனி, பணித்தக்காளி, நரிமிரட்டி, சங்கங்குப்பி, பொடுதலை, கோழியாவாரை, விழுதி, முன்னை, இண்டு, வெள்ளறுகு, சிற்றில், கீழ்காய்நெல்லி, வல்லாரை, வெள்ளைக்காக்கட்டான், கொட்டைக்கரந்தை, அல்லது சிவகரந்தை: வெள்ளைக்குன்றிமணி, ஈசுரமூலி, கருநொச்சி, ஓரிதழ்த்தாமரை, பேய்மிரட்டி, பிரமதண்டி, சிறுசெருப்படி, துளசி, ஆகாசத்தாமரை, (இதனைப் பிட்டவித்து இரசமெடுத்துக்கொள்ளவும்.) நாய்வேளை, யானைநெருஞ்சி, சிற்றாமுட்டி, முடக்கொற்றான், வறட்பூலா, வில்வம், கையாந்தகரை, ஊலாந்தி, சுடுதாத்தி, சங்கிலை, ஏறழிஞ்சில், இறங்கழிஞ்சில், தைவேளை, சிறுகுறிஞ்சா, மயிர்மாணிக்கம், ஆதொண்டை, கிளிமூக்குக்கிழங்கு, விஷ்ணுகிரந்தி, கிரந்திநாயகம், முசுமுசுக்கை, மலைதாங்கி, உத்தாமணி, பூவரசு, ஆகிய இவற்றின் இலைச்சாறு வகை-க-க்குப் படி-வ.

(b) உதியம்பட்டை, காட்சென்றுவேப்பம்பட்டை, வெள்வேலம்பட்டை, மாவிலிங்கப்பட்டை, வாகைப்பட்டை, துணுப்பட்டை, வில்வப்பட்டை, மிளகரணைவேர்ப்பட்டை, நன்னாரிவேர்ப்பட்டை, கொடிவேலிவேர்ப்பட்டை, ஆவாரம்பட்டை, நிலவாகைவேர்ப்பட்டை, இலந்தைப்பட்டை, நெல்லிப்பட்டை, கருவேலம்பட்டை இவை வகை-க-க்குப் பலம்-உ. இவற்றை நன்றாகச்சிதைத்துப் பதினாறுபடி ஜலத்திற்போட்டு இருபத்துநா



ன்குமணிநேரம் ஊறவைத்து அடுப்பேற்றி இரண்டுபடியாகச் சுண்டவைத்து இறக்கி இளஞ்சூட்டுடன் பிசைந்துபிழிந்து வடிகட்டித் திப்பிநீக்கிக் கஷாயத்தை எடுத்துக்கொள்ளவும்.

(c) வெட்பாலையரிசி, மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, அதிமதுரம், கருஞ்சீரகம், கார்போகரிசி, கஸ்தூரிமஞ்சள், நற்சீரகம், கோஷ்டம், வால்மிளகு, கடுகுரோகணி, தாமரைவளையம், அதிவிடயம், சிறுநாகப்பூ, மரமஞ்சள், தேவதாரம், குராசாணி ஓமம், அக்கிராகாரம், அகிற்கட்டை, சன்னராஷ்டம், அமுக்கிராக்கிழங்கு, சத்திச்சாரணைக்கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, சாதிப்பத்திரி, சங்கம்வேர், சுண்டைவேர், ஆகாசக்கெருடன்கிழங்கு, சடாமாஞ்சில், கருவேலம்பிசின், கருவாப்பட்டை, மாசிக்காய், இலவங்கப்பத்திரி, ஓமம், தாளிசப்பத்திரி, கல்மதம், பிஞ்சுக்கடுக்காய், கிளியூறல்பட்டை; வெப்பாலம்பட்டை; மருதம்பட்டை, செங்கத்தாரிவேர்ப்பட்டை, வாய்விளங்கம், மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, பூதகரப்பான்பட்டை, வெளிச்சிப்பிசின், கூகைநீறு, செவியம், செண்பகப்பூ, காட்டாத்திப்பூ, மைசாக்ஷி, வாலுளுவையரிசி, வலம்புரிக்காய், பொரித்தவெண்காரம், வெள்ளைக்குங்கிலியம், தக்கோலம், குங்குமப்பூ, வசுவாசி இவை வகை-க-க்குப் பலம்-உ, பறங்கிப்பட்டை பலம்-ரு. இவற்றுள் இடிக்கவேண்டியவைகளை யிடித்துச் சூரணித்தும், அரைக்கவேண்டியவைகளை அரைத்தும் ஒன்றாகக்கலந்து பசுவின் பாலைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய்போலரைத்து வைத்துக்கொள்ளவேண்டியது.

(d) புங்கம்பால், ஆவாரம்பூச்சாறு இவை வகைக்குப் படி-௨, வெங்காயச்சாறு படி-௪, செவ்விளநீர் படி-௧, பசுவின்பால் படி-௧, சிற்றாமணக்கெண்ணெய் படி-௫.

செய்முறை:—(d) யிலுள்ள எண்ணெயைப் பழகின பாத்திரத்தில் விட்டு அதிலுள்ள மற்றதிரவங்களையும் ஒன்றாகக்கலந்து சேர்த்து (a) யிலுள்ள சாறுவகைகள், (b) யிலுள்ள கஷாயம் ஆகியவைகளையும் ஒன்றாகக்கலந்து அதில் ஊற்றியப்பின்பு (c) யிலுள்ள கற்கத்தை அதிற்கரைத்துத் தான் வழிபடும்படவுனைத் தொழுது அடுப்பின்மீதேற்றி ஆவாரைவிறகால் கமலாக்கினியாக எரித்து மெழுகுபதத்தில் இறக்கி இளஞ்சூட்டுடன் கம்பளியில் வடிகட்டிப் பீங்கான்ஜாடியிற்பத்திரப்படுத்தவும்.

இதனை உட்கொள்ளும்போது அவரவர்கள் சக்திக்குத் தகுந்தபடி ஏழைகளுக்குச் சாப்பாடு முதலிய தானதருமங்களைச்செய்து ஆரம்பிக்கவேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-௧-௧௨.

அனுபானம்:—இளநீர், சோம்புத்திராவகம், சுக்குக்கஷாயம், காப்பிபானம், தேபானம் முதலியவைகளாம்.

உபயோகம்:—இருபத்தொருவகை மேகங்கள், நாற்பதுவகைப்பித்தங்கள், எண்பதுவகை வாதங்கள், குலை, குஷ்டம், பிரமேகவகைகள், கால்கைமுடக்குகள், இரத்தப்போக்கு, அஸ்திப்புண்கள், கிரந்தி, அரைகடி, சிலந்திவகைகள், கண்புற்று, பவுத்திரம், நீரிழிவு, வாயுவகைகள்; இராஜபிளவைகள்; துடைவாழை; கன்னப்புற்று; யோனிப்புற்று; இலிங்கப்புற்று; வெள்ளைமே



கவொழுக்கு; பவுத்திரம்; ஊறல்; மதுமேகம்; தந்துமேகம்; மலடு; கிரந்திப்புண்கள்; மகோதரம்; பெருவயிறு; பாண்டு; காமாலை; சிரசைப்பற்றிய நோய்கள்; கண்ணைப்பற்றிய நோய்கள்; காதைப்பற்றிய நோய்கள்; சோகை; பீனிசங்கள் ஆகியபல நோய்கள்தீரும். இரத்தவிருத்தி முதலியவையுண்டாகித் தேகம் பலத்து வச்சிரகாயமாகும்; மன்மதனைப்போல் அழகுண்டாகும்.

## குறிப்பு.

இது பார்வைக்கு மிகுந்த கஷ்டமாகத்தோற்றும்; ஆயினும், சிறிது பிரயாசைப்பட்டு இதனை மேலக்காது செய்து முடித்துக்கொண்டால் எல்லாவியாதிகளுக்கும் உபயோகித்துச் சௌக்கியப்படுத்தி உலகத்தில் மிக்க கீர்த்தியைப்பெறலாம். சகல வியாதிகளுக்கும் இந்த எண்ணெயொன்றேபோதும். கஷ்டத்திற்குத்தகுந்த பலன்கிடைக்கும்; முறையைப்பார்த்தவுடன் மலைப்பவர்களுக்கு ஒன்றும் கைகூடாது. ஆதலால், இதனைப்படிக்கும் ஒவ்வொருவரும் தைரியத்தை விடாமல் இதனைச்செய்து முடித்துக் குடும்ப அவுடதமாக உபயோகித்து நன்மையடையும்படி விரும்புகிறோம்.

---

சத்துருசங்கார எண்ணெய்
முறைவிளக்கம் முற்றுப்பெற்றது.

## 178. வீரமெழுகு.

பதினொன்குசீர் விருத்தம்.

ஆரணத்தின் முனிமேவாறுரைத்தபெரு
காணைசைப்புகல்வேன் கேளுமே
யகிலமீதருடிகொண்டவீரமுட
னாகபூரலிங்கயானனும்
பூரணத்திறெனுங்கூட்டுகால்வனை
புகழ்சிரகணிறைரசன்றகொன்
புனிதமானதிரிகந்திலேககலவை
புகன்முக்காலேனுநற்பலமதாம்
காரணத்தினிகாரமேயமைக
காண்சிராகணியையாளமுங்
கண்டிரன்டெனவேகொண்டெலாவணகயுங்
கல்வமீதிலுறவைத்தியே
தாரணத்திலெனுநீரைவிட்டிநறு
தாரமானவெழுதாகவே
தாசியேயரைநுமைகடப்பிலவில்
தருதியேவலையுமெனச்சொல்வேன். (௧)

கன்றுகேளுமுயர்பண்டிதப்பெயர்கொள்
கண்டமேகுடைவுருவேல்கள்
கவிலடிப்பிடிபுரிறுநிகிரந்தியினை
காசமாருய்வகையாதெனில்
உண்டுபாருமிருகுன்றிபோலவிதி
லோக்கிநம்பனெவெலத்திலே
யொப்பியேயெழுதினைத்திரண்டுமுறை
யோடுமேயவைகளிபாவுமே



கொண்டநீருளமகோதரங்களற
கொடுமைநீரவுயர்கரையிலே
கோதிலாப்பழையமிட்டநீர்முனி
குலாயகண்டமுறுகத்திரி
விண்டவெதிபின்முள்ளிசுக்குடனே
மேவுகின்றகடுக்காயுமே
மேன்மையாகியயோழமிட்டதில்
விளங்குகுன்றிஎடைமெழுகுசான். (௨)

இடைவிடாமலெழுதினமருந்திவிட
வேகுமேகொடியபிணியற
மென்றுமேமுனிவர்கண்டவீரமெழு
கிதனையைந்தரோகிபெரியர்க்குத்
தடையிலாமலிடவாமிடச்சுழல்செய்
தக்கபேதியதுமீறினல்
தஞ்சமானசுக்கஞ்சிகோடுறு
தாவுமாவிளைய்புகுத்தியே
அடைவதாகவிடகின்றநிம்மியினமு
மறையுமாமொழியறிந்திடு
மமையுநல்லவனுமானவர்க்கமிட
வகலுமேயனவில்பிணிகளும்
உடைமைபாகவிதிஒற்றபத்தியமு
மோதுவேனுயர்வொரடது
முன்னாகத்திரிதுவனையுமாமேனெபெரி
யுள்ளிப்புங்கடுகுநள்ளுமே. (௩)

வீரமெழுகுமூலம்.

முற்றுப்பெற்றது.

## 178. வீரமெழுகின் முறைவிளக்கம்.

சுத்திசெய்தவீரம், சுத்திசெய்தகெந்தகம், சுத்திசெய்தஇரசகற்பூரம், சுத்திசெய்தஜாதிலிங்கம் இவைவகை-க-க்கு வராகனெடை-௨, மேல்தோல் சீவினசுக்குச்சூரணம், மிளகுச்சூரணம், அரிசித்திப்பிலிச் சூரணம் இவைவகை-க-க்கு வராகனெடை-௨௰, சுத்திசெய்ததாளகம் வராகனெடை-௰, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு வராகனெடை-௨, தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—வாளம் தவிரமற்ற எல்லாச்சரக்குகளையும் தனித்தனி பொடித்து ஒன்றாகச்சேர்த்து ஒரு மணிநேரமரைத்துத்தனியேஎடுத்துவைத்துக்கொள்க. வாளத்தைக்கல்வத்திலிட்டு வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற தூளையும் சிறுகச்சிறுகச் சேர்த்து ஒருமணிநேர மரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு தேனைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்து மெழுகுபதத்தில் எருமைக்கொம்புச்சிமிழில் அல்லது பீங்கான்சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-ஒ-௩-க௫-௨.

அனுபானமும், உபயோகமும்:— பனைவெல்லத்தில் இருவேளையும் ஏழுநாள் இதனை அனுபானித்துக் கொண்டால் குடைச்சல், சூலை, கால்பிடிப்பு, கால்முடக்கு; புண்கள்; கிரந்திகள் ஆகியநோய்கள் தீரும்.

கரையிலை; பழங்கிட்டம்; நீர்முள்ளி; கண்டங்கத்திரி; பார்ப்பாரமுள்ளி; மேற்றோல்சீவினசுக்கு; மஞ்சட்கடுக்காய்த்தோல் இவைவகைக்குப்பலம்-௫. இவைகளையெல்லாம் சிதைத்து ஒரு பாண்டத்திற்போட்டு எட்டுப்படி ஜலத்தைவிட்டு இரண்டுபடியாகச் சுண்டவைத்து அதில் வேளையொன்றுக்கு ஆழாக்குவீதம் எடுத்து மேற்படி மெழுக்கைப்பிரமாணப்படி அதனுடன் அனுபானித்து ஏழுநாள் உட்கொள்ள மகோதரம்; நீராம்பல்; கவுசை; பெருவயிறு முதலியரோகங்கள்தீரும்.



இன்னும்தக்க அனுபான விசேஷங்களிலிட்டபல ரோகங்களும் தீரும். இதனைப்பாலர் விருத்தர்முதலிய எல்லோருக்கும் பேதமின்றி உபயோகிக்கலாம்.

பத்தியம்:—வெள்ளாட்டிறைச்சி; கத்திரிப்பிஞ்சு; அவரைப்பருப்பு ஆகியவைகளாகும். நல்லெண்ணெய்; கடுகு; பூண்டு முதலியவை ஆகா.

இதனால் சிலருக்குப்பேதி அதிகமாகக்கூடும். அப்படியானால் சுடுகஞ்சி நீரில் பசுவினெய்யைக்கலந்து கொடுத்தால் அப்பேதி நின்றுவிடும்.

வீரமெழுகின் முறைவிளக்கம்.
முற்றுப்பெற்றது.

கடவுள் துணை.

இராஜரிஷி

விரமாமுனி மகானுபாவர்

திருவாய்மலர்ந்தருளிய

## 179 மப்பூரு ஸ்திரம்.

கொச்சகக்கலிப்பா.

அதிப்பிரகாசகனா ஞானாக்கிரகயான திறைல்
வாதமதைப்பிப்புவியில்வழிமுறையாப் பாடிதற்குச்
சோதிபெறாதபிரான்றாய்பகுலமாமரியின்
௪ நீதிபெறப்பாதுகித்தமருள்தரவே.

நொண்டிச்சிந்து.

தெந்தினத்தின தினனா — தினனா
தினனாதின தினத்தின தினனா

1. என்றனுடன் வாழ்ந்த — திவ்ய
வெள்ளிருஞானவறிவேயிகள்
இந்தப்புவிமிசையில் — வாழும்
எண்ணிறந்தபுவிமன்னரெலாம்
சிந்தைதடுமாறி — வாதம்
செய்தலைந்தேவீணாய்வாடுகிறார்
விந்தையுடன்வாதம் — புவியில்
மிகவுண்டோவில்லையோவென்றவர்க்கே.

2. உரைப்பேன்தெளிவுடனே — யதனை
யுவந்துகேட்டிடிலேபஞ்சிறிதுமில்லை
விருப்பமாய்க்கேட்டிடுவாய் — அந்த
விற்பனயானதைக்கற்றோர்பெரியவராம்
தரையினில்வாதவித்தை — கடினமே
சாற்றியபடியறிந்தால்சூட்சம்விளங்கும்



திரைசூழுலகமதில் — உண்மை
தெரிந்தபின்னைத்தொழிலுமெளிதாகும்

3. பகருமென்வார்த்தையுண்மை — ஞான
பக்குவத்தைக்கண்டறிந்துநீயறிவை
ஜெகத்தில்வெகுகோடி — சீமான்கள்
செய்துமேயில்லையென்றார்வாதமிதை
பகுத்துவஞானநிலைவன் — கொஞ்சம்
வாய்திறந்தேனுனக்கேபகர
இகத்தில்தழைபூண்டில் — செம்பு
மினமரியப்பொன்னிரும்புவண்டெனிலும்

4. சொல்லுமித்தழைபூண்டை — நீயும்
சடசிட்டெரித்துமேவாடாதே
வல்லவறிவுபோகும் — அதனால்
வயதுகுறைந்திடுமேகாகடினம்
புல்லுமுபகாரிபத்தைக் — கண்டு
புனிதன்பதமதைத்தானினைத்து
மெல்லவேயுப்பைப்பண்ணி — நீயும்
விட்டிடுவாசையைப்பொட்டெனவே

5. விட்டுமனந்தெளிவாய் — அந்த
வித்தையைச்சற்றேவிளம்பிடுவேன்
மட்டிப்பயல்களெலாம் — இந்த
வையகந்தன்னிலேயில்லையென்று
கெட்டேயலைகின்றார் — பானுவும்
கேட்டுவெகுகாலமாயிருந்தேன்
பட்டப்பகல்போல — இனியான்
பகரும்விபரமதைப்பார்த்தறிவாய்

6. சேர்வறிந்துகொண்டே — வேத
நெறிபத்துப்படியேநடந்துவந்தால்
காரணந்தான்தெரியும் — அந்தக்
காதலுடையோர்க்குத்தான்பலிபர

காரமதுசாரம்—இந்தக்
காசினிதன்னிலேமெத்தவுண்டு
பாருநீயவைதெரிந்தால்—நல்ல
பத்தமைமாற்றப்பதம்பெறுவாய்

7. பெற்றிடுபேய்மனமே—யானும்
பேசுகிறேனுனக்கேதெரிந்தே
உற்றிடுஞானியர்கள்—அந்த
வுண்மைதெளியவேயுரைக்காமல்
கற்றிடமறைவாகவே—கதைகளைக்
கட்டிவைத்தாரேமிகுசற்றும்படி
சொற்றதோர்வழலையென்றும்—நல்ல
தோகையாள்பெற்றபிண்டமென்றும்

8. காரிரவிகோசமென்றுஞ்—சொல்வார்
காரமெனும்வகையுள்ளதுக்குக்
கூரவேகருவைவைத்து—அஞ்ஞானக்
கோளர்கள்சொல்வதுபோலில்லாமல்
சீருடனேயுரைப்பேன்—உலகத்தில்
செய்தியுனக்குத்தெளிந்தேபாரினை
சேருடனே துதித்து—முக்தி
நிலைபானவழிக்குமேநீவருவாய்.

9. வருவாய்காரமதைப்—பொல்லா
மங்கையர்நாதசுரோணிதமென்றும்
புரிபூநீகாரமென்றும்—நல்ல
பொற்றலைக்கையானெருக்கெனவும்
முரிபடிங்காரமென்றும்—நல்ல
மும்முலையானபிரண்டையென்றும்
வருமவியாநெருப்பென்றும்—நல்ல
வளமானநீர்மேனெருப்பெனவும்.

10. இனமாய்வுரைத்தனரே—அவையெல்லா
மெத்தகள்கேட்டலைந்தேவிடுத்தேன்



கனமானகாரமது—தானே
கண்டுகொள்மற்றொன்றுவிண்டிடுவேன்
தனியானபூநீருப்பா—மீது
தானல்லால்வேறேயுங்காரமுண்டோ
நினைவாகச்சொல்லிவிட்டேன்—இது
நிச்சயம்நிச்சயமலையாதே.

11. மலையாவதைபொடித்து—நல்ல
வாரியினீர்விட்டதைக்கலக்கிக்
குலையாத்தெளிவிறுத்து—நன்றாய்க்
கோணாமற்பிங்கான்றனிலூற்றிச்
சலியாமற்காய்ந்தபின்பு—உப்பைச்
சமையாநல்வத்திலேமூட்டிக்
கலையாதவெண்காரம்—நல்ல
காசினியில்சிறுக்காரமுடன்.

12. உடனுணவீரமுடன்—அதில்
ஊட்டிச்சமனைடைவில்லைதட்டித்
திடமானபத்தெருவில்—சேர்ந்திடு
தீயிட்டேயாறியபின்னெடுத்திடுவாய்
படமாமிதுகாரம்—கையில்
பட்டாலும்வெந்துபரிவுமிகும்
அடாரவென்னிதுமு—மிதற்கெதி
ராகாதிங்காகாதுயாதுணரைத்தேன்

13. கதிசேர்திருவள்ளுவர்—ஆண்டுவந்த
கைம்முறையென்றுங்காரமிதே
இவ்வரையறியா—காரமிதை
யிப்போதுகண்டுநீதேர்ந்துகொண்டாய்
பதியானசாரமென்றும்—இவ்வ
பாலசரக்கினையுமாராய்ந்து
விதிமுறைதப்பாமல்—பாரும்
விள்ளும்வகையினைநீயறிந்துகொள்வாய்.

14. தேசிகன்பதந்தெரிந்து—வாதம்
செய்யவுரைத்திடுவேன்—சாரமதை
தேடியென்றுமறவென்றும்—சுவையுள
தேனென்றும்பாலென்றுஞ்செப்புகின்ற
சோனைவெண்சாரையென்றும்—நல்விய
சோமனென்றும்மருள்வாமனென்றும்
காறுகங்கைகடலெனவும்—நல்ல
கருநெல்லிவெண்கம்பியுப்பெனவும்

15. பேணிப்போனந்தஞ்சொல்வார்—அவைபல்ல
பெருமையுடனறிவாய்சிறுநீர்தானே
தானிதைப்பசனையென்றும்—பெரியோர்
சாற்றுவார்மெத்தவுஞ்சாத்திரத்தில்
மானம்விட்டுமயங்காதே—இதை
வன்னியில்விட்டுவதக்காமல்
காலுகின்றரவிதனிலே—காட்டிக்
காய்ச்சியேயுப்பைக்கரித்தெடுத்து

16. பதிமுபர்கல்வத்திட்டு—அதில்
பாய்ச்சும்நவாச்சாரம்பூரமுடன்
உடனேயமுரிவிட்டு—நன்று
பொப்பியரைத்துமேவில்லைதட்டி
முடிவானமூவஞ்சாம்—நல்ல
முட்டைபெருவினிமேலபுடம்போட்டுத்
திடமென்றுநீயெடுத்து—முன்பு
செப்பியகாரமிந்தச்சாரமுடன்

17. நடையிசகாதெடுத்து—அந்த
இந்திரன்சந்திரன்அண்டநீரால்
அடைவாமெழுகுபதம்—அது
ஆனவுடனேயனல்தருவாய்
தடையின்றியிதற்குரைத்த—அண்டநீரின்
தன்மைதனையாராய்ந்துவிபரஞ்சொல்வேன்
கடையருக்குரையாதே—அதினுடைய
கருத்தையறிந்துநீமனதடக்கு



18. ஈரவாருதியுலகில்—அதைபே
யெடுத்துரைப்பார்வெகுவகைப்படவே
சாரமொடுகாரம்—யான்
தயவுடனேயுரைத்தேனதுபோல
பேருறுமண்டநீரின்—வகைதனைப்
பேசிடவிளக்கமாய்பறிந்துகொள்வாய்
நிசமாயிதனுண்மையை—நிச்சயமாத்
தெரிந்திடார்மிகுந்திடபண்டிதரென்பார்

அண்டநீர்.

19. வஸ்தானசுத்தஜலம்—வெகு
மானமென்றுமுயர்சோனமென்றும்
வித்தான்வப்பெனவும்—அதனை
விண்ணிலிருக்குமுப்பெனவும்
சத்தியமாமொழிவார்—அந்தச்
சண்டாளர்சொல்லைநம்பாதே
அப்பானவுப்புமயம்—அது
ஆனபனிநீரேயென்றறிவாய்.

20. செப்பியமுன்மருந்தில்—இதைவிட்டுச்
சிராயரைத்துமேவில்லைதட்டி
இப்பாகம்பத்தெருவில்—நன்று
விரைந்துபுடமிட்டாலுப்பாகுமே
தப்பாதேயிந்தமுறை—செய்யில்
[illegible]சானியப்பத்தரைதப்பாது
தப்[illegible]சரக்குக்கேளு—பொல்லாத்
து[illegible]பானநீருள்ளலோகமெல்லாம்.

21. அப்பாலிதிலடங்கும்—இதனை
யகிலத்தெவர்செய்துமுடிப்பாரே
மெய்ப்பானமனமேகேள்—இதைநீ
விட்டகலாதேயிருத்துப்புரவாச்
செப்புப்பிதாசுதனை—நீயும்
தேடியடைந்துமேமனமகிழ்வாய்

முப்பென்னுமிப்பொருளைப்—புவியில்
மூட்டிச்செய்துமுடித்துவந்திடுவாய்

22. கண்டிடுகனகமயம்—உலகத்தில்
கலியாணதைநீக்கிக்கதியடைவாய்
செய்டன் முப்பானதுவே—பொன்னின்
விருப்பினையொழித்தொன்றைநாடிடுவாய்.
மண்டலத்திற்செடிபூண்டை—நீயும்
மாட்டியிடித்துமேமயங்கிடாதே
கொண்டவிப்பொருள்நாடி—இனிமேல்
குருவருளைத்தேடிநீயநிப்பாய்

புத்திகூறல்.

23. நடப்பாயிதன்படியே—மனமே
நாட்டினிற்கெட்டமடையருண்டு
பட்டத்தனமாயுரைப்பார்—அந்த
மதியிலாரிடத்துநீசேராதே
அநிப்பாய்கிறிஸ்துதுணை—நீயு
மாராய்ந்தவர்பதத்தைமறவாதே
தொடுப்பாய்பொருளுரைக்க—நல்ல
துப்பகுலத்தினதுதுறையறிவாய்

24. பாவியர்க்காகவந்து—நல்ல
பார்புகழ்தாவீதுகோத்திரத்தில்
மேவிமரியிடமாய்—வந்து
விருப்பத்துடனேபிறந்தேவளர்ந்து
காவல்புரிந்தவராம்—அவர்தமைக்
கருத்திலிருத்தினால்குறையொன்றில்லை
தாவில்லாமுத்திகொடுப்பார்—தரும
சாஸ்திரத்துண்மையெலாம்விளக்கிடவே

25. பாவங்கள்தீர்ந்திடவே—புலகத்தில்
பாவியர்தமக்குமன்றுடிதம்



யேவிப்பிதாவினிடம்—நல்ல
விதஞ்செப்புமன்னிப்புக்கேட்டருளும்
ஆவல்மிகுந்துவிளங்கும்—ஏசுவா
மந்தவற்புதரைநம்பினோர்க்குந்
தாவிடும்பாவமில்லை—பிணியிலை
சஞ்சலங்களில்லையென்றுஞ்சுகமாமே
தெந்தினத் தின தினனா—தினனா
தினனாத் தினதினத்தின தினனா

179 முப்பூகுஸ்திரமூலம்
முற்றுப்பெற்றது.

---

## முப்பூ சூஸ்திரத்தின்

## முறைவிளக்கம்.

முப்பூவானது காரம், சாரம், அண்டநீர் என்னும் மூன்றின் சம்பந்தத்தினால் செய்யக்கூடியதென்பது இவர் கருத்து. ஆனால், பலர் பலவிதமாக இதைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள்வழியைநாம் பின்தொடராமல் இவர் வழியைத்தொடர்ந்து இப்பாடலிலுள்ளபடி இம்முறையை எழுதுகிறோம். இவர் முறையானது மறைபொருளாயில்லாமல் வெளிப்படையாகவும் அதிக நீண்டமுறையாயில்லாமல் சுருக்கமாகவும், அ[illegible]ம் யுக்தி புத்தி சாஸ்திரம் முதலியவற்றிற்கு ஒத்ததாகவுமிருக்கிறது. ஆனால், இதில் செய்பாகமானது, செய்யுளானபடியால்சுருக்கமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், நமது புத்திக்கு எட்டினவரையில் சற்று விபரமாக இதனை எழுதுகிறோம். இதைப்பற்றி அதிகமாகத் தெரிந்தவர்கள் ஜீவகாருண்யத்துடனும், பரோபகாரச்சிந்தையுடனும் தங்களுக்குஇதைப்பற்றித் தெரிந்திருக்கும் விஷயங்களை எழுதும்படி ம

கவும் வணக்கமாகக் கேட்டுக்கொள்கிறோம். இதனைச் செய்து இதன் குணாகுணங்களைத் தம் அநுபவத்தால் நிச்சயிக்கும் புண்ணியவான்களும் மேற்கண்டபடியே ஜீவகாருண்ணியத்துடன் பலருக்கும் உபயோகமாகும்படி தம் அநுபவத்தை எழுதனுப்பும்படிக்கும் கேட்டுக் கொள்கிறோம். அப்படியெழுதித் தெரியப்படுத்தும் கண்ணியவான்களின் நாமத்துடன் நமது சுகாதாரபோதினிப்பத்திரிகை மூலமாகவோ அல்லது வேறு புத்தகங்களின் மூலமாகவே அவர்களால் எழுதப்படும் விஷயங்களை வெளிப்படுத்துவோம்.

காரம்.

பூநீறு படி-க, கடல்நீர் படி-உ. இவ்விரண்டையும் ஒருபாத்திரத்தில் சேர்த்து நன்றாகக்கலக்கி மூன்றுநாள் ஊறவைக்கவேண்டும். ஒவ்வொருநாளும் இரண்டு மூன்றுதடவை கலக்கியும் வரவேண்டும்; நான்காம்நாள் தெளிவையிறுத்து வெயிலில்வைத்துலர்த்தி உப்பாக்கிக்கொள்ளவேண்டும். இந்த உப்பை அளந்து முன்போல் இரண்டுபங்கு ஜலத்தைவிட்டுக் கலக்கிமுன்போல் மூன்றுநாள்வைத்து முன்போற்கலக்கி நான்காம்நாள் தெளிவையிறுத்து வெயிலில் வைத்துலர்த்தி உப்பாக்கிக்கொள்ளவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப்பத்துதடவை தீக்ஷைசெய்த உப்பு பலம்-க, மேற்கண்டவாறே பத்து தீக்ஷைசெய்த சீனக்காரம் பலம்-க, இவ்வாறே பத்துதீக்ஷை செய்தவெண்காரம் பலம்-க, தேவையான வீரத்தைக் கல்வத்திலிட்டுக் கடலஜலத்தைச் சிறுகச் சிறுகவார்த்து உ-சாம நேரமரைத்துலர்த்திப் பாகப்படி பத்துமுறை பதங்கித்தவீரப் பதங்கம் பலம்-க. இவற்றைக்கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி கடல் நீரைச் சிறுகச்சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்து வில்லைதட்டி உலர்த்தி அகலில் வைத்து மேலகல்மூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்திப் பத்துக்காட்டெருவில் புடமிட்டு ஆறினபின் எடுத்துவைத்துக்



கொள்ளவும். இவ்விதஞ்செய்யப்பட்டதே இங்குக்காரமெனச் சொல்லப்படுகிறது.

சாரம்.

பனிரண்டு வயதிற்குட்பட்ட சிறுவர்களின் நீரைப்பிடித்து வெயிலில் வைத்துலர்த்த உப்பாகிவிடும். இந்த உப்பு ஒருபங்கு, முன்போல் சேகரித்த சிறுநீர் இரண்டுபங்கு. இதில் மேற்படி உப்பைப்பொடித்துப் போட்டு மூன்றுநாள் கலக்கிவைத்து நான்காநாள் தெளிவையிறுத்து வெயிலில்வைத்து உப்பாக்கிக்கொள்ளவேண்டும். இவ்விதம் தீக்ஷைசெய்த உப்பு பலம்-க, கடல்நீரில் பத்துத்தடவை தீக்ஷைசெய்தநவச்சாரம் பலம்-க, இரசகற்பூரத்தைக் கல்வத்திலிட்டுப்பொடித்துச் சிறுநீரைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்துப் பாகப்படி பத்துமுறைப் பதங்கித்தெடுத்த பதங்கம் பலம்-க. இவைகளைக்கல்வத்திலிட்டுச் சிறுபிள்ளைகளின் நீரைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்துப் பில்லைசெய்து உலர்த்தி அகலில்வைத்து மேலகல்மூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்திப் பதினைந்து காட்டெருவில் புடமிட்டு ஆறினபின்னெடுத்துக்கொள்ளவும். இதுவே சாரமாம்.

முப்பு செய்முறை:—மேற்படி காரம் பங்கு-க, மேற்படி சாரம் பங்கு-க. இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு அண்டநீரென்னும் பனிஜலத்தைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்து வில்லைசெய்துலர்த்தி அகலில்வைத்து மேலகல்மூடி எழுசீலைமண்செய்துலர்த்திப் பத்துக்காட்டெருவில் புடமிட்டாறினபின் எடுக்க எல்லாம் உப்பாயிருக்கும். இதனைத்தான் இவர் முப்புவென்று சொல்கின்றார். அநுபவசாலிகள் இதன் சிறப்பை அநுபவத்தால் நிச்சயித்தறிந்துகொள்வார்களாக.

## குறிப்பு.

இம்முறையில் சொல்லுகிற வீரப்பதங்கத்திற்குப் பூரப்பதங்கத்திற்கும் பதிலாக நமது அநுபோகவைத்திய நவநீதம் நான்காம்பாகம் 222-ஆம்பக்கமுதற் சொல்லப்பட்டிருக்கும் வீரப் பதங்கங்களில் ஒருவகையையும், ஷை புத்தகம் 170-ஆம் பக்கத்திற் சொல்லப்பட்டிருக்கிற பூரப்பதங்கத்தையும் சேர்த்துக்கொள்ளலாம்.

## விண்ணப்பம்.

மேற்படிபாகமானது நமது அநுபவத்தை ஒட்டியும் அரியநிகேதருட் சிலரின் அநுபவத்தை ஒட்டியும் எழுதப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபணையுள்ளவர்கள், மூலத்திலுள்ளபடியும், இங்குச் சொல்லப்பட்டிருக்கிற பாகப்படியும் செய்து எது சரியாய் வருகிறதென்பதை நிச்சயித்து உண்மையை உணர்ந்துகொள்வார்களாக.

முப்பூகுஸ்திர முறைவிளக்கம்
முற்றுப்பெற்றது.

---

## விஞ்ஞாபனம்.

கனவான்களே! கடவுள் கிருபையாலும் பெரியோர்களின் அனுக்கிரகத்தாலும், பலபேர்களின் உதவியாலும் வீரமாமுனி வாகடத்திரட்டின் இரண்டாம்பாகமாகிய இப்புத்தகம் பூர்த்திபெற்றது. பலகனவான்கள் தங்கள் தங்களிடமிருந்த சில்லறை நூல்களை அனுப்பி உபகரித்ததே இது வெளியாவதற்குப் பெருங்காரணமாயிற்று. ஆதலின், இன்னும் வீரமாமுனிவருடைய நூல்களை வைத்திருக்கும் நண்பர்கள் நமக்கனுப்பினால் அவைகளை இதன் மூன்றாம்பாகமாக வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறோம். சுபம்! சுபம்!! சுபம்!!!

வீரமாமுனி வாகடத்திரட்டு.
இரண்டாம்பாகம்
முற்றுப்பெற்றது.

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,**
**எழும்பூர், சென்னை-600 008.**

## தவணைத்தாள்.

**சே எண் :** **ப. எண் :**

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F 259A-6—1,00,000—30-1-84.